தஞ்சை ஸரஸ்வதிமஹால் வெளியீடு நெ. 71.

# சரபேந்திர வைத்ய முறைகள்

(க்ஷயரோக, உளமாந்தை ரோக சிகித்ஸை)

★

பதிப்பாசிரியர் :

தஞ்சை ஸரஸ்வதி மஹால் ஆயுர்வேத பண்டிதர்,

**ஸ்ரீ Dr. S. வெங்கட்டராஜன்**, L. I. M. (Regd.)

தஞ்சை ஸரஸ்வதிமஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவக் காரியதரிசி,

**ஸ்ரீ S. கோபாலன்**, B. A., B. L.,

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

★

**மகாலிங்கம் பவர் பிரஸ், தஞ்சை.**

*விலை ரூபா 2—8—0*

1956

# PREFACE.

THIS publication is the eleventh of our series containing the tested recipes of Raja Serfoji known as "SARABHENDRA VAIDYA MURAIGAL". This deals with the dreaded disease of T. B. both in its incipient and later stages. The disease is called "Sosham" in Sanskrit which means "that which dries up the system". The deficiency in oily matter due either to the deficiency in food content or to the non-circulation of the nutritive fluid throughout the system, or loss of vital fluids, or illness, or cares and anxieties, is the cause of the disease according to Ayurveda. The activity of germs is a subsequent development due to debility and deficiency of vital energy rendering the system incapable of resisting the multiplication of germs. The germs are there in the healthy systems also, as admitted by the allopathic system, though their growth and their toxins are resisted by the vital energy.

Among the recipes that have been chosen, the first place has naturally been given to medicated "Ghritas" (preparations in Ghee) that will counteract the drying up of the system. Vitalising ingredients like gold, mercury, sulphur and the well-known eight life-giving herbs also find a place in the recipes, so that the body may be directly energised to resist the germs and absorb nutrition.

These recipes may therefore be safely used to supplement the injections and other remedies that

are now used in the allopathic system. It is hoped that the lay public and physicians alike may derive the same advantage from this publication as they have done from the prior ones.

The recipes have been carefully edited with prose versions and an introduction on the diagnosis of the disease, by our Ayurvedic Pandit Dr. S. VENKATARAJAN, L. I. M., who has spared no pains in making the book useful to the public. Our thanks are due to him for his valuable services.

We are grateful to the Government of Madras for their liberal grants that have enabled us to publish this and other valuable manuscripts of the library.

Sarasvati Mahal,
Tanjore.
16—7—1956.

**S. GOPALAN,**
*Honorary Secretary,*

# உளமாந்தை, க்ஷயரோக சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்து வகைகளின்

# அட்டவணை.


| எண் | மருந்துகள் | பக்கம் |
|---|---|---|
| | **1. சூரண வகைகள்.** | |
| 1 | *(அந்தரத் தாமரை)ச் சூரணம் (கயத்திற்கு) … | 68 |
| 2 | அமுத சர்க்கரை ரஸாயனம் … | 69 |
| 3 | குக்குளுச் சூரணம் … | 82 |
| 4 | சாறணைத் தாளகச் சூரணம் … | 3 |
| 5 | சீந்திற் சர்க்கரை … | 69 |
| 6 | தம்பனம் … | 137 |
| 7 | (திராக்ஷாதிச்)சூரணம் (சயம், பாண்டு காமாலைக்கு) … | 152 |
| 8 | திரிகடுகாதி சூரணம் … | 22 |
| 9 | தேத்தான் சூரணம் … | 18 |
| 10 | பாவன ஹரீதகீ சூரணம் … | 17 |
| 11 | மஹா ஏலாதி சூரணம் …. | 32 |
| 12 | (மரிசார்க்க) சூரணம் (க்ஷயத்திற்கு) … | 67 |
| 13 | (வெள்ளறுகுச்) சூரணம் (மருந்தீட்டிற்கு) … | 151 |
| | **2. கிருதங்கள்.** | |
| 1 | அச்வகந்தி கிருதம் … | 43 |
| 2 | அமுக்கிராக்கிழங்கு நெய் … | 71 |


* பிறைக் குறிக்குள் காணப்படும் பெயர்கள் அந்தந்த மருந்துகளின் முதற்சரக்கைக் குறிப்பவை.

| எண் | மருந்துகள் | | பக்கம் |
|---|---|---|---|
| 3 | ஆடாதோடை நெய் | ... | 100 |
| 4 | ஆடாதோடை நெய் | ... | 78 |
| 5 | ஆமலகாதி நெய் | .... | 38 |
| 6 | ஆமலகாதி கிருதம் | ... | 116 |
| 7 | (ஆமலகாதி) கிருதம் (க்ஷயத்திற்கு) | .... | 62 |
| 8 | கண்டங்கத்தரி நெய் | ... | 5 |
| 9 | (கருப்பஞ்சாறு) நெய் (இரத்த பித்தம், எலும்புருக்கிக்கு) | ... | 155 |
| 10 | கூஷ்மாண்ட கிருதம் | ... | 47 |
| 11 | (சாதிக்காய்) நெய் (சலரூப உளமாந்தைக்கு) | ... | 25 |
| 12 | துளஸீ கிருதம் | ... | 119 |
| 13 | தூதுவேளை நெய் | .... | 36 |
| 14 | தூதுவேளை நெய் | .... | 121 |
| 15 | தேவதாரி நெய் | ... | 104 |
| 16 | நாராயண கிருதம் | ... | 48 |
| 17 | பிரம்மீ கிருதம் | ... | 131 |
| 18 | (புளியாரை) நெய் (கயத்திற்கு) | .... | 64 |
| 19 | மதனகாமேசுரத் தைலம் (நெய்) | ... | 92 |
| 20 | முயல் நெய் | ... | 110 |
| 21 | ,, | ... | 101 |
| 22 | ,, | ... | 10 |
| 23 | முஸல்யாதி நெய் | ... | 52 |
| 24 | வாஸாதி கிருதம் | .... | 36 |
| 25 | வாஸாதி கிருதம் | ... | 31 |

| எண் | மருந்துகள் | பக்கம் |
|---|---|---|
| 26 | (வாஸாதி) நெய் (சுவாசகாசம், ஈளை, இருமலுக்கு) ... | 153 |
| 27 | (வேங்கை) நெய் (உளமாந்தை, க்ஷயரோகத் திற்கு) ... | 27 |
| | **3. பற்பங்கள்.** | |
| 1 | அரிதார பற்பம் ... | 49 |
| 2 | சொர்ண பற்பம் .... | 124 |
| 3 | பவழ பற்பம் ... | 30 |
| 4 | ரஸ பற்பம் ... | 118 |
| 5 | ராஜ மிருகாங்க ரஸம் ... | 54 |
| 6 | ,, ... | 55 |
| 7 | ,, ... | 80 |
| 8 | வெள்ளி பற்பம், செந்தூரம் ... | 42 |
| | **4. செந்தூரங்கள்.** | |
| 1 | சொர்ண ஸிந்தூரம் .... | 40 |
| 2 | சொர்ண ஸிந்தூரம் ... | 41 |
| | **5 குளிகைகள்.** | |
| 1 | அகஸ்தியர் குளிகை .... | 128 |
| 2 | சொர்ணமாலினீ வஸந்தம் .... | 57 |
| 3 | தாளேஸ்வர பற்ப மாத்திரை ... | 14 |
| 4 | திரிகடுகு மாத்திரை ... | 39 |
| 5 | திரிகடுகு வடகம் .... | 76 |
| 6 | மிருகாங்க ரஸம் ... | 4 |
| 7 | முருங்கைப்பூ மாத்திரை ... | 134 |

| எண் | மருந்துகள் | பக்கம் |
|---|---|---|
| | **6. லேகிய வகைகள்.** | |
| 1 | இலவங்கப்பட்டை லேகியம் ... | 74 |
| 2 | கண்டங்கத்திரி லேகியம் ... | 99 |
| 3 | கூஷ்மாண்ட ரஸாயனம் ... | 46 |
| 4 | கூஷ்மாண்ட ரஸாயனம் ... | 58 |
| 5 | கூஷ்மாண்ட ரஸாயனம் (வேறு) ... | 58 |
| 6 | கொட்டைக் கரந்தை லேகியம் ... | 85 |
| 7 | தூதுவேளை லேகியம் ... | 87 |
| 8 | மதனகாமேச்வரம் ... | 90 |
| 9 | மதனகாமேச்வரம் .... | 130 |
| 10 | ,, (மன்மத சிந்தாமணி) ... | 95 |
| 11 | வல்லாதகி ரஸாயனம் ... | 90 |
| 12 | வாஸாதி லேகியம் ... | 60 |
| 13 | ஹரீதகீ லேகியம் ... | 34 |
| | **7. எண்ணெய் வகைகள்.** | |
| 1 | ஆடுதீண்டாப்பாளை எண்ணெய் ... | 83 |
| 2 | எலியால் எண்ணெய் ... | 107 |
| 3 | காந்த்யாதி தைலம் ... | 29 |
| 4 | குண்டலாதி எண்ணெய் ... | 2 |
| 5 | குதிரை லத்தி எண்ணெய் ... | 106 |
| 6 | கோட்ட எண்ணெய் .... | 21 |
| 7 | (சங்கம்) வேர் எண்ணெய் (வாதக்ஷயரோகத்திற்கு) | 112 |
| 8 | சிவனார் வேம்பு எண்ணெய் ... | 1 |
| 9 | ஸைந்தவாதி எண்ணெய் .... | 13 |

| எண் | மருந்துகள் | பக்கம் |
|---|---|---|
| 10 | துடரி எண்ணெய் ... | 19 |
| 11 | நிலக்குமிழ் எண்ணெய் ... | 23 |
| 12 | (பிராய்) எண்ணெய் (மருந்தீட்டிற்கு) ... | 149 |
| 13 | (பொன்னாங்காணீ) எண்ணெய் (சயம், இருமல், காய்ச்சலுக்கு) ... | 88 |
| 14 | மயூர தைலம் ... | 79 |
| 15 | (மருது) எண்ணெய் (மருந்தீட்டிற்கு) ... | 140 |
| 16 | (மல்லி) எண்ணெய் ... | 19 |
| | **8. கஷாயங்கள்.** | |
| 1 | சிறு தேக்குக்குடி நீர் ... | 8 |
| 2 | ,, ... | 9 |
| 3 | (தேட்கொடுக்குக்)குடி நீர் (வாத கயத்திற்கு) ... | 114 |
| 4 | (பருத்திப் பிஞ்சு) மருந்து (மருந்தீட்டிற்கு) ... | 145 |
| 5 | (அழிஞ்சில்) மருந்து (மருந்தீட்டிற்கு) ... | 141 |
| | **9. கல்க வகைகள்.** | |
| 1 | குறிஞ்சாக் கல்கம் ... | 15 |
| 2 | சாதிப்பத்திரிக் கல்கம் ... | 127 |
| 3 | (தேற்றான்) மருந்து (மருந்தீட்டிற்கு) ... | 145 |
| 4 | (பூசனி) எலிமிச்சை மருந்து (மருந்தீட்டிற்கு)... | 148 |
| 5 | (ஆரை) வேர் மருந்துகள் முதலியன ... | 142 |
| 6 | கடுகுரோகிணி மருந்துகள் ... | 35 |
| 7 | பச்சிலை மருந்துகள் ... | 23 |
| 8 | முருங்கைப்பால் ... | 139 |
| 9 | ,, ... | 11 |

# சரபேந்திர வைத்ய முறைகள்.

## முகவுரை.

'ராஜயக்ஷ்மா' என்றும் "க்ஷயம்" என்றும் அழைக்கப் படும் இந்நோய் நற்காலத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இதையே ஆங்கிலத்தில் PULMONARY TUBERCULOSIS (T. B.) என்றும், PTHISIS என்றும் அழைக்கின்றனர். இந் நோய்க்கு KOCH BACILLI என்னும் நுண்ணிய கிருமி வகைகளே காரணமாகின்றன என்பது மேல்நாட்டு வைத்யர் களின் முடிவு. இக்கிருமிகள் சில நோயாளிகளின் கோழையில் காணப்பட்ட போதிலும் அவர்களுக்கு இந்நோயின் குறிகளே இல்லாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் அவர்களின் தேகத்தில் இக்கிருமிகளை எதிர்க்கும் சக்தி இருக்கின்றது என் றும் கூறுகின்றனர். இம்மாதிரி எதிர்க்கும் சக்தியின் தன்மை யைச் சோதிக்க TUBERCULIN TEST, முதலியவைகளைச் செய்து B. C. G. Vaccine போன்ற விஷத்தன்மையுள்ள மருந்துகளை உடலில் புகுத்திவிடுகின்றனர். இம்மாதிரி முறை களால் நன்மையைவிடத் தீமைகளே அதிகம் விளைகின்றன என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆயுர்வேத சாஸ்திரத்தில், நமது கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய கிருமி வகைகளையும்பற்றிக் கூறுமலில்லை. கபம், இரத்தம், மலம், வியர்வை இவைகளில் உண்டாகும் கிருமிகளை 20 வகைகளாகப் பிரித்து, அவைகளின் நிற பேதங்களையும், அவைகளால் ஏற்படும் வியாதிகளையும் நன்குகக் கூறுகின்றனர். அப்படியிருந்தும், யக்ஷ்மா என்னும் இந்த நோயைப்பற்றிக்

| எண் | மருந்துகள் | | பக்கம் |
|---|---|---|---|
| 10 | வாழைப்பழ மருந்து | ... | 114 |
| | ***10. சாறு வகைகள்.*** | | |
| 1 | ஊமத்தை மருந்து | ... | 115 |
| 2 | கட்டுக்கொடி மருந்து | ... | 98 |
| 3 | (குப்பைமேனி) மருந்து (மருந்திட்டிற்கு) | ... | 144 |
| 4 | (மிதிபாகல்) மருந்து (மருந்திட்டிற்கு) | ... | 146 |
| 5 | (நாரத்தை) வளையம் (மருந்திட்டிற்கு) | ... | 147 |
| | ***11. கல்பங்கள்.*** | | |
| 1 | தேவதாளி கல்பம் | .. | 136 |
| 2 | தேற்றான் கல்பம் | ... | 133 |
| 3 | நொச்சி கல்பம் | ... | 132 |
| | ***12. களி, பிட்டு, காடி வகைகள்.*** | | |
| 1 | குறிஞ்சியிலைக் களி | ... | 24 |
| 2 | நிலப்பனை கோவா | ... | 127 |
| 3 | பிட்டு | ... | 109 |
| 4 | வேங்கைப் பிட்டு | ... | 16 |
| 5 | காடி | ... | 129 |
| | ***13. வெளிப்பிரயோக மருந்துகள்,*** | | |
| 1 | (அரளி) வெண்ணெய் (லேபனம்) | ... | 130 |
| 2 | இலேபனம் | ... | 137 |
| 3 | உள் நாக்கிற்குத் தடவும் மருந்து | ... | 20 |

கூறுமிடத்து தேக வரட்சி, தாதுக்ஷீணம் முதலியவைகளால் ஏற்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறதேயல்லாது கிருமிகளை மூலகாரணமாகச் சொல்லப்படவில்லை. இவ்வியாதி வந்தவர்களுக்கு ஓஜஸ் என்னும் வீர்ய சக்தி குறைவடைவதாலும், கபம் கெட்டுப்போவதனாலும், தேகத்தில் அன்னரஸம் சரியாகப் பரவாமல் போவதனாலும் கிருமிகள் வ்ருத்தியாகின்றன என்று சொல்வதே பொருத்தமாகும்.

இந்நோய் கண்டவர்களை வெகு எளிதில் மற்ற நோய்கள் பிடிக்கின்றன என்பதாலும், இது நாளடைவில் பல ரோகங்களுடன் சேர்ந்து பரிஜனங்களோடு கூடிய அரசன்போல் ஆட்சி செலுத்துவதாலும் இதற்கு "ராஜ யக்ஷ்மா" என்ற பெயர் வழங்கலாயிற்று. தேகத்திலுட்கொண்ட மருந்துகளின் வீர்யத்தை க்ஷீணமடையச் செய்வதால் இதற்கு "க்ஷயம்" என்றும் பெயர் உண்டு. இந்த வியாதியினால் ரஸம் முதலான ஸப்த தாதுக்களும், உடம்பின் எல்லா அங்கங்களும் வறண்டு போவதால் இதற்கு "சோஷம்" என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. இந்நோயின் ஆரம்ப நிலையை "உளமாந்தை" என்றும், அதிகரித்த பின்னர் "க்ஷயம்" அல்லது "கயம்" என்றும் தமிழில் கூறுகின்றனர்.

இப்போது வெளியிடப்பட்டிருக்கும் முறைகளில் இந்தப் பெயர்களே பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இம்முறைகளைச் செய்யுள் வடிவமாகச் செய்தவர் சரபோஜி ராஜாவின் ஆஸ்தான பண்டிதராகிய "கொட்டையூர் சிவக்கொழுந்து பண்டாரம்" என்பவர். இம்முறைகள் சரஸ்வதி மகால் தமிழ் பகுதி 56 நெ. சுவடியில் அடங்கியிருக்கின்றன.

## புராண வரலாறு.

நக்ஷத்திரங்களுக்கும், பிராமணர்களுக்கும் அரசனான சந்திரன் ரோகிணி என்ற மனைவியினிடத்தில் அதிகப் பிரீதியாக

இருந்ததைக் கண்ட மற்ற மனைவிகள் தக்ஷனிடம் முறையிட அவர் சந்திரனுக்கு இந்நோய் வருமாறு சபித்தார். சந்திரன் தன் தவறையுணர்ந்து திருந்தியபின், அச்வினி தேவர்களைக் கொண்டு அவருக்குச் சிகித்ஸை அளிக்கப்பட்டது. அவர்கள் ஓஜஸை விருத்திசெய்யும் மருந்துகளைக்கொடுத்துச் சொஸ்தம் செய்தனர். பின்னர், தக்ஷன் இந்நோயை உலகோரைப் பீடிக்கும்படி அனுப்பினர்.

**ஓஜஸ்:—** இது தேகத்தில் 9 துளிகளே உள்ளன. 7-வது தாதுவான சுக்லத்தின் ஸாரமான பாகமாக இது உண்டாகின்றது. இதன் நிறம் சிவப்புடன் கூடிய மஞ்சள் நிறமாகும். இருப்பிடம் இருதயம் என்று கூறப்படினும், தேகம் முழுவதிலும் வியாபித்து நின்று உடலை நிலைநிறுத்தச் செய்கிறது. மனிதன் சுறுசுறுப்பாகவும், காந்தியுடன் கூடியவனாகவும், மனோதிடம் உள்ளவனாகவும் இருக்க இதுவே காரணமாகிறது.

## காரணங்கள்.

### 1. வேகங்களை அடக்குதல்.

வெட்கத்தினாலோ அல்லது பயத்தினாலோ (1) ஏப்பம், (2) அபானவாயு பரிதல் (3) மலவிஸர்ஜனம் (4) மூத்திர வேகம் (5) தும்மல் (6) பசி (7) தாகம் (8) தூக்கம் (9) இருமல் (10) மேல்மூச்சு வாங்கல் (11) கொட்டாவி (12) கண்ணீர் (13) வாந்தி (14) சுக்ரம் என்ற 14 வகை வேகங்கள் வரும்போது அவைகளைத் தடை செய்தல்.

### 2. க்ஷயம்.

அதிகமான ஸ்திரீ போகத்தினால் ஏற்பட்ட இந்திரிய க்ஷயத்தினாலும், (ii) எண்ணெய், நெய் போன்ற நைப்பான பண்டங்களை உபயோகிக்காமலிருப்பதாலும் தேகத்தில் வரட்சி ஏற்பட்டு க்ஷயத்திற்குக் காரணமாகிறது.

"பிரதிலோம க்ஷயம்" உண்டாகிறது. இது எவ்வாறு ஏற்படுகிறதென்பதை விளக்குவோம். ஒரு பழுக்கக் காய்ந்த இரும்பு குண்டை ஒரு மெல்லிய பலகைத் துண்டின்மேல் வைத்தால் தன் இடத்தைப் பொசுக்குவதுடன் நில்லாமல் அது எவ்வாறு குண்டைச் சுற்றிலும் உள்ள பலகையையும் பொசுக்கிவிடுகிறதோ அதேபோல் அந்தந்த தாதுக்களிலும் அக்னி விருத்தியாகி அந்தந்த தாதுக்கள் கெடுவதுடன் தன் பக்கத்திலுள்ள தாதுவையும் கெடுக்கிறது.

## ராஜயக்ஷ்மாவின் பூர்வரூபம்.

மூக்கொழுகல், அதிகமான தும்மல், வாயில் நீரூறல், வாயில் இனிப்பு, அக்னி மாந்த்யம், தேகத்தில் தளர்ச்சி, அன்ன பானாதிகள் சுத்தமாயிருந்தாலும் அசுத்தமாயிருப்பதைப் போன்ற தோற்றம், இருதயத்துடிப்பு, வாந்தி, அரோசகம், எவ்வளவு சாப்பிட்டாலும் பலக்குறைவு, தானாகவே தன் கைகளை அளந்து பார்த்துக்கொள்ளல். காலில் வீக்கம், கண்களில் அதிகமான வெளுப்பு, கைகளைத் தானே அளந்துகொள்ளுதல், ஸ்திரீ, மத்யம், மாம்ஸம் இவைகளில் அதிக ஆசை, நாசிகளை அடிக்கடி விசாலமாக்கல், நகம், கேசம் முதலியவைகளில் அதிக வளர்ச்சி. இவைகள் ராஜயக்ஷ்மா வருவதற்கான அறிகுறிகளாகும். இதைத்தவிர,

அக்னி, நரி, பாம்பு, குரங்கு, நாய், பக்ஷிகள் முதலியன கனவில் தோன்றுதல், எலும்பு, சாம்பல் மயிர், இவைகளின் குவியலின்மேல் ஏறுதல், பாழடைந்த கிராமங்கள், வற்றிய குட்டை, நெருப்பு, மலைச்சிகரம், மரங்கள் முதலியவை விழுவதைப் போலும் ஸ்வப்பனங்கள் உண்டாகும்.

## ராஜயக்ஷ்மாவின் ரூபம்.

தோஷங்கள் பிரகோபித்த பிரதேசத்திற்குத் தக்கபடி கீழ்கண்ட 11 வகைக் குறிகள் ஏற்படும்.

### 3. ஸாஹஸக்ரியைகளை ஸேவித்தல்.

தேகப்பயிற்சி, கண் விழித்தல், வழி நடத்தல், ஸ்திரீ போகம், சிரித்தல், பேசுதல் முதலானவைகளை கட்டுப்படுத்தாமல் செய்தால் இந்நோய் சம்பவிக்கும்.

### 4. விஷமாசனம்.

காலந்தவறி பசியில்லாமலிருக்கும்போது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சாப்பிடுதல் ஆக இவ்வகைக் காரணங்களால் தேகத்திலுள்ள வாயு அதிகமாகிப் பித்தம், கபம் இவைகளுடன் சேர்ந்து, சரீரத்திலுள்ள ஸந்திகளில் பிரவேசித்துப் பின்னர் ஸ்ரோதஸ் (குழாய்களை) களையடைத்து அதன் வாயைப் பெரிதாக்கி உடம்பின் மேல்பாகம், மத்ய பாகம், கீழ் பாகம் முதலான மார்க்கங்களில் வியாபிக்கின்றன.

இதனால் ஆகார ரஸம் ஆமாசயத்திலேயே தங்கி தாத்வக்னி குறைவடைவதாலும், ஒரு தாதுவிலிருந்து மற்றொரு தாதுவிற்குச் செல்லும் ஸ்ரோதோ மார்க்கமும் அடைபடுவதனால், அன்னரஸம் மற்ற தாதுக்களாக மாற முடியாமல் ஆகிறது. ஆகவே ஆஹார ரஸம் பெரும்பாலும் மலமாகவே மாற்றப்படுகிறது. கொஞ்ச பாகம் மாத்திரமே ஓஜஸாகப் பரிணமிக்கிறது. க்ஷயரோகி இரத்தத்தின் பலத்தினாலோ அல்லது மாம்ஸதாதுவின் பலத்தினாலோ ஜீவிக்கவில்லை. தாது க்ஷீணமடைந்தவன் மலத்தின் பலத்தினாலேயே ஜீவிப்பதால் அதனை ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டும். சிற்சில சமயம் ரஸதாது அதன் ஸ்தானத்தில் விருத்தியடைந்து, மேல் நோக்கி இருமலாகிப் பற்பல குறிகளையும் உண்டாக்கும்.

மிற்க, அதிகமான ஸ்திரீ போகத்தினால் சுக்ரம் குறைவடைந்து, வாயு அதிகமாகிச் சுக்ரதாத்வக்னியும் வ்ருத்தியாகி அது மஜ்ஜையைச் சோஷிக்கச்செய்யும். மஜ்ஜை க்ஷீணமானால் அது அஸ்தியைக் குறைக்கும். அஸ்தி குறைந்தால் அதன் முன் தாதுவான மேதஸ் குறைவடையும். இவ்வாறு தாதுக்கள் க்ஷீணமடைகின்றது. இவ்வாறாகப்

## ராஜயக்ஷ்மாவில் 6 வித குறிகள்.

(1) போஜனத்தில் வெறுப்பு
(2) ஜ்வரம்
(3) மூச்சுத்திணரல்
(4) இரத்த வாந்தி
(5) தொண்டைக்கம்மல்
(6) இருமல்

## சிகித்ஸைக்கு வசப்படாதவை.

மேற்கூறிய 11 வித குறிகளோடும் கூடியவன் மாம்ஸ க்ஷயமுள்ளவன், பலமில்லாதவன், அதிக பசியுள்ளவன், அதிகாரத்தோடு கூடியவன், வயிறு, தொடையிடுக்கு முதலான இடங்களில் வீக்கமுள்ளவன், முதலாய லக்ஷணங்கள் பொருந்தியவனுக்குச் சிகித்ஸை பயனளிப்பது அரிது.

கண்களின் அதிகமான வெளுப்பு, அன்னத்வேஷம், மேல் மூச்சு வாங்கல், கஷ்டத்துடன் சிறுநீர் விடுதல், முதலிய குறிகளும் அசாத்தியக் குறிகள்.

இனி தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளபடி இந்நோயை ஆராய்வோம். க்ஷயரோகம் இந்த நூல்களில் இந்த நோயை உளமாந்தை, க்ஷயம் என்ற இருவகையாக விவரித்திருக்கிறார்கள்.

(1) உளை + மாந்தை = அதாவது சீழ்கட்டு அல்லது உள்ளழிவு உடம்பிற்குள் உள்ளழிவு அல்லது சீழ்க்கட்டு என்று பொருள்படும்.

உடம்பு, மார்பு, குடல், வயிறு முதலான இடங்களில் பருக்கள் புறப்பட்டு, அவை பழுத்து உடைவதால், உடம்பு கனத்துவலித்து குத்தல், குடைச்சல், கைகாலெரிச்சல், இருமல், மயக்கம், ஜ்வரம், தலைவலி, முதலான குறிகளேற்பட்டு நெஞ்சு, விலாப்பருத்து இருமலினால் நொந்து, குரல் கம்மி நினைவழிந்து,

மேல் நோக்கினால் :—

(1) மூக்கொழுகல்
(2) மூச்சுத்திணறல்
(3) இருமல்
(4) தோள்பட்டை வலி
(5) தலைவலி
(6) ஸ்வர பேதம்
(7) அரோசகம் (ருசியின்மை)

கீழ் நோக்கினால் :— (8) அதிஸாரம் அல்லது மலச்சிக்கல்

கோஷ்டத்தில் :— (9) வாந்தி
(குடல்)

த்ரியக்கதமானால் :- (10) மார்பின் இருபுறங்களிலும் வலி
(குறுக்காகச் சென்றால்)

ஸந்திகளைப் பீடித்தால் (11) ஜ்வரம்
(மூட்டுகளில் வ்யாபித்தல்)

இதையன்றி தோஷங்களின் வேறுபாடுகளினால் ஏற்படும் 11 வகைக் குறிகள் வருமாறு :—

வாயு அதிகரித்தால் (1) ஸ்வரபேதம்
(2) உடம்புவலி
(3) மார்புப் பக்கங்களில் சுருக்கங்களும் உண்டாகும்.

பித்தம் ,, (4) ஜ்வரம்
(5) உடம்பு எரிச்சல்
(6) அதிஸாரம்
(7) ரத்தம் வெளிவரல் முதலியவை ஏற்படும்

கபம் ,, (8) தலையில் பாரம்
(9) ஆகாரத்தில் வெறுப்பு
(10) இருமல்
(11) தொண்டையடைப்பு
இவைகளும் ஏற்படும்

*நெஞ்சுறப் பழுக்கப்பற்றி நினைவழிந் திருமிநொந்து
பஞ்சுபோற் ஜ்வரமுந்தோன்றி பழுத்துளே செயலுங்கூட்டி
அஞ்சவே ஐயும்பித்தம் அசனமு மொருத்துவந்தால்
ஒஞ்சிடா துண்மைசொன்னோம் உளமந்தை யென்னலாமே
— வைத்ய அட்டவணை 74

(இ.ள்.)

நெஞ்சில் வேதனையுடன் கபம் சேரும். அடிக்கடி மயங்கி விழுவான். இருமலேற்படும். ஜ்வரம் தோன்றும், வேலைகளைச் செய்ய இயலாது. கபமும், பித்தமும் குறைவடையும். சாப்பாட்டில் இச்சையேற்படாது. இவை "உளமாந்தை"யின் லக்ஷணங்களாம்.

இசைக்கவே உளமாந்தை நாலதாகும்
இதனுடைய நாமத்தை யியம்பக் கேளாய்
வசைக்கவே வாதவுள மாந்தையோடு
மருவுகின்ற பித்தவுள மாந்தமாகும்
திசைக்கவே சிலேத்மவுள மாந்தமாகும்
செயலான தொந்தவுள மாந்தமாகும்
அசைக்கவே நாலுனுட வாண்மை தன்னை
அலாத்தியசாத் தியமென்றே யறிந்து உன்னே
(க)

## வாத வுளமாந்தை

உன்னவே உறமி நெஞ்சு பழுக்கள் பக்கம்
உறுமிநினை வழிந்திருமி உறக்க நொந்து
சின்னவே யஞ்சுபோற் சுரமுந் தோன்றி
சீழ்க்கட்டி யாய்ப்பழுத்துச் சிதறிவீழும்

---

*நெஞ்சுமே லுடம்புவற்றி நிலைபெற நரம்பு தோன்றி
பஞ்சுபோல் நாவும்கண்ணும் பாண்டமும் வெளுத்துக் கண்டு
அஞ்சவே ஐயம்பித்து அசனமுஞ் சிறுத்து வந்தால்
துஞ்சுவ துண்மையென்று சொல்லாமல் சொல்லலாமே—(நக)
அகஸ்தியர்—2000

அன்னத்வேஷம் உண்டாகி, தூக்கம் இல்லாமல் உடம்பை யிளைக்கச்செய்யும் கப நோய் என்ற பொதுவான குறிகள் காணப்படும்.

## க்ஷயரோகத்தின் குறிகள்.

உடம்பின் ஈரலில் குறுக்கள் கிளம்பி, வெந்து அழிந்து சீழ்க்கொண்டு, உள்ளாழ்ந்து, மார்வலி, ஜ்வரம், மூச்சுவிட முடியாமை, இருமல், இரத்தம் கக்கல் முதலான குறிகள் உள்ளது

## உளமாந்தை நிதானம்.

இருமிச் சுரமும் தலைவலியு
    மிறங்கா தன்னம் விஷம்போலாம்
பெருகக் குத்திக் குடைந்துளையும்
    பித்தம் தெரியும் வாய்வதுவு
முருகிச் செயலுங் கெட்டுமிக
    வுறக்க மறவே விழுந்திருக்கு
மொருமைப் படவே வருத்துமிதை
    முளமாந் தையதா யெண்ணுவீரே. (௫௨)

அகஸ்தியர்—2000

இந்தநோய் வந்தநாழி வுரைத்திடு கயரோகமாய்
முந்தநோ யய்யும்பித்தம் முறுகிடு குளிர்ச்சிவெப்பு
வந்ததோர் தினங்கள் கண்டால் வருத்திடுமெனவேநாளும்
பைந்தொடி யாவின் பாலும் சீனியுங் கொள்ளலாமே.
(௫௩)

(இதன் பொருள்)

இருமல், ஜ்வரம், தலைவலி, அன்னம் இறங்காமல் விஷம் போலாதல், உடம்பில் குத்துவலி, பித்த எரிச்சல், வாயு அதிக மாதல், உறக்கமின்மை, முதலான குறிகள் ஏற்படும். இந்த குறிகள் முற்றினால் கயரோகமாகும் என்றும் இச்செய்யுளி லிருந்து புலனாகிறது.

## கப உளமாந்தை.

பேசலாம் உடலுருகிப் பிழிந்தாற்போலப்
பலமான மேனியெல்லாம் புண்போல்நொந்து
வாசலாம் வாயில்மிகக் கோழை யுண்டாய்
மனமறுகிச் சத்தியொடு மயக்கமாகும்
நாசலாம் சிலேத்மமும் நடுக்கலாகி
நலுங்கியே பஞ்சுபோல் மிகவெளுக்கும்
ஆசலாம் ஐயவுள மாந்தை யென்று
அவனியுள்ளோர் தங்களுக்கு அறியக்கூறே (௩)

(இ.ள்.)

உடம்பைத் திருகிப் பிழிந்தாற்போலாகும். உடம்பில் வலி யுண்டாகும். வாயில் சீழைப்போல் கோழை கட்டும். மனதில் வேதனையேற்படும். வாந்தியெடுக்கும். மயக்கம், நடுக்கல் இவைகளுண்டாகும். முகம் வெளுக்கும். இவை "கபவுள மாந்தை"க் குறிகளாகும்.

## தொந்தவுள மாந்தை.

கூறுகத் தலைவலியுஞ் சுரமுந் தோன்றிக்
குணங்கெட்ட விருமலொடு கோழையுண்டாய்
ஆறுக வன்னத்தை யிறங்கொட் டாது
ஆங்கார மடக்கியே யசதியாகும்
ஊறுக உறக்கமது மிகுதியாகும்
உறுதியாய்ச் சீழ்விழுந்து நாற்றமுண்டாம்
தூறுகச் சடமெங்குந் தினவுண்டாகும்
தொந்தவுள மாந்தையென்று சொல்லலாமே (௪)

(இ.ள்.)

தலைவலி, ஜ்வரம், இவைகளுடன் இருமலுடன் கோழை வெளியாகும், சாப்பாடு உள்ளே இறங்காது. அசதியேற்படும். தூக்கம் அதிகமாகும். வாயில் சீழுண்டாகும். நாற்றமெடுக்கும். உடலெங்கும் அரிப்பு ஏற்படும். இவை "தொந்த உளமாந்தை"க் குறிகளாகும்.

தின்னவே சிலேத்மந்தான் மீறிக் காணும்
செரிக்காமல் அசனந்தான் திருப்பிவீழும்
கன்னவே கால்கையில் கசப்புக்காணு
கருகுமே வாதவுள மாந்தை தானே. (உ)

(இ.ள்.)

நெஞ்சு, விலாப்புறங்கள் முதலான இடங்களில் வலியேற்படும். அடிக்கடி மயக்கம் வரும். இருமலுண்டாகும். லேசாகச் சுரமடிக்கும். இருமும்போது நீர்போல் கபம் வெளிவரும். பொதுவில் கபம் அதிகரித்து நிற்கும். சாப்பிட்ட ஆஹாரம் ஜீரணிக்காமல் வாந்தியாகும். கை கால்களைச் சுவைத்துப் பார்த்தால் கசப்புச் சுவை இருக்கும்.

# பித்த உளமாந்தை.

காணவே மிகத்திரண்டு கீழ்வயிற்றிற்
கட்டியாய் மிகப்பொருமிப் புண்போல் நொந்து
ஊணவே உடம்பொங்கி முளைச்சலாகி
உரப்பான தலைநோயுஞ் சுரமுங் காணும்
ஈணவே இருமலொடு சீயு முண்டாம்
இரைப்பாகி மிடறெல்லாம் புண்ணுமாகும்
பேணவே மயக்கமொடு புரட்டலாகும்
பித்தவுள மாந்தையென்றே பேசலாமே (உ)

(இ.ள்.)

வயிற்றின் கீழ்பாகத்தில் திரண்டு கட்டியாகிப் பொருமல் உண்டாகும். வலியும் ஏற்படும். உடம்பில் குத்துவலி உண்டாகும். தலைவலி, லேசான ஜ்வரம், இருமல், கோழை முதலியவை அதிகமாகும். மேல் மூச்சு வாங்கும். மயக்கம், புரட்டல், இவைகளும் ஏற்படும், "பித்த உளமாந்தை"யின் குறிகள் இவைகளாகும்.

போற்றவே பூஜைக்கு இடறுகாணல்
    புருடனுடன் ஸ்திரீதனையே பிரிக்கின்றோர்க்கும்
ஊற்றவே உளமாந்தை ரோகம் வந்து
    உற்பவிக்கு முறுதியென்றே யுரைக்கலாமே (க)

உரைக்கவே ஊழித்திக் கிரை கொடாமல்
    உட்கார்ந்து அக்கினிதான் மந்தித்தப்போ
பரைக்கவே யசனத்தைப் பருகினோர்க்கும்
    பகலுறங்கி இரவுதனில் விழித்தலாலும்
புரைக்கவே புலால்தனையே புசித்தலாலும்
    புணர்ச்சியினின் மயக்கத்திற் பொருந்தலாலும்
இரைக்கவே கடுவோட்ட மோடினாலும்
    எய்திடுமென் றுளமாந்தை யிசைக்கலாமே — (உ)

(இ.ள்.)

தான்யங்களை அளவில் குறைத்துக் கொடுப்பவர்களுக்கும், ஜீவஹிம்ஸை செய்பவர்களுக்கும், பதிவ்ருதா ஸ்திரீகளை அணுகியவர்களுக்கும், கொலை, களவு, கட்குடி முதலியவைகளைச் செய்பவர்களுக்கும், தேவ பூஜைக்கு ஹிம்ஸை அளிப்பவர்களுக்கும், கணவனிடமிருந்து மனைவிகளைப் பிரிப்பவர்களுக்கும் உளமாந்தை ரோகம் உண்டாகும்.

நன்கு பசியெடுக்கையில் பேசாமலிருந்து அக்கினி மந்தித்த பின் சாப்பாட்டை உட்கொள்ளுபவர்களுக்கும், பகலில் உறங்கி இரவில் கண்விழித்து வேலை செய்பவர்களுக்கும், மாம்ஸத்தையே அதிகமாயுண்பவர்களுக்கும், புணர்ச்சிக்குப்பின் மயங்கி விழுபவர்களுக்கும், நன்கு இரைக்கும்படி அதிக ஓட்டம் ஓடுபவர்களுக்கும் இந்நோய் ஸம்பவிக்கும்.

## க்ஷயரோக நிதானம்.

தானான க்ஷயமது தான் பனிரெண்டாகும்
    தாக்கான பிரமமாம் க்ஷயந்தா னென்றும்
வானான ராஜக்ஷயம் வைச்ய க்ஷயந்தான்
    மருவுசூத் திரக்ஷயந்தான் வாத க்ஷயமாகும்

## தீரும் தீராதவை.

செப்பியதோ ரசாத்யத்தைச் சொல்லக் கேளாய்
சீறுகின்ற தொந்தவுள மாந்தை சிலேத்மம்
வப்பியதோர் வாதவுள மாந்தை தானும்
மாவவிழ்தந் தன்னாலும் வசப்படாது
கப்பியதோர் பித்தவுள மாந்தை தானும்
கனவவிழ்தந் தன்னிற்கா ரியமுமாகும்
ஒப்பியதோ ராயுருவே தத்திற்றானு
மொன்றும்பொய் பேசாது வுரைத்தப்பாரே—

(இ.ள்.)

தொந்தவுளமாந்தை, கபவுளமாந்தை, வாதவுளமாந்தை இம் மூன்றும் அவிழ்தத்திற்கு வசப்படாது. பித்தவுளமாந்தை தீரும்.

இவைதையன்றி

"சலரூப வுளமாந்தை" என்றும் ஒருவகையுண்டு.

"நெஞ்சுவலி விலாவிரண்டும் வலித்தலோடு
நெற்றியிடி யடிவயிற் றுவீக்கம்மேலுந்
தஞ்சமிலா திருமல்மலஞ் சிக்கி வீழ்தல்
சலரூப வுளமாந்தை யாகுங் கண்டாய்"

(இ.ள்.)

நெஞ்சுவலி, விலாவலி, நெற்றியிடி, அடிவயிற்றில் வீக்கம், இருமல், மலச்சிக்கல் முதலான குறிகளுடன் காரித் துப்பினால் புலால் நாற்றமடித்தலும் ஏற்படும்,

## உளமாந்தை ரோக காரணங்கள்.

சாற்றவே தானியத்தைக் குறைத்த பேர்க்குஞ்
சடுதியிலே சீவவதை பண்ணி னோர்க்கும்
கோற்றவே குலமடந்தை கற்பழித்துக்
கொடுமையாம் புலால்களவு கட்காமத்தான்

தாலும், சுக்கான் தண்ணீரை உபயோகித்தாலும், வெயிலில் அலைவதனாலும், அதிக வருத்தத்தாலும், பிற ஸ்திரீகளை இச்சிப்பதாலும், பொய் பேசுவதாலும், அடுத்தவர்களைக் கெடுக்க நினைப்பதாலும், அகதி, பரதேசி முதலியோர்களை நிந்திப்பதனாலும், பந்துக்களை வஞ்சித்துச் சாப்பிடுவதனாலும், தாழ்ந்தவர்களை உதாஸீனப்படுத்தி வாய்க்கு வழங்காத சொற்களால் இகழ்ந்து பேசுவதாலும், க்ஷயரோகம் ஸம்பவிக்கும்.

## பிர்மக்ஷய லக்ஷணம்.

மெலிவாகி யிருமலொடு கண்கலங்கல்
    மிகத்தண்ணீர் போலவே சிலேத்மங்காணல்
கலிவாகிக் கோழையொடு இரத்தமுண்டாய்
    நலமான அக்கினிதான் மிகவே தாழும்
கலிவாகிக் கண்ணினொடு உதிர மாழ்கிக்
    காய்ச்சலது எந்நேரங் கலக்கமாகும்
மலிவாகி யருசியொடு சர்த்தியாகல்
    மறையவனுஞ் சயமென்று மதித்திடாயே — (௪)

(இ.ள்.)

தேகம் மெலிவாகும். இருமல், கண்கலங்கும். ***தண்ணீரைப்போன்று கபம் வெளிவரும்.** கோழையில் இரத்தமும் காணும், அக்கினி மாந்தம் ஏற்படும். கண்களும் சிவக்கும். எந்நேரமும் விடாமல் ஜ்வரமடிக்கும், அரோசகமும் வாந்தியும் உண்டாகும்.

## ராஜ க்ஷயம்.

மதித்திட்ட வெதுப்பினொடு தலைநோ யுண்டாய்
    மார்நெஞ்சில் நோயுண்டாய்ச் சிலேட்மந் தோன்றும்
குதித்திட்ட மஞ்சள்போல் கோழைகாணும்
    கோடிதான மிணறழன் றெரிந்து நோவாம்

---

* அந்தந்த க்ஷயரோகத்தின் முக்யமான குறிகளைப் பெரிய எழுத்தில் போடப்பட்டிருக்கின்றன.

பூனை பித்தக்ஷயம் சிலேத்மத் தோடு
புரண்டதோர் வாதபித்த க்ஷயமுமாகும்
காணாத வாதசிலேத் துமக்ஷ யந்தான்
கரும்பித்த சிலேத்மத்தின் க்ஷயமுமாமே — (ச)

ஆகின்ற விகாரக்ஷயந் தொந்த க்ஷயந்தான்
அடங்கலுமே பன்னிரெண்டு விதமுமாகும்
வேகின்ற கஞ்சாவால் மிகுந்தவுப்பால்
மீறியதோர் காரத்தால் மிகமயக்கம்
தோகின்ற மருந்திட்டாற் சுனையினீரால்
சுசியில்லாப் பதார்த்தங்கள் சுக்காள்றண்ணீர்
வாகின்ற வக்கினியால் மிகுந்த வெய்யில்
வருத்தத்தால் க்ஷயரோக மருவுங்காணே — (உ)

காணவே கற்பழித்தல் பொய்யே சொல்லல்
களவாடல் பிறர்பொருளைக் கண்டிச்சித்தல்
ஆணவே யடுத்தோரைக் கெடநினைத்தல்
அகதிபர தேசியரை யகந்தை சொல்லல்
ஊணவே பந்துவைவஞ் சித்தே யுண்ணல்
உதாசினமாய் இழிந்தோரை இகழ்ச்சி பேசல்
வேணவே காதினிற்கே ளாத சொல்லை
மிகச்சொன்னோர் க்ஷயத்தில்வந்து மெலிகுவாரே
(ந)

(இ.ள்.)

க்ஷயரோகம் 12 வகைப்படும். (1) பிர்மக்ஷயம் (2) ராஜ க்ஷயம் (3) வைச்யக்ஷயம் (4) சூத்ரக்ஷயம் (5) வாதக்ஷயம் (6) பித்தக்ஷயம் (7) கபக்ஷயம் (8) வாதபித்தக்ஷயம் (9) வாதகபக்ஷயம் (10) பித்தகபக்ஷயம் (11) விகாரக்ஷயம் (12) தொந்தக்ஷயம் என்பவை.

அதிகமான சஞ்சாவின் உபயோகம், உப்புப் பண்டங்கள், காரம், அதிகமான மயக்கமிருந்தாலும், மருந்திட்டாலும், சுனை நீரின் உபயோகத்தாலும், சுத்தமில்லாத ஆகாராதிகளை உண்ப

வாமேதான் மயிர்க்கூச்சல் மயக்கமாறு
மகத்தான வலியுண்டா யுடல்தான் வேர்க்கும்
தாமேநல் லோராண்டி லிரண்டிற் கொல்லும்
வலிசூத்ர க்ஷயமென்றே நாட்டலாமே — (எ)

(இ.ள்.)

கண்களில் எரிச்சலுண்டாகும். குளிர்ச்சியுடன் கண்ணீர் வடியும். இருமலுண்டாகும். தொண்டை முதலான இடங்களில் புண்களேற்படும். **பொழுது புலரும் சமயத்தில் குளிர் ஜ்வரம் உண்டாகும்**. மயிர்க்கூச்சலெடுக்கும். மயக்கம், உடம்பில் வலி, வியர்வை இவைகள் உண்டாகும். இந்நோய்கண்ட 2 வருடத்திற்குள் உயிரைப் போக்கும்.

## பித்த க்ஷயம்.

என்றதோர் வலிமுதகு மிகச்சுருங்கி
இரைக்குமே இருமலொடு கோழையுண்டாம்
குன்றதோர் குளுமையுண்டா மிரத்தவாந்தி
கொடிதான மூர்ச்சைகுரல் கம்மலாகும்
தின்றதோர் சீவனந்தான் செரிகெடாது
தேகமெங்கும் வெளுத்துமே மஞ்சளாகும்
மென்றதோர் மூத்திரமு மஞ்சள் காணும்
மீறுபித்த க்ஷயமென்றே மொழியலாமே. (அ)

(இ.ள்.)

**விலாப்புறங்கள், முதுகுப்பக்கங்கள் இவைகளில் காணப்படும் மாம்ஸங்கள் சுருங்கும்.** இரைப்பு, இருமல், கோழை முதலியவை அதிகரிக்கும். தேகத்தில் குளிர்காணும். இரத்த வாந்தியெடுக்கும், மூர்ச்சையும், குரற்கம்மலும் உண்டாகும். சாப்பிட்ட ஆகாரம் செரியாது. தேகம் வெளுத்து **மஞ்சள் நிறத்தை யடையும். மூத்திரம் மஞ்சளாக இறங்கும்.**

அதித்திட்ட வரிகுரலாய் திரிகை செய்தல்
அங்கமெல்லாம் மிகநொந்து அனலாய்க் காணல்
சதித்திட்ட இருமலொடு சர்த்தியுண்டாம்
க்ஷத்திரிய க்ஷயமென்று சாற்றலாமே — (ரு)

(இ.ள்.)

உடம்பெரிச்சலுண்டாகும், தலைவலி, நெஞ்சில்வலி இவைகள் ஏற்படும். மஞ்சள் நிறமாகக் கோழை வெளிவரும். அழற்சி, குரல் கட்டல், ஜ்வரம், இருமல், வாந்தி இவைகளும் அதிகரிக்கும்.

## வைசிய க்ஷயம்.

சாற்றவே கையோடு காலு மோய்ந்து
தாக்கான வெயில்காணிற் கடுவிஷம்போல்
வேர்த்துமே வெதும்பலாய்க் காய்ச்சல் காணும்
மிடுக்கான இருமலொடு கோழையுண்டாம்
பார்த்தவே பருத்திபோ லுடல்வெளுத்துப்
பருகியதோ ரசனமிகத் தானுஞ்செல்லா
ஆற்றமை யாராண்டி லதிக மாகும்
அறிந்துரைத்த வைசியனும் க்ஷயந்தானே — (௬)

(இ.ள்.)

கைகாலோச்சல், வெயில் ஏற ஏற விஷம்போல் ஜ்வரம் அதிகரிக்கும். இருமல், கோழை இவைகள் இருக்கும். உடல் பஞ்சைப்போல் வெளுப்பாகும். சாப்பாடு உட்செல்லாது. இந் நோய் நாட்கள் செல்லச்செல்ல அதிகமாகும்,

## சூத்ர க்ஷயம்.

ஆமேதான் கண்ணழன்று நீர்குளிர்ந்து பாய்ந்து
அடிக்கடிதா னிருமியே மிடறுபுண்ணாம்
வேமேதான் மிகவழன்று வெதுப்புண்டாகும்
விடிகிறநே ரந்தன்னில் குளிருஞ்சற்றே

## வாதபித்த க்ஷயம்.

செயலாகத் தேகமெங்கும் மிகக்கடுப்பு
　　தீதான ஜ்வரதாகங் கோழைசர்த்தி
அயலாக அருசியொடு இருமல் ச்வாஸம்
　　யதிகமா யுடம்பெரிவு ஆலோபந்தான்
மயலாக மயக்கமொடு வாய்நீரூறல்
　　மார்க்கமாய் மலம்விருத்தல் நீரருக்கல்
நயலாக நாக்குதடு மிகக் கருத்தல்
　　நாகமாம் வாதபித்த க்ஷயந்தானுமே. (கக)

(இ.ள்.)

தேகத்தில் அதிகக் கடுப்பு, ஜ்வரம், வறட்சி, கோழை, வாந்தி, அரோசகம், இருமல், மேல்மூச்சு வாங்கல், உடம்பெரிச்சல், மயக்கம், வாயில் நீர் ஊறுதல், பேதி, சிறுநீர் அதிகரித்தல், நாக்கு, உதடு, இவைகளில் கருமை நிறம் முதலான குறிகள் காணப்படும்.

## வாதசிலேத்ம க்ஷயம்.

தானான தொனிபேதந் தொண்டைக்கம்மல்
　　சாங்கமாஞ் சுரமோடு சுவாசஞ் சர்த்தி
கானான இருமல்சரீ ரங்கடுப்புக்
　　கடுங்கோழை வெகுபலவீ னமுமேயாகும்
ஆனான அக்கினிமந் தத்திேனாடு
　　அரோசகமாஞ் சரீரமது வெளுப்புண்டாகும்
வானான கால்கையும் வற்றலாகும்
　　வாதசிலேத் துமக்ஷயத்தின் வாறதாமே. (கஉ)

(இ.ள்.)

தொனிபேதம், தொண்டைக்கம்மல், ஜ்வரம், மேல்மூச்சு வாங்கல், வாந்தி, இருமல், தேகக் குடைச்சல், கோழை வெளியாதல், தேக பலஹீனம், அக்கினி பலக்குறைவு, அரோசகம், தேகம் வெளுத்துப்போதல், கைகால் சூம்புதல், முதலான குறிகளுண்டாகும்.

## வாத க்ஷயம்.

நாட்டமாய்த் தலைவலியும் விலாவும் சந்தும்
நடுமுதுகுங் கடுத்துமே சர்த்தியுண்டாம்
தூட்டமாய்ச் சுரமோடு தாகங்காணும்
துடிப்பாகுந் தோளோடு கைகாலெல்லாம்
காட்டமாய்க் கழுத்ததுவு நீண்டுகாணும்
கனமான மதிசார மிருமல் கோழை
தேட்டமாய்ச் சிரஸிடங்கள் குளிர்ந்து காணும்
சீறுமே வாதத்தின் க்ஷயந்தா னென்றே (௬)

(இ.ள்.)

தலைவலியுண்டாகும். விலாப்புறங்கள், நடுமுதுகு முதலானவிடங்களில் கடுப்பு ஏற்படும். வாந்தியெடுக்கும், ஜ்வரம் தாகம் இவையுண்டாகும். தோள், கைகால், கழுத்து இவைகள் நீண்டு காணப்படும். அதிசாரம், இருமல், கோழை, தேகத்தில் குளிர்ச்சி முதலான குறிகளும் ஏற்படும்.

## சிலேத்ம க்ஷயம்.

மொழியவே இருமலொடு கோழைசர்த்தி
மூச்சோடு அருசியா மதிசாரந்தா
னழியவே தொனிபேத முடல்வெளுப்பு
அசதியொடு சந்தாப மாலோபந்தான்
தழியவே மூக்குநீர்ப் பாய்ச்சல் சோம்பல்
சொற்றவரல் சுரமோடு தாயதாபம்
தெழியவே தேகமெங்குஞ் சொறியுண்டாகில்
சிலேத்மத்தின் க்ஷயரோகச் செயலிதாமே (௭)

(இ.ள்.)

இருமல், கோழை, வாந்தி, மேல்மூச்சு, அரோசகம், அதிஸாரம் இவைகளுடன் குரற்கம்மலும் ஏற்படும். உடல் வெளுக்கும், அசதியேற்படும், மூக்கு ஒழுகும், சோம்பல், பேச்சு தடுமாற்றம், ஜ்வரம், எரிச்சல், தேகத்தில் சொறி, இவைகளும் உண்டாகும்.

## தொந்த க்ஷயம்.

விகாரமாந் தொனிபேதஞ் சுரமுண்டாதல்
    மிடுக்காத விருமலொடு இரத்தங் கோழை
நகாரமாம் நாற்றமுட னடுக்கல் பேதி
    நலியாகி மயக்கம்நடு நாக்குக்குள்ளே
வகாரமாம் வட்டம்போல் கறுப்புண்டாதல்
    வடிவமெல்லாங் கற்றாழை நாற்றங்காணல்
துகாரமாம் பேச்சுத்தான் மிகவுண்டாகுந்
    தொந்தமாம் க்ஷயத்தினுட சூக்ஷந்தானே (கரு)

(இ.ள்.)

குரல் பேதம், ஜ்வரம், இருமல், கோழையுடன் இரத்தம் வெளியாதல், வாயில் நாற்றம், நடுக்கல், பேதி, மயக்கம், **நாக்கின் நடுவில் வட்டமான கறுப்புப்புள்ளி, உடம்பெல்லாம் கற்றாழை நாற்றமேற்படுதல்.** அதிகமான பிதற்றல் முதலான குறிகள் காணும்.

## சாத்ய க்ஷயம்.

சூக்ஷியாய் சாத்யத்தைச் சொல்லக் கேளாய்
    சுத்தமாம் பிரமமென்ற க்ஷயத்தினோடு
சாக்ஷியாய் க்ஷத்திரிய க்ஷயத்தோடொக்கச்
    சார்ந்தவை சியக்ஷயமாம் பித்தத்தோடு
தீக்ஷிசிலேத் துமக்ஷயந்தானைந்தும் சாத்யம்
    திட்டமா மருந்துதன்னிற் றீர்க்கலாகுந்
காட்சியாய்க் கனமான செந்தூரத்தில்
    காரணமாம் வயித்தியர்முன் றீருந்தானே. (கசு)

(இ.ள்.)

பிரும்ம க்ஷயம், க்ஷத்திரிய க்ஷயம், வைசிய க்ஷயம், பித்த க்ஷயம், சிலேத்ம க்ஷயம் ஆகிய 5 வகை க்ஷயங்களையும் சிந்தூர மருந்துகளைக்கொண்டு தீர்க்கலாம்.

உ

# சரபேந்திர வைத்ய முறைகள்

## (உளமாந்தை, க்ஷயரோக சிகித்ஸைகள்)

### 1. [1]உளமாந்தைக்குச் சிவனார்வேம்பு எண்ணெய்.

சித்த ரருந்து சிவன்வேம்புந்
 திருவார் நிலத்திற் குமிழ்வேருங்
கொத்தான் கோட்டம் வேம்பாடங்
 குலவுதருசீ ரதிமதுரம்
மெத்த மிளகு சீர்கைப்பும்
 வெந்திடெண்ணெய் விழுங்கினதாற்
பத்தேயெட்டா நாளதனிற்
 பறந்தேயோடு முளமாந்தை. (க)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| சிவனார்வேம்பு | வேம்பாடம்பட்டை |
| நிலக்குமிழம்வேர் | சீரகம் |
| கொத்தான் | அதிமதுரம் |
| கோஷ்டம் | மிளகு |

இவைகளைச்சமனெடுத்து (1 வராகனெடை) இடித்து (நல்லெ)ண்ணெய் 1 சேருடன் குழப்பி அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். இதில் தினந்தோறும் (இருஸ்பூன்ளவு எடுத்து) உட்கொள்ள 8 நாட்களிலோ அல்லது 10 நாட்களிலோ உளமாந்தை நோய் தீரும்.

---

1. உளமாந்தை — க்ஷயரோகத்தின் ஆரம்பநிலை,

## அஸாத்யம்.

தீராத வசாத்யத்தைச் செப்பக் கேளாய்
    சீர்கேடாஞ் சூத்திரவா தக்ஷயந்தான்
வாராத வாதசிலேத் துமக்ஷயந்தான்
    மன்னியதோர் பித்தசிலேத் துமக்ஷயந்தான்
வேராத விகாரக்ஷயம் வாத பித்தம்
    மிடுக்கான தொந்தமாம் க்ஷயத்தினோடு
ஏராத இதுவேழு மசாத்யந்தான்
    எந்தமருந் திட்டாலு மிணசவாகாதே (க்ஏ)

(இ.ள்.)

சூத்ரக்ஷயம், வாதக்ஷயம், வாதசிலேத்மக்ஷயம், பித்த சிலேத்மக்ஷயம், விகாரக்ஷயம், வாதபித்தக்ஷயம், தொந்தக்ஷயம் ஆக இவ்வேழும் சிகித்சைக்கு வசப்படாதவைகள்.

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துத் தண்ணீர் விட்டு அம்மியின் மேல் வைத்து அரைத்து, நல்லெண்ணெய் (3சேருடன்) குழப்பி வைக்கவும். மறுநாள் இதை அடுப்பின்மேலேற்றி நன்றாகக் கொதிக்கவைத்து பக்குவத்திலிறக்கவும். இதை வடிக்கட்டி பத்திரப்படுத்தித்தினம் ஒரு டீ ஸ்பூனளவெடுத்து நக்கிவரவும்.

உளமாந்தை, க்ஷயம் முதலிய ரோகங்கள் தீரும்

---

## 3. சாறணைத்தாளகச் சூரணம்.

சாறணையின் கிழங்குதனைப் பசுவின் பாலிற்
சார்த்தவேய வித்துலர்த்திப் பொடியாய்ச்செய்து
தேறிடுவேர்க் கொம்புகடுக் காய்தான் றிக்காய்
திப்பிலிபொன் னரிதாரமிவை சமனாப்பொடித்து
வீறதனிற் றன்னிலொக்கக் கூட்டித் தேனின்
வெருகடியி னளவுநித்தங் குழைத்துத் தின்றாற்
கூறிடுமவ் வுளமாந்தை நோய்தா னிந்தக்
குவலயத்திற் றங்காது கொடுத்துப்பாரே. (௩)

(இ-ள்)

சாறணைக்கிழங்கு (மலைநாட்டில் விளைந்த சரக்காக இருத்தல் நலம்) 1 பலம் எடுத்துப் பசுவின் பாலில் ஊறவைத்து அடுப்பின் மேலேற்றி எரித்து உலர்த்திவைத்துக்கொள்ளவும். இதனுடன்

சுக்கு
கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
திப்பிலி
சுத்திசெய்து தாளகம்

இவைகளையும் வகைக்கு 1 பலமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு வெருகடி

## 2. உளமாந்தை, க்ஷயத்திற்குக் குண்டலாதி எண்ணெய்.

இயற்பெரிய சங்கிஞெடு மிம்பூரல் சாரணை
வல்லிப்படி யாடாதொடை
இயல்புடைய தூதுவளை குக்குளிகை யாந்தகரை
யிலைகுமிழின் வேருடனே
மயக்கறுவ ராகியொடு சித்தமல்லி மாகாளி
வலியதோர் புலியுடைவேர்
மருவமுக் குரவுசி தேவியோ ரிதழ்நல்ல
வண்முத்த மமுதவல்லி
இயற்பெரிய செவ்வல்லி கொத்தமல்லி நற்சீர
சிறுகற்க டகமுடனே
செய்யதோர் மதுரநெல் லிதிப்பிலிக ருஞ்சீரஞ்
சதகுப்பை வேம்பாடமும்
நயப்பொடு வடித்தெண் ணெய்நக்கி டிற்கய
ரோகமுளை மாந்தையுடனே
நவில்கோழை விப்புருதி முதலான ரோகங்க
ளைந்தோடு மீதுநிசமே. (உ)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| சங்கம் வேர் | இம்பூராவேர் |
| சாரணைசமூலம் | ஆடாதோடை |
| தூதுவேளை | கையாந்தகரை இலை |
| குமிழம்வேர் | நிலப்பனைக்கிழங்கு |
| சித்தாமல்லி | மாகாளிக்கிழங்கு |
| இண்டம்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| சகதேவிவேர் | ஓரிதழ்த்தாமரை |
| கோரைக்கிழங்கு | சீந்தில் கொடி |
| செவ்வல்லிக்கொடி | கொத்தமல்லி விதை |
| நற்சீரகம் | கற்கடசிங்கி |
| அதிமதுரம் | நெல்லிமுள்ளி |
| திப்பிலி | கருஞ்சீரகம் |
| சதகுப்பை | வேம்பாடம்பட்டை |

இந்த சரக்குகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு கொடிவேலிவேர்க் கஷாயம்விட்டு 2 நாட்கள் நன்ருக அரைக்கவும். (இரவு பகல் முழுவதும் கையோயாமல் அரைத்தல் வேண்டும்) இதை ஒரே உருண்டையாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

இரண்டு மரக்கால் திரவம் கொள்ளும் அளவுள்ள ஒரு பானையைக்கொண்டுவந்து அதில் 1 மரக்கால் உப்புப்போடவும். அதன் மேல் மேலே சொல்லியபடி தயாரிக்கப்பட்ட உருண்டையை வைத்து அப்பானையின் கழுத்துவரை மேலும் உப்பைப்போட்டு அடுப்பின்மேலேற்றி 4 ஜாமம் (ஒரு பகல் முடிய) எரிக்கவும். தானுகவே இம்மருந்து ஆறிய பின்பெடுத்து ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இதில் 4 குன்றியளவெடுத்து 10 மிளகு, 10 திப்பிலி இவைகளின் சூரணத்துடன் சேர்த்துத் தேனிற் குழைத்து 40 நாட்கள் சாப்பிடவும்.

உளமாந்தை ரோகம் தீரும். வியாதி பலமாக இருந்தால் இதையே மேலும் சில தினங்கள் உபயோகிக்கவும்.

---

## 5. உளமாந்தைக்குக் கண்டங்கத்திரிநெய்.

கண்டங்கத்தி ரியாடாதோடை யிரண்டுஞ் சமூலங்
கருதிடு மொவ்வொன்றுபல முப்பதாகுந்
துண்டமிடு வில்வஞ்சங்க மமுக்கிரா நற்றாது
வேளைபேய்ப்பு டல்சிறுவ ழுதுணையின்
கொண்டிடுவே ரொவ்வொன்றுக்கீ ரைந்துபலந் தான்குலவு
மிவற்றினை யிடித்தேயிரு தூணிதண்ணீர்
கண்டிடவிட் டெரித்துப்பின் னெட்டி லொன்றாய்க்
காய்ச்சியதைச் சிந்தாமல் வடித்துக்கொள்ளே. (சு)

பசுவின்பால் நாழுழி நெய்நாழுழி பெருத்திடுபூ
சினிக்காய்தண் ணீர்நா ழுழி

(மூவிரல்கொள்ளும்) அளவெடுத்துத் தேனுடன் குழைத்துச் சாப்பிட உளமாந்தை ரோகம் நிவர்த்தியாகும்.

---

## 4. உளமாந்தைக்கு மிருகாங்க ரஸம்.

இரதபற்பஞ் சுவர்ணபற்பங் கழஞ்சொவ்வொன் றுமிசைந்த
முத்துக்கந்த கஞ்சங்கிரண் டுகழஞ்சே
விரவிடுவெண் காரமரைக் கழஞ்செல்லாம் பொடித்துவேலிப்
பட்டையின்க டாயர்விட்டி ரண்டுநாளைக்
கிரவுபகல் விடாதரைத்தே யுண்டையாக்கி யிசைவுபெற
வுலர்த்தி யதையொரு பானைதன்னி
லிருகுறுணி கொள்ளுமுன்னிட் டோர்குறுணி யுப்பிட்டிதன்
மேலேவைத் திடுநீயி சையத்தானே. (௪)

வைத்ததுதன் மேலுமந்தப் பானைவாயின் மட்டுமுப்புச்
சொரிந்தொரு நாற்சாம மெரியிட்டுச்
சுத்தமுற வாறினபின் னெடுத்துநன்றாய்ச் சூரணித்து
நாலுகுன்றி நிறையெ டுத்துமிளகு
பத்துத்திப் பிலிப்பத்துப் பொடித்துக்கூட் டிப்பாகு
றுதேனிற் குழைத்தோர் மண்டலந்தான்
சித்தமா யருந்திவந்தா லுளமாந்தை நோவு
தீர்ந்திடும்நோய் பெலத்திருந்தாற் பின்னுங்
கொள்ளே. (௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இரஸபற்பம் | 40 | குன்றி நிறை. |
| ஸ்வர்ணபற்பம் | 40 | ,, |
| முத்து (சுத்திசெய்தது) | 80 | குன்றி நிறை |
| நெல்லிக்காய் கெந்தகம் | 80 | ,, |
| சங்குத்தூள் | 80 | ,, |
| பொரித்தவெங்காரம் | 20 | ,, |

வரைச் சுண்டக் காய்ச்சவும். இதனை வடிகட்டி ஒரு பாத்திரத்தி லிட்டு அதனுடன்,

பசுவின்பால் 4 படி
பசுவின் நெய் 4 படி
பூசினிக்காய்ச்சாறு 4 படியும் கூட்டிக்கொள்ளவும்.
மிளகு 3 வராகனெடை
செவ்வியம் ,,
தாளீசபத்திரி ,,
இலவங்கப்பத்திரி 1 வராகனெடை
சுக்கு ,,
இலவங்கப்பட்டை ,,
கற்கடசிங்கி ,,
சடாமாஞ்சி ,,
ஏலக்காய் ,,
இலாமிச்சைவேர் ,,
சிறுநாகப்பூ ,,
திப்பிலி 6 வராகனெடை.

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள்செய்து பசுவின் பால்விட்டு நன்றாகவரைத்து முற்சொல்லிய நெய்கூட்டிய சாறு வகைகளில் சேர்த்துக்கொள்ளவும். இதை அடுப்பின்மேல் வைத்துச் சிறுகச்சிறுகக் கொதிக்கவைத்துப் பதமாக்கி இறக்கவும். பின்பு சூடு இருக்கையில் வேறொரு பாத்திரத்தில் வடிக்கட்டவும்.

இந்நெய்யில் $3\frac{3}{4}$ வராகனெடை யெடுத்து, அதனுடன் பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம் இவைகளை வகைக்கு $\frac{1}{2}$பலம் எடுத்து நன்றாக விழுதாக்கிச்சேர்த்து உட்கொள்ளவும்.

இதை அதிகாலையில் 40 நாட்கள் உபயோகிக்கவும். உளமாந்தை, சுவாசகாசங்கள் தீரும். இரவு வேளைகளில்,

சிறுதேக்கு
கடுக்காய்த்தோல்
நெல்லிப்பருப்பு

பிசகாமற் கொண்டந்த நீரில்விட்டுப் பின்மிளகு
தாளிச பத்திரிசெ வியமூன்று
மிசைவுபெற மும்மூன்று காசினிறை பின்னுமில
வங்கப்பத்தி ரிசுக்கில வங்கப்பட்டை
மிசையுறுகற் கடசிங்கி சடாமாஞ்சி யேலம்விலா
மிச்சைநாகப் பூவொவ்வொரு காசெடையே. (எ)

எய்ந்திடுதிப் பிலியாறு வராகனெடை தான்கொண்டி
வையெல்லா மாவின்பால் விட்டரைத்தே
வாய்ந்ததழ லிடைவைத்துப் பதத்திற்காய்ச் சிவடித்
தந்தநெய் யின்முக்க ழஞ்சுதன்னில்
நேர்ந்திடுபே ரீச்சினொடு முந்திரி கைப்பழந்தா
னீடுமரை யரைப்பலங்கொண் டரைத்துக்கூட்டி
யோர்ந்திடுகா லையினோர் மண்டலமுட் கொண்டா
லுளைமாந்தை சுவாசகா சங்கடீரும். (அ)

கிருமி திற்பிச கில்லையிர வுதன்னிற்
சிறுதேக்குக் கடுக்காய்நெல் லிப்பருப்புப்
பாரமுறு கண்டங்கத் திரிமிள கொவ்வொன்று
பகர்ந்திடுமோன் றரைக்காசினிறைபொடித்துக்கொண்டு
வாரமுற விரண்டுபடி தண்ணீர்விட்டு ழக்காய்வள
மாகக்காய்ச்சி யருந்திடி னெஞ்சுநோவு
சேரிருமல்சளி யீளைகயஞ் சுவாசஞ் சிலேட்டு
மபீனி சமவையுங் கூடத்தீரும். (கூ)

(இ ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிச்சமூலம் 30 பலம் | |
| ஆடாதோடைச்சமூலம் ,, | |
| வில்வ வேர் | அமுக்கிராக்கிழங்கு வேர் |
| சங்கம்வேர் | தூதுவேளை வேர் |
| பேய்புடல் வேர் | சிறுவழுதுணை வேர் |

முதலான சரக்குகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து, சிறுசிறு துண்டுகளாக்கிக் கல்லுரலில் இட்டு இடித்து 8 மரக் கால் சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும்

சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். இதனுடன் வறுத்த திப்பிலிச்சூரணம் $3\frac{1}{2}$ குன்றி போட்டுப் பருகவும்.

உளமாந்தம் தீரும்.

---

## 7. உளமாந்தைக்குச் சிறுதேக்குக் குடிநீர்.

சிறுதேக்குச் சுக்குத்திப் பிலிபொன்னு வாரைதிரா
யைந்துமும்மூன் றுகாசெடை கொண்டிடித்து
மறுவிலிரு நாழிநீர்விட் டுழக்காகக் காய்ச்சிவடித்
துத்தேன்விட்ட ருந்திலுளை மாந்தைதீரும்
பெருபசுவின் பால்பசுவி னெய்துவ ரம்பருப்புப்
பீர்க்குமுருங் கைப்பிஞ்சு பொன்னுங்காணி
சுருவெனு மீன்கௌதா ரியுடும்பு காடைதொன்று
முயல்கோழி முட்டைபத்தி யத்துக்காமே. (கக)

(இ–ள்)

சிறுதேக்கு
சுக்கு
திப்பிலி
பொன்னுவாரை
திராய்

இவ்வைந்து சரக்குகளையும் வகைக்கு 9 காசெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின்மேல்வைத்து ஒரு உழக்காகும்வரை (எட்டிலொன்றாக) வற்றவைத்து இறுத்துத் தேன்விட்டுச் சாப்பிட உளமாந்தை தீரும்.

**பத்தியம்.**

பசுவின்பால், பசுவின்நெய், துவரம்பருப்பு, பீர்க்கம் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பொன்னுங்காணிக்கீரை, சுருமீன்,

**கண்டங்கத்திரிவேர்**
மிளகு

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை விதமெடுத்து தண்ணீர் சின்னபடி ஒன்று விட்டு உழக்காக வற்றவைத்து வடிக் கட்டி உட்கொள்ள நெஞ்சுநோய், இருமல், சளி, கபம், சுவாச ரோகங்கள், கபபீனஸம், முதலானவைகள் தீரும்.

---

## 6. உளமாந்தைக்குச் சிறுதேக்குக் குடிநீர்

இன்னமொன்று சிறுதேக்குத் தேவதா ரமிசைந்த
பெருங்குரும்பை சிறுவழுது ணைநற்சீந்தில்
பொன்முசுட்டை சுக்காடாதோ டையினோ டுபொருந்து
கண்டங்கத் தரியொவ்வொன் றிரண்டுகாசின்
றன்னிறைகொண் டிடித்திரண்டு படிநீர்விட் டுத்தழலி
னெரித்துழக் காக்கியொரு காசினிறையாய்
மன்னிடுதிப் பிலிவதக்கிப் பொடித்துத்தூ விவகையா
கக்குடித்து வந்தாலுளை மாந்தைதீரும்.

(இ-ள்)

சிறுதேக்கு
தேவதாரு
பெருங்குரும்பை
சிறுவழுதுணைவேர்
சீந்தில்கொடி
பொன்முசுட்டைவேர்
சுக்கு
ஆடாதோடை வேர்
கண்டங்கத்திரி வேர்

ஆகிய சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை விதமெடுத் துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாகவிடித்து,

பசுவின் நெய் 2 படி ,,

இவைகளையொன்று கலந்து,

| | |
|---|---|
| செவ்வியம் | திப்பிலி |
| கண்டத்திப்பிலி | சுக்கு |
| சித்திரமூலம் | கற்கடசிங்கி |
| சிறுதேக்கு | சடாமாஞ்சில் |
| கிராம்பு | கோஷ்டம் |
| பொரித்த இந்துப்பு | வாலுளுவையரிசி |
| சீரகம் | இலவங்கப்பட்டை |
| மிளகு | யானைத்திப்பிலி |
| ஏலக்காய் | ஓமம் |
| சிற்றரத்தை | |

ஆகிய சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீத மெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பசுவின்பால் விட்டு நன்ருக அரைத்துக் கஷாயம்சேர்ந்த நெய்யுடனே குழப்பி அடுப் பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும். பின்பு இதனை வடிக்கட்டிக்கொண்டு தினம் 3 காசெடை வீதமெடுத்து உட் கொள்ளவும்.

40 நாட்களுள் உளமாந்தை தீரும்.

குறிப்பு :— 74 நெ. சுவடியில் கல்கசரக்குகளில் கடுகுரோகிணியும் திராக்ஷையும் அதிகப்படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

---

## 9. உளமாந்தைக்கு முயல் நெய்.

### (வேறு)

அந்தமுய விறைச்சியைம் பதுபலந் துண்டித்தே
யைங்குறுணி நீர்விட்டு வேவித்துக் கொண்டு

உடும்பு, காடை, முயல் முதலானவைகளின் மாம்ஸம், கோழி முட்டை, இவைகளை வேண்டியமட்டும் சேர்த்துக்கொள்ளலாம்.

---

## 8. உளமாந்தைக்கு முயல் நெய்.

முயலினூன் பதினாறு பலமிடித்துத் தண்ணீர்மொழிந்
　　திடுமைங்கு றுணிவிட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி
நயவாடா தோடைச்சாறு குறுணியிரு நாழிநற்
　　பசுவின்பா லுமந்த வளவோ நெய்யு
மியல்பாக வவ்வளவு தானேகூட் டியிதிற்
　　செவியந்திப் பிலிதிப்பி லிமூலஞ் சுக்குச்
செயலுறுசித் திரமூலங் கற்கடக சிங்கிசிறு
　　தேக்குச்ச டாமாஞ்சி கிராம்பு கோட்டம் (கஉ)

கோட்டமுட னிந்துப்பு வாலுளுவை யரிசிகுறித்
　　திடுசீர கமிலவங் கப்பட்டை மிளகு
நாட்டமுள வானைத்திப் பிலியேல மோமம்நல்
　　லரத்தையிவை வகைக்கோரி ரண்டுகா செடையா
யிட்டமுறக் கொண்டாவின் பாலினைவிட் டரைத்தே
　　யெடுத்துப்போட் டெரித்திறக்கித் தினமூன்று காசின்
வாட்டமிலா நிறையருந்தி னுளைமாந்தை தானு
　　மண்டலத் திலோடி விடுங்கொண்டு பாரே. (கங)

(இ-ள்)

முயல் மாம்ஸம் 16 பலம் எடுத்து நறுக்கி ஒரு ஈயம்பூசிய பாத்திரத்திலிட்டு 5 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும்.

இதனுடன்,

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | 1 மரக்கால் |
| பசுவின் பால் | 2 படி (5 சேர்) |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து ஆடாதோடையிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துச் சேர்த்துக் கொண்டு, பசுவின்நெய் 10 சேர்விட்டு ஒன்றாகக்குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும். நன்றாக ஆறியபின் தேன் வேண்டிய அளவுவிட்டுக் குழப்பித் தினந்தோறும் ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து (3 வேளையாகப் பகிர்ந்து) சாப்பிடவும். நாளுக்கு நாள் உளமாந்தை ரோகம் குறைவடையும்.

---

## 10. உளமாந்தைக்கு ஸைந்தவாதி எண்ணெய்.

இந்துப்புத் திப்பிலிபொன் னரிதாரஞ் சிறுதேக்
    கிருப்பைப்பூக் கடுக்காய்தான் றிக்காய்வெண் காரம்
முந்திரி கைப்பழஞ் சுக்குக்கடுகு நெல்லி
    முள்ளிகர்க்க டகசிங்கி கடுகு ரோணி
வந்தவிவை யொவ்வொன்று நாற்கழஞ்சு பொடித்துவழு
    துணைகையாந் தகரைபி ராய்சடைச்சி சங்கு
கந்தமுறு பொரும்பிலுட னின்புரா தேட்கடை
    யினோடு நிலக்கடம்பின் னவற்றிலைகள் கொள்ளே.
(கசு)

கொண்டிடித் தொவ்வொன்றுக்கோ ராறுநாழிச் சாறு
    குறையாமல் வடித்தந்தப் பொடியைப் போட்டு
மண்டிடுநல் வெயிலினிடை வைத்துச்சாற் வற்றியபின்
    பொடித்தொரு தேங்காய்நெய் யிற்பிசறிப்
பண்டுபோல் வெயிலினிடை யொருநாள்வைத் துப்பத
    முறவே மற்றைநா ளெடுத்துத் தேனின்
மண்டலந் தானரைக் கழஞ்சுகொண் டாலங்கே
    வந்திருந்த வுளைமாந்தை யகன்று போமால். (கஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| பொரித்த இந்துப்பு | சுத்திசெய்த தாளகம் |
| திப்பிலி | இலுப்பைப்பூ |
| சிறுதேக்கு | கடுக்காய்த்தோல் |

தந்திடுநீர் கம்பளத் தால்வடித் துப்போக்கிச்
சவுக்கார மதிமதுரந் தேவதா ர
மிந்துப்புத் தூதுவளை கற்கடக சிங்கியே
லந்திப்பி லிமிளகு முத்தக்கா சு
கந்தமுறு மாமஞ்ச ளமுக்கிராநன் னாரிகண்டங்
கத்திரியா டாதோடை யிம்புரா வே. (கச)

இன்பமுறு விழலரிசி யக்கிராக் காரமிலங்
கிடுசீர கம்வகைக்கு முக்கழஞ் சுகொண்டு
பின்பவற் றைநல்லா டாதோடைச் சாறுவிட்டுப்
பிசகாம லரைத்தந்த விறைச்சி தன்னி
லன்புறச் சேர்த்திரு நாழிநெய் விட்டுபதத்
திலழலி னெரித்தூரிய தேன்விட் டிறக்கித்
தின்பரெனிற் றினமெலுமிச் சங்காயி னளவோர்தினத்
தக்கோர்தி னங்குறையு முளை மாந்தை நோயே. (கரு)

(இ ள்)

முயல் மாம்ஸம் 50 பலம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி 5 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி நன்றாக வேகவைக்கவும். பின்பு இதை ஒரு கம்பளியில்போட்டு மூட்டையாகக்கட்டி நீர் முழுவதும் வடியுமாறு செய்யவும்.

இதனுடன்,

| | |
|---|---|
| சவுக்காரம் | அதிமதுரம் |
| தேவதாரம் | பொரித்த இந்துப்பு |
| தூதுவளை | கற்கடசிருங்கி |
| ஏலக்காய் | திப்பிலி |
| மிளகு | கோரைக்கிழங்கு |
| மரமஞ்சள்தோல் | அமுக்கிராக்கிழங்கு |
| நன்னாரிவேர் | கண்டங்கத்திரிவேர் |
| ஆடாதோடை | இம்புரல்மூலம் |
| விழலரிசி | அக்கிராக்காரம் |
| சீரகம் | * |

* 74 செ. சுவடியில் "சிறு தேக்கும்" சேர்க்கப்பட்டிருக்கிறது.

கருதுமனோ சிலையிரண்டு மோவ்வொன்று நாலுகழஞ்
சிவையொன் றுய்க்கூட்டி நொச்சியிலைச் சாற்றி
லிரவுபகல் நாலுநா ளரைத்திரண்டு குன்றி
யெடையுண்டை செய்தந்த வுண்டையினி லொன்றுஞ்
சரிமிளகு திப்பிலித்தூ ளொருவராக னெடையுந்
தகவுறுதே னதிற்கொள்ள வூளமாந்தை தீரும். (கஅ)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, தாளகம்

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை எடுத்து முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலியாகச்செய்து, பின்பு தாளகத்தையிட்டு நன்றாக அரைக்கவும். பின்பு,

சுத்தி செய்த மனோசிலை 5 வராகனெடை
தாமிரபற்பம் 5 வராகனெடை

இவ்விரண்டையும் கூட்டி நொச்சி (கரு) இலைச்சாறுவிட்டு நான்கு நாட்கள் (பகலிலும், இரவிலும்) விடாமலரைத்து 2 குன்றி மணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும். மிளகு, திப்பிலி, இவ்விரண்டின் தூள் 1 வராகனெடையுடன் ஒருமாத்திரையும் எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

உளமாந்தை நோய் தீரும்.

குறிப்பு :— இதில் காய்ச்சல், கழிச்சல் கூடியிருந்தால் அதற்கான கஷாயம், கற்கங்களில் இடத்தீரும் என்று 74 செ. சுவடியில் காணப்படுகிறது.

## 12. உளமாந்தைக்கு குறிஞ்சாக் கல்கம்.

உத்தரத்திற் போகின்ற குறிஞ்சாவே ரையுயர்
ஸோமவா ரத்திற்காப்புக் கட்டிச்

| | |
|---|---|
| தான்றிக்காய்த்தோல் | பொரித்த வெண்காரம் |
| திராக்ஷைப்பழம் | சுக்கு |
| கடுகு | நெல்லிமுள்ளி |
| கடுக்காய்ப்பூ | கடுகரோகிணி |
| * | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதம் எடுத்துச் சூரணம் செய்துகொள்ளவும்.

| | |
|---|---|
| வழுதுணையிலைச்சாறு | கையாந்தகரையிலைச்சாறு |
| பிராயிலைச்சாறு | சடைச்சிச்சாறு |
| சங்கம் இலைச்சாறு | பொரும்பிலிச்சாறு |
| இம்புரசல்மூலச்சாறு | தேட்கொடுக்குப்பூண்டுச்சாறு |
| நிலக்கடம்பிலைச்சாறு | |
| * | |

இவ்வகைச்சாறுகள் தனித்தனியே 6 படி ($7\frac{1}{2}$சேர்)க்குக் குறையாமல் எடுத்து முன்சொன்ன சூரணத்தைப் போட்டுக் குழப்பிவெய்யிலில் வைக்கவும். சாறுகள் முழுவதும் வற்றிய பின் தேங்காயெண்ணெய் விட்டுப் பிசறிக்கொள்ளவும். மறுநாள் மறுமுறை வெய்யிலில் வைத்துப் பானையில் பத்திரப்படுத்தவும்.

இச்சூரணத்தில் 20 குன்றியளவெடுத்துத் தேன்விட்டுக் குழப்பிச் சாப்பிட்டுவர உளமாந்தை நோய் தீரும்.

---

## 11. உளமாந்தைக்குத் தாளேஸ்வர பற்ப மாத்திரை.

இரதமரி தாரங்கெந்த கமூன்று மொவ்வொன்றி
ரண்டுகழஞ்* சிசைத்திடுதாம் பிரபற்பத் துடனே

---

* மிளகும், சுக்கும் 74 நெ. சுவடியில் அதிகப்படியாக உள்ளது.

* அழிஞ்சில் இலைச்சாறு, தூதுவளைச்சாறு, சங்கிலிச்சாறு, சங்கம் இலைச்சாறு ஆகியவைகள் அதிகமாக 74 நெ. சுவடியில் காணப்படுகின்றன.

## 14. உளமாந்தைக்குப் பாவன ஹரிதகீ சூரணம்

கடுக்காயின் பொடியிரண்டு பலங்கொண்டு நாழிக்
    காடியினி லூறவைத்து மற்றை நாளி
லெடுத்தெலுமிச் சம்பழச்சா றொருநாழி விட்டே
    யணைந்திடுமூன் றுநாளன்வெ யிலினிடை வைத்து
விடுத்திடுநீர் சுவறினபி னெடுத்துநிழ லிடத்தின்
    மிகவுலர்த்திப் பொன்முசுட்டை வேர்தூது வளைவேர்
படுத்தகண்டங் கத்தரிவேர் மிளகறணை வேலிப்
    பருத்திவே ரிந்தவகை யைந்துவேருடனே
(உக)

செங்கழுநீர் நெல்லிமுள்ளி கோட்டஞ்சா திக்காய்
    திப்பிலிகற் கடகசிங்கி சிறுதேக்குக் கிராம்பு
மங்காத விந்துப்பும் மஞ்சிட்டிப் பத்தும்
    வகைக்கொருமுக் கழஞ்சுகொண்டு பொடித்திட்ட
பொடியுந்
தங்கிடந்தம் மருந்துஞ்சேர்த் துயர்தேன் விட்டுத்
    தருவெயிலின் வைத்தொருதோற் பாக்களவு நித்தந்
துங்கமுறக் கொண்டருந்தி லுளமாந்தை நீயே
    சுகமாயிங் கிருந்திடெனத் தான்விலகிப் போமால்.
(உஉ)

(இ ள்)

கடுக்காய்த்தோல் 2 பலமெடுத்து அதனுடன் காடி 1 படி விட்டு ஊறவைக்கவும். மறுநாள் இதனுடன் 1 படி எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துவைக்கவும். 3-வது நாளன்று இக்கலவையை வெயிலில் வைக்கவும். சாறுகள் ஆவியானபின் கடுக்காய்த்தூளை யெடுத்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

| | |
|---|---|
| பொன்முசுட்டைவேர் | தூதுவேளை வேர் |
| கண்டங்கத்தரி வேர் | மிளகறணை வேர் |
| வேலிப்பருத்தி வேர் | செங்கழுநீர்க் கிழங்கு |
| நெல்லிமுள்ளி | கோஷ்டம் |

சித்தமாச் செவ்வாயிற் கொண்டுவந்து நறுக்கித்தேங்
காய்தன்னிள நீரிலூற வைத்தே
பித்தகைத்தேங் காய்ப்பாலிற் பட்டையினை யரைத்திட்
டெலுமிச்சங்கா யளவிப்பா லதிலேகொண்டால்
சத்திநிற் கும்பேதியாகுமிகு தியானாற்
றண்ணியமோ ருஞ்சோறுங் கொடுக்கத்தீரும். (கசு)

(இ-ள்)

வடக்குத்திசையை நோக்கிச் செல்லும் குறிஞ்சா வேருக்கு திங்கட்கிழமையன்று காப்புக்கட்டி செவ்வாய்க்கிழமை வெட்டிக் கொண்டு வந்து இளநீரில் ஊறப்போடவும். மறுநாள் இதை யெடுத்துத் தேங்காய்ப்பால் விட்டு எலுமிச்சம்பழப் பிரமாணம் (விழுது) ஏற்படும் வரை அரைத்துச் சாப்பிடவும். வாந்தி நிற்கும். பேதி நன்றாக ஆகும். பேதி அதிகமானல் மோர் சாதம் சாப்பிடவும். பேதி நிற்கும்.

---

## 13. உளமாந்தைக்கு வேங்கைப்பிட்டு.

வேங்கைமரத் தோலுடனே மென்குறுவை நென்மாவு
மாங்கனையக் கொண்டுபிட் டாக்கியே—பாங்குடனே
யெண்ணெய்தனிற் றோய்த்தருந்த வென்றுமுளை மாந்தை
புண்ணுறுதல் சீயொழுகல் போம். (உய)

(இ-ள்)

வேங்கைமரப்பட்டை
குறுவை அரிசி மாவு

இவ்விரண்டையும் சமமெடுத்துத் தண்ணீர் சிறிது விட்டூற வைத்து இடித்துப்பிட்டாகச் சுடவும். பின்பு இதில் ஒரு பிடி யெடுத்து நல்லெண்ணெயில் தோய்த்துச் சாப்பிடவும்.

உளமாந்தை, புண் ஏற்படல், சீயொழுகல், முதலான பற்பல ரோகங்களும் தீரும்.

---

ஜாதிக்காய்
கற்கடகசிங்கி
கிராம்பு
மஞ்சிட்டி
திப்பிலி
சிறுதேக்கு
பொரித்த இந்துப்பு

முதலான சரக்குகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீத மெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதனுடன், முன் சொன்ன பாவன கடுக்காய்ச் சூரணத்தையும் ஒன்று கலந்து வேண்டிய அளவு தேன் கூட்டி வெயிலில் வைக்கவும். பின்பு இதில் ஒரு பாக் களவெடுத்துத் தினந்தோறும் உட்கொள்ள உளமாந்தை ரோகம் தீரும்.

---

## 15. உளமாந்தைக்குத் தேற்றான் சூரணம்.

தேற்றினெண்காயின் விதைபோக்கிய பொடிசேர் பலமெட்
டாற்றிரிதா ரந்துரிசிந் நாற்பல மாகியதூள்
சாற்றுமுத்து ளையுக்கூட்டி வெருகடி தன்னளவு
போற்றுவெந்நீ ரிற்கொளினு ளமாந்தை பின்போய்
விடுமே.
(உ௩.)

| | | |
|---|---|---|
| தேற்றான்கொட்டைச் சூரணம் | 8 | பலம் |
| சுத்தி செய்த தாளகம் | 4 | ,, |
| ,, துரிசு | 4 | ,, |

இவைகளையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைக்கவும். இதனை ஒரு வெருகடியளவெடுத்து வெந்நீருடன் சாப்பிடவும். உளமாந்தை ரோகம் தீரும்.

**குறிப்பு:—** இச் சூரணத்தை நிதானமாக உபயோகிக்கவும். அதிகம் சாப்பிட்டால் அன்னத்துவேஷம் உண்டாகும்.

---

## 16 உளமாந்தைக்கு மல்லி எண்ணெய்.

கொத்தமல்லி நிலக்குமிழ்வேர் சிவனார்வேம்பு
    கோட்டமதி மதுரம்வேம் பாடத்தோடே
யுத்தகருஞ் சீரகந்தூ தவளைசமூல
    முயர்மிளகு வகைக்குமுக்க ழஞ்சுகொண்டு
வைத்தரைத்து நாழியெண்ணெய் விட்டுக்காய்ச்சி
    மருவுபதத் திறக்கியோர்வரா கனெடையெடுத்து
நித்தமினி தருந்திவந்தா லுளைமாந்தையங்கே
    நில்லாதோர் மண்டலத்திற் சொல்லாதேகும். (௨௪)

(இ-ள்)

| | |
|---|---|
| கொத்தமல்லி விதை | நிலக்குமிழ்வேர் |
| சிவனார் வேம்பு | கோட்டம் |
| அதிமதுரம் | வேம்பாரம்பட்டை |
| கருஞ்சீரகம் | தூதுவளைச்சமூலம் |
| மிளகு | |

இவைகளை வகைக்கு 3¼வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் (பசுவின் பால்விட்டு) நன்றாக வரைத்து நல்லெண்ணெய் 5 சேருடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும். தினந்தோறும் 1 வராகனெடையளவு அருந்திவந்தால் 40 நாட்களுக்குள் உளமாந்தை நோய் தீரும்.

---

## 17. உளமாந்தைக்குத் துடரி எண்ணெய்.

சொலக்கேளா யின்னுமொன்று உளமாந்தைக்குத்
    துடரிவேர்முள் ளிவேர்வேம் பாடத்துடனே
நிலக்குமிழ்வேர் பூலாவேர் கடுக்காய்த்தான்றி
    நிம்பபஞ்ச கங்கோட்டம் நெல்லிமுள்ளி
வலுத்தவதி மதுரமிவையொவ் வொன்று மூன்று

இவைகளை வகைக்கு ஒவ்வொரு பலம் எடுத்து நன்றாக அரைத்து உருண்டையாகச் செய்துகொள்ளவும். பின்பு இதனை உள்நாக்கில் 9 நாட்களுக்குத் தடவவும்.

**பத்தியம்.**

உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பண்டங்களைத் தவிர்க்கவும்.

---

## 19. உளமாந்தை சுவாசகாசத்திற்குக் கோட்ட எண்ணெய்

ஆவின்பா லுழக்குழி தன்னிற்கோட்ட
மானைத்திப் பிலிசெவிய மாத்தைமாஞ்சில்
மேவுசிறு மூலங்கற் கடகசிங்கி
வெட்பாலை யரிசிவிழ லரிசிதான்றி
நாவிலிரு சீரகத்தோ டிந்துப்புக்கடுக்காய்
தருவகைக்கு முக்கழஞ்சு கொண்டரை கரைத்து
வேவழலின் வடித்திரண்டு வராகனெடை கொண்டால்
விரவிரும லுளைமாந்தை காசமுத லகலும்

(உள)

(இ ள்)

பசுவின் பால் 16 படியுடன்;

| | |
|---|---|
| கோஷ்டம் | யானைத்திப்பிலி |
| செவ்வியம் | சிற்றரத்தை |
| சடாமாஞ்சில் | திப்பிலி |
| கற்கடசிங்கி | வெட்பாலையரிசி |
| விழலரிசி | தான்றித்தோல் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| பொரித்த இந்துப்பு | கடுக்காய்த்தோல் |

இ[illegible]ளை வகைக்கு 3 கழஞ்சு வீதமெடுத்துச் சூரணித்துப் பால்விட்டு நன்றாக அரைத்து (நல்லெண்ணெய் 5 சேருடன்

வராகனெடை யொருபடியெண்ணயிற் பொடித்துப்
போட்டு
நலத்தினுறக் காய்ச்சிரு வராகனெடை யெடுத்து
நாள்சிலகா லைப்போதி லருந்தத்தீரும் (உரு)

(இ-ள்)

| | |
|---|---|
| துடரிவேர் (இண்டம்வேர்) | |
| முள்ளிவேர் | வேப்பிலை |
| வேம்பாரம்பட்டை | வேப்பம்பூ |
| நிலக்குமிழ்வேர் | வேப்பங்காய் |
| பூலாவேர் | வேப்பம் வேர் |
| கடுக்காய்த்தோல் | கோஷ்டம் |
| தான்றித்தோல் | நெல்லிமுள்ளி |
| வேப்பம்பட்டை | அதிமதுரம் |

இச்சரக்குகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணஞ்செய்து, நல்லெண்ணெய் ½ சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும். இந்தயெண்ணெயில் 2 வராகனெடை யெடுத்துக் காலை வேளையில் (பாலுடனே) உட்கொள்ளவும்

உளமாந்தை ரோகம் தீரும்.

---

## 18. உள்நாக்கு வளர்ந்திருந்தால் அதற்கு மருந்து

ஓட்டடை சுண்ணும்பு வெருகிலையொவ் வோர்பலமே
திட்டமாக கொண்டரைத்துச் சேர்த்தோருண்டை
—கொட்டியா
யுண்ணாக்கிற் றேய்த்திடுக வொன்பதுநா ளோடிவிடு
முண்ணுபுளிப் புப்பை யொழித்து. (உசா)

(இ-ள்)

| | |
|---|---|
| ஒட்டடை | சுண்ணும்பு |
| எருக்கிலை | |

குறிப்பு :— இம்மருந்தில் "திப்பிலி" 3 தடவை கூறப்பட்டுள்ளதால் அதை 3 மடங்கு எடுத்துக்கொள்ளவும்.

---

## 21. உளமாந்தை புண்ணுக்குப் பச்சிலை மருந்து.

குன்றி முசுட்டை கொடிவேலி
வேலிப்பருத்தி குன்றுமல்
நின்றோர் நிலத்திற் குமிழினிலை
நீதிபயிலும் பீலியிலை
சென்றே பிடிக்கும் சிற்றமல்லி
சேரவரைத்தா வின்பாலி
லன்றே குடிக்கி லுளமாந்தை
யகன்றே சீழ்ப்புண் ணாறிடுமே. (உசு)

(இ-ள்)

குன்றிமணி இலை
கொடிவேலி இலை
நிலக்குமிழ் இலை
சிற்றமல்லி இலை
முசுட்டை இலை
வேலிப்பருத்தி இலை
பீலி (உகாய் இலை)

இவைகளின் விழுது தனித்தனி ஒரு சுண்டைக்காயள வெடுத்துப் பசுவின் பாலுடன் குழப்பிப் பருகவும்.

உளமாந்தை, சீழுடன் கூடிய புண்கள், முதலானவை தீரும்.

---

## 22. உளமாந்தைக்கு நிலக்குமிழ் எண்ணெய்

நிலக்குமிழ் துடரிபூலா நிலவினில் நிம்பபஞ்சம்
பலப்படி யஞ்சுகொள்ளப் பலசரக் கதனைக்கேட்க
நலப்படு கோட்டமுள்ளி நற்கடு நெல்லிதான்றி
குலப்படு மதுரம்பாடம் கூட்டிநீ யெண்ணெய்கொள்ளே.
(உஎ)

குழப்பி) அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும். இதில் 2 வராகனெடை யெடுத்து உட்கொள்ள இருமல், உளைமாந்தை, காஸம் முதலிய நோய்கள் அகலும்.

---

## 20. ஈளை இருமலுக்குத் திரிகடுகாதிச் சூரணம்.

திரிகடுகு திரிபலையிந் துப்பு கோட்டந்
 தேவதா ரஞ்செவியஞ் சிறுமூலத்துடனே
விரவிடுதிப் பிலியானைத் திப்பிலியே யன்றி
 விளங்குவழு துணையாடா தோடைகண் டங்கத்
தரிசங்கு தூதளையின் வேரினுறு புரத்தோல்
 சமனாகக் கொண்டுலர்த்திப் பொடிசெய்து தேனி
லுரிமையுடன் வராகனெடை யிரண்டு கொண்டா
 லுளைமாந்தை யுடனிரும லீளை தீரும். (உ-அ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லி வற்றல் |
| பொரித்த இந்துப்பு | கோஷ்டம் |
| தேவதாரு | செவ்வியம் |
| திப்பிலி | யானைத்திப்பிலி |
| வழுதுணைவேர் | ஆடாதோடை வேர் |
| கண்டங்கத்தரிவேர் | சங்கம் வேர் |
| தூதுவளைவேரின் பட்டை | |

இவைகளைச் சமனெடை யெடுத்துக் காயவைத்துக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இச் சூரணத்தில் 2 வராகனெடையளவெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

உளைமாந்தை, ஈளை, இருமல் முதலான ரோகங்கள் தீரும்.

இதற்கு மருந்தாவது :—

சாதிக்காய் 3 வராகனெடை
சாதிப்பத்திரி $1\frac{1}{4}$ ,,
அதிவிடயம் 2 ,,
ஏலக்காய் $1\frac{3}{4}$ ,,
அதிமதுரம் 2 ,,
தண்ணீர்விட்டான் கிழங்கு 5 வராகனெடை
இந்துப்பு $1\frac{1}{4}$ வராகனெடை
கோரைக்கிழங்கு 1 பலம்
பொன்னாங்காணிவேர் $\frac{1}{2}$ ,,
சிறுநெரை வேர் $\frac{1}{2}$ ,,
சிற்றாமுட்டி வேர் $\frac{1}{2}$ ,,
நன்னாரிவேர் $\frac{1}{4}$ ,,
பேராமுட்டி வேர் $\frac{1}{4}$ ,,

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்துப் பசுவின்பால் விட்டு ஊறவைத்து அம்மியில் வைத்து நன்றாகவரைக்கவும். இதனை ஒரு படி பசுவின் பாலுடன் குழப்பிச் சந்தன விழுது $\frac{1}{2}$ பலம் போட்டு கனிந்த வாழைப்பழம் 10 அதனுடன் போடவும். பின்பு

நல்லெண்ணெய் 2 படியும்
பசுவின் நெய் 3 படியும்

சேர்த்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும். இதனுடன் புனுகு 3 வராகனெடை கூட்டிக்கொள்ளவும்.

இம்மருந்தில் 3 வராகனெடையளவெடுத்துத் தினம் 2 வேளை வீதம் 19 நாட்களுக்குச் சாப்பிடவும். உளைமாந்தை ரோகம் தீரும்.

## பத்தியம்:

உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

## 25. உளமாந்தை க்ஷயரோகம், பல நசலுக்கும் நெய்.

பசுவின்னெய் பசுவின்பாற் குழம்பிளநீர் மூன்றும் பகர்
வகைக்கோர் நாழிகொண்டு படர்சீந்தில் கிழங்கு
முசுமுசுக்கை வேரோடு வெள்ளரிப்பழங் கார்நெய்தல்
முதிர்கிழங் கின்னான்கு மொவ்வொன்றை வந்து
பலமா

மிசைதருசெங் கழுநீரின் கிழங்காறு பலமா
மேலஞ்சீ ரகங்கோட்ட மிலவங்கத் துடனே
வசையிலாப் பேரீச்சம் பழமூர் திரிகைவண்
பழமும்வ கைக்கிரண்டு பலமாகக் கொள்ளே. (௩௩)

கொண்டுசிறுக் கீரைவேர் தாமரையின் வளையங்
குலவுபொன் னாங்கண்ணி யின்வேர்நன் னாரியின்வே
ரெண்டருமும் மூன்றுபலஞ் சண்பகப் பூமுல்லை
மெற்றிடுவேர் தானுமரை யரைப்பல மேயாகுங்
கண்டவிவை யெலாமுலர்த் திப்பொடித் துப்போட்டுக்
கருங்காலி வைரமி ழைத்தொரு நானாழி
யுண்டிடு நீர்தன்னிற் போட்டூற வைத்தேயுறப்
பிசைந்தச்சி ராயையெடுத் தெரிந்து காய்ச்சே. (௩௪)

காய்ந்திடுபின் னிருநாழி யாகக் கண்ட
கடாயமுஞ் சேர்த்தங் கொருநா ளூறவைத்து
வாய்ந்தமறு நாளெரித் துமெழுகு பதந்தனில்
வடித்துநெல் லிற்புட மாவைத்தி ரண்டுபோதும்.
சேர்ந்தவுளை மாந்தைமுத லெவையுந் தீருந்
தெரித்திடுபத் தியம்பசுவி னெய்பா லப்பாம். (௩௫)

(இ-ள்)

பசுவின் நெய்
பசுவின் பால்
இளநீர்
இவைகள் வகைக்கு 1படி

**பத்தியம் :**

பசுவின் பால், பசுவின் நெய், உப்பு முதலானவைகளை வேண்டிய அளவு கூட்டவும்.

---

## 26. கயத்திற்குக் "காந்தியாதி தைலம்."

நல்லெண்ணெய் படியொன்றைப் படியேகொம்ப
 ரக்கதனு னவில்கடாயஞ்
சொல்லிடுநற் றயிர்மேற்றண் ணீர்ப்படிநான்
 கிவையெல்லாந் துலங்கச்சேர்த்து
வல்லதனிற் கடுகுரோ கணிகோரைக்
 கிழங்கினோடு மாற்கிழங்கு
மல்லூறுசந் தனமுள் ளங்கிவித்து
 சதகுப்பை மஞ்சள் கோட்டம் (௩௬)

செப்பிவற்றோ டமுக்கிராக்கி மூங்குதிரி
 பலையறிய தேவதாரந்
தப்பிலரோ ணுகமும்வகைக் கோர்மூன்று
 வராகனெடைத் தினமெநீர்விட்
டொப்பவரைத் துக்கட்டி யெரித்திறக்கி
 மூழ்கினனு யர்சுவாசம்
வெப்பமுறு நெடுங்காலச் சுரத்தினொடு
 கயமெவையும் விலகிப்போமால் (௩௭)

(இ-ள்)

நல்லெண்ணெய் 1 படி.
கொம்பரக்குக் கஷாயம் 4 படி.
ததிமஸ்து (தயிர் தெளிவுநீர்) 4 படி.

இவைகளை யொன்று கலந்து,

சிந்தில் கிழங்கு முசுமுசுக்கைவேர்
வெள்ளரிப்பழம் கருநெய்தல் கிழங்கு

இவைகள் வகைக்கு 1 பலம்.

செங்கழுநீர்க்கிழங்கு 6 பலம்
ஏலக்காய் சீரகம்
கோஷ்டம் கிராம்பு
பேரிச்சம்பழம் திராக்ஷைப்பழம்

இவைகள் வகைக்கு 2 பலம்

சிறுகீரையின் வேர்
பொன்னாங்காணி வேர்
தாமரையிலையினுட்சுருள்
நன்னாரிவேர்

இவைகள் வகைக்கு 3 பலம்

சண்பகப்பூ $\frac{1}{2}$ பலம்
முல்லை வேர் $\frac{1}{2}$ பலம்

இவைகளை யெல்லாவற்றையும் சிறு சிறு துண்டுகளாக்கி வெய்யிலில் உலர்த்திச் சூரணஞ்செய்துகொள்ளவும். கருங்காலி மரம் வைரமாக எடுத்து இழைப்புளிகொண்டு மெல்லியதாக இழைத்துக்கொண்டு 4 படி சுத்தஜலம் விட்டூறவைத்து மறுநாள் நன்றாக அதை யிடித்துப் பிழிந்துகொள்ளவும். இதனை அடுப்பின்மேலேற்றி 2 படியாகும்வரை வற்றக் காய்ச்சவும். மறுநாள் அதனுடன் முன் சொல்லிய தூளைப்போட்டு அன்று முழுவதும் ஊறவைத்து, பசுவின் நெய், பால், இளநீர் இவைகளையும்விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து இறக்கவும். இந்நெய்யை நெல்லினுள் (15 நாட்களுக்குக்) குறையாமல் புதைத்துவைக்கவும். இதனை இருபொழுதும் கொடுத்துவர உஷ்ணமாந்தை தீரும்.

| | |
|---|---|
| கடுகரோகிணி | கோரைக்கிழங்கு |
| மருளங்கிழங்கு | சந்தனத்தூள் |
| முள்ளங்கி விரை | சதகுப்பை |
| மஞ்சள் | கோஷ்டம் |
| அமுக்கிராக்கிழங்கு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| தேவதாரு | காட்டுமிளகு |

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்து முன் சொன்ன ஏதேனும் ஒரு திரவம் விட்டு நன்றாக வரைத்துக் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும்.

இத்தைலத்தினால் தலைமுழுகிவரச் சுவாசம், நாட்பட்டக் காய்ச்சல், க்ஷயம் முதலான ரோகங்கள் தீரும்.

குறிப்பு :

கொம்பரக்கை டோலாயந்திரமாகக் கட்டிக் கஷாயம் காடுப்பது வழக்கமாகும்.

---

## 27. க்ஷயத்திற்குப் "பவழபற்பம்"

பவளத்தை முயலிரத்தம் வெண்முதல்விட்
    டரைத்துவில்லைப் பண்ணிப்பின்பு
நவில்குகையைத் தோர்குகையான் மூடிமேற்சீ
    லைமண்ணும் நயக்கச்செய்தே
யவமறக்குக் குடபுடமிட் டெடுத்தனைய
    பற்பத்தை யாவினெய்யிற்
சுவையுறவோர் பணவெடைகொண் டிடிற்காசங்
    கயரோகஞ் சுவாசந்தீரும். (ந.அ)

(இ-ள்)

பவழத்தைச் சுத்திசெய்த முயலின் இரத்தம் விட்டு நன்றாக அரைத்து சிறு வில்லைகளாகச் செய்து ஒரு குட்டான்

குகையில் வைத்து மற்றொரு குகையினால், மூடிச் சீலைமண் செய்து குக்கிடபுடமிடவும். (1 முழ, நீள, அகல, உயரமுள்ள புடம்) இப்பற்பத்தில் 3½ குன்றி நிறையெடுத்துப் பசுவின் நெய்யுடன் உட்கொள்ளவும்.

க்ஷயரோகம், சுவாசம் முதலானவை தீரும்.

---

## 28. க்ஷயத்திற்கு "வாசாதி கிருதம்"

இசையாடா தோடை யிலைசிந்திற் கொடியின்
கடாயம்வைத் திறுத்துக் கொண்டு
பசுவு தவுநெய் மூங்கிலுப்புத் திப்பிலி
மதுரம் பயிலக் கூட்டி
மிசையெரி யினெத்திறக் கிச்சர்க்க ரைசேர்த்
தருந்திவர் தால்வெய்ய குன்மங்
திசைதெரி யாத்தலை மயக்கங் குட்டம்
ரோகிகங் காசங்கீர்ந் துபோமால் (௩௯)

(இ-ள்)

- ஆடாதோடையிலை
- சீந்திற்கொடி

இவ்விரண்டையும் (வகைக்கு 2 பலம் வீதமெடுத்து நறுக்கி 8 மடங்கு ஜலம் விட்டு நாலிலொன்றாகக்) காய்ச்சிக்கொள்ளவும்.

பின்பு இக் கஷாயத்துடன்,

பசுவின் நெய் (1 சேரும்)
மூங்கிலுப்பு
திப்பிலி
அதிமதுரம்

வாரிரத்த மேகங்கள் க்ஷயரோகத்
தோடுதலை மயக்கந்தீரும் (சஉ)

(இ-ள்)

சிறுநாகப்பூ
சீரகம்
பெருங்கோரைக்கிழங்கு
சடாமாஞ்சில்
சந்தனத்தூள்
வெண்சாறணைவேர்
திப்பிலி
நெருஞ்சிமுள்
ஏலக்காய்
அதிமதுரம்
தாளீசப்பத்திரி
அதிமதுரம்
காட்டுமிளகு
சன்னலவங்கப்பட்டை
கருஞ்சீரகம்
கொத்தமல்லிவிதை
பேரீச்சங்காய்
சீந்திற் சர்க்கரை
தாமரைத்தாது
மூங்கிலுப்பு
சாதிக்காய்
கொடிமிந்திரிகைப் பழம்
கிச்சிலிக்கிழங்கு
குங்குமப்பூ
கிராம்பு

இவைகளை வகைக்கு 2 வராகனெடை யெடுத்து, மேற் சொன்ன சரக்குகளுக்குச் சமனெடை சீனிச்சர்க்கரை சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதனுடன் அப்பிரக சிந்தூரம் 1 வராகனெடை சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு வராகனெடையளவு சூரணத்தைப் பசுவின் நெய்யுடன் குழப்பி உட்கொள்ளவும். தினம் 2 வேளை சாப்பிடவும்.

பாண்டு, நீரடைப்பு, நீர்க்குத்தல், விக்கல், காமாலை, உள் சுரம், இரத்த மேகங்கள், க்ஷயரோகம், தலை மயக்கம் முதலான ரோகங்கள் தீரும்.

இவற்றின் சூரணங்கள் வகைக்கு (2 வராகனெடையும்) போட்டு ஒன்றாகக் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனுடன் சர்க்கரை சிறிதளவு கூட்டிச் சாப்பிட்டுவரக் (தினம் ஒரு கழற்சியளவு இருவேளை பசுவின் பாலுடன்) குன்மம், தலைமயக்கம், அரோசகம், காசம் முதலான ரோகங்கள் தீரும்.

---

## 29. க்ஷயரோகத்திற்கு "பஹா ஏலாதிச் சூரணம்"

சிறுநாகப் பூச்சன்ன விலவங்கப்
பட்டையிரு சீரகங்கள்
பெருகோரைக் கிழங்குகொத்த மல்லிவித்துச்
சடாமாஞ்சில் பேரீச்சங்காய்
நறைவளர்சந் தனஞ்சீந்திற் சர்க்கரைவெண்
சாறணைவேர் நளினத்தாது
திறமுறுதிப் பிலமூங்கி லுப்புநெருஞ்
சிக்காய்சா திக்காயேலம் (௪௰)

ஏலுறுதண் கொடிமுந்தி ரிகைப்பழநல்
லதிமதுர மிலங்குபாரில்
கொலுநிலப்ப னைக்கிழங்கு தாளிபத்
திரியினொடு குங்குமப்பூச்
சாலநல வதிமதுரங் கிராம்பரேணு
கம்வகைக்குத் தகும்வராகன்
மேலிரண்டி னிறைகொண்டு சீனிசம
மாகவிதன் விரவச்சேரே (௪௧)

சேரிவற்றி னப்பிரகசிந் தூரமோர்வ
ராகனெடை சேர்த்திட்டாவின்
சீருறுநெய் தன்னிலொரு வராகனிறை
யிருபொழுதுந் தின்றும்பாண்டு
நீரடைப்பு நீர்க்குத்து விக்கல்கா
மாலையொடு நெடுநாள் வெப்பு

## 30. க்ஷயரோகத்திற்கு "ஹரிதகீ லேகியம்"

கொடிவேலி வேர்வசம்பு விழலரிசி
திப்பிலிதக் கோலஞ்சுக்குக்
கடுமையுறு மிளகுமுத்தக் காசொவ்வோர்
பலமிசைத்த கடுக்காயிற்செய்
பொடியிருபத் தோர்பலஞ்சி வதைவேர்த்தோல்
பலமேழ்பொ ருந்தத்துள்செய்
தடுபனையின் பழவெல்ல முப்பதினோ
டைந்துபல மதனிற் கூட்டே. (+ரு)

கூட்டியிசைந் திடக்குழைத்துத் தினம்பலமொன்
றருந்திவந்தாற் குடலின்வாத
மாட்டியலைத் திடுசோமங் கயரோக
மாற்றுமை யாமைசூலை
மூட்டமுறு குலைப்பருவி பெரும்பாடு
விப்புருதி முதலாவெல்லாம்
நீட்டமுறு மொழுபரித்தேர்க் கதிரவன்முன்
பனியென நீங்குந்தானே. (ருச)

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | வசம்பு |
| விழலரிசி | திப்பிலி |
| தக்கோலம் | சுக்கு |
| மிளகு | கோரைக்கிழங்கு |

இவைகள் வகைக்கு 1 பலம்

கடுக்காய்த்தோல் 2 பலம்
சுத்திசெய்த சிவதைவேர்த்தோல் 7 பலம்
பழய பனைவெல்லம் 35 பலம்

இவைகளை யொன்றுசேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து லேகியம்போல் செய்துகொள்ளவும்.

இதனைத் தினந்தோறும் 1 பலம் வீதம் எடுத்து உட்கொள்ளவும்.

குடல் வாதங்கள், சோமரோகம் (Leucorrhoea) க்ஷய ரோகம், ஆமசூலை, ஆமரோகம், பெரும்பாடு, விப்புருதி முதலான பற்பல ரோகங்கள் தீரும்.

## 31. கயத்திற்கு "கடுகரோகிணி மருந்துகள்"

கடுகரோ கணியரைக்கால் வராகனெடை
 செவ்வாழைக் கனிதானொன்று
திடமுறுதேற் றாங்கொட்டை காற்பலங்கொண்
 டரைத்தொருமுத் தினந்தின்றாலுங்
கடியமுது தளைச்சாறு தேன்பலமோவ்
 வொன்றினொடு கடுகரோணிப்
பொடியரைக்கால் வராகனெடை யருந்தினுமுன்
 னாள்கயநோய் புறப்பட்டோடும். (சரு)

(இ-ள்)

கடுகரோகணி $\frac{1}{8}$ வராகனெடை
செவ்வாழைப்பழம் ஒன்று
தேத்தான்கொட்டை $\frac{1}{4}$ பலம்

இவைகளை யொன்றுகலந்து 3 நாட்களுக்குச் சாப்பிடவும்.

(2) தூதுவேளைச்சாறு 1 பலம்
தேன் 1 பலம்
கடுகரோகிணிச் சூரணம் $\frac{1}{8}$ வராகனெடை

3 நாட்கள் சாப்பிடவும். க்ஷயரோகம் தீரும்.

குறிப்பு :-
இம்மருந்துகளைச் சேர்த்தால் ஒருதடவை மலப்பிரவிருத்தி உண்டாகும்.

## 32. க்ஷயத்திற்கு "தூதுவேளை நெய்"

தூதளையின் பழமுமதி னிலைச்சாறு
 மாவினெய்யுந் தூயதாக
வோதலுறும் படியொவ்வொன் றின்னதிற்றிப்
 பிலிமூல முயருரோணி
கோதறுசீ ரகமிளகு வகையினுக்கோர்
 பலம்பொடித்துக் கூட்டிக்காய்ச்சி
பாதரத்தி னுடன்வேளைக் கரைப்பலங்கொண்
 டாற்கயநோ யகன்றுபோமே. (௪௬)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| தூதுவேளைப்பழச்சாறு | 1 | படி |
| தூதுவேளை இலைச்சாறு | 1 | படி |
| பசுவின் நெய் | 1 | படி |

இவைகளை யொன்று கலந்து,

கண்டத்திப்பிலி
கடுகரோகிணி
சீரகம்
மிளகு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துப் பொடிசெய்து, சாறு கலந்த நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இந்நெய்யில் தினம் ½ பலம் உட்கொள்ளக் "கயரோகந்" தீரும்.

---

## 33. க்ஷயரோகம் முதலானவைகளுக்கு வல்லாரை நெய்.

வல்லாரைச் சாறுபடி நான்குசீ
 தேவியார் மன்னுஞ்சாறு



நல்லாவி நெய்யினொடு கரிப்பாலைச்
 சாறுதனி நாழி நாழி
யெல்லா நன் றும்பசுவின் பாலிரண்டு
 படியிளநீ ரிரண்டு நாழி
சொல்லாரு மிவையெல்லாங் கலந்திடிவற்
 றிடுமருந்து சொல்லுவோமால் (௪௭)

சொல்லவுரி செங்கழுநீர்க் கிழங்குகுன்றி
 வேர்கோட்டந் துகளிலாத
நல்லகர்ப் பூரமதி மதுரங்கோ
 ரோசனைநந் நாற்கழஞ்சு
மல்லலுறு பசுவின்பால் விட்டரைத்து
 மூன்றுநாள் மருவக்காய்ச்சி
மெல்லவரு நாலாநாள் பதத்திறக்கி
 வடித்துக்கொள் விரவித்தானே (௪௮)

வடித்ததனி லோர்கழஞ்சு நெய்காலைப்
 போதருந்தி வந்தாற் கைகா
லடுத்தெரி விருமல்பயம் வயற்றெரிவு
 நாக்குலர்த் லலரி யெட்டி
தொடுத்திடுநஞ் சருந்துதுயர் முதலியநோய்
 பலவகலுஞ் சுகத்தை நல்கு
மெடுத்துரைத்த வித்தகைய வல்லாரை
 நெய்மிகவு மினியதாமே (௪௯)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வல்லாரைச்சாறு | 4 | படி |
| சிதேவிச் செங்கழுநீர்ச் சாறு | 1 | ,, |
| பசுவின் நெய் | 1 | ,, |
| கரிப்பாலைச் சாறு | 1 | ,, |
| பசுவின் பால் | 2 | ,, |
| இளநீர் | 2 | ,, |

இவைகளை யொன்று கலந்து,

அவுரி கோஷ்டம்

குன்றிவேர் அதிமதுரம்
செங்கழுநீர்க்கிழங்கு

இவைகள் வகைக்கு 5 வராகனெடையெடுத்து இடித்துச் சூரணித்துப் பசுவின் பால்விட்டு அரைத்துக்கொண்டு சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பிக்கொள்ளவும். இதனைசிறுகச் சிறுக 3 நாட்கள் கொதிக்கவைத்து 4வது நாளன்று பக்குவப்படுத்தி இறக்கவும். பின்பு நெய்யை வடிக்கட்டி இத்துடன் கட்டிக் கற்பூரம், கோரோசனை இவைகளைத் தனித்தனி 5 வராகனெடையெடுத்துச் சூரணித்துப் போட்டு, ஒரு சீசாவில் பத்திரப் படுத்தவும்.

இந்நெய்யில் $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்துக் காலை வேளையில் உட்கொள்ளவும்.

இருமல், கபம், வயிற்றில் எரிச்சல், நாக்கு உலர்தல், அலரி எட்டி முதலான விஷங்கள் முதலிய பற்பல நோய்கள் தீரும். இது மிகவும் விசேஷமான "வல்லாரை நெய்" முறையாகும்.

---

## 34 க்ஷயத்திற்கு "ஆமலகாதி நெய்"

வருத்தநெல் லிக்காய்ச்சா றுதேவதா
ளிச்சாறு வகைக்குச் சேர்நான்
சுகத்துவளர் பசுவின்பா லிருநாழி
நெய்நாழி யதனிற்கூட்டித்
தொகுத்தெரித்துப் பதத்திறுத்து வராகனெடை
யிரண்டு கொண்டாற் சொல்லுமிந்தச்
சகத்தினுறு க்ஷயமுதனோ யெலாமகனு
மலடிக்குந் தனையருண்டாம். (௩௰)

(இ-ள்)

நெல்லிக்காய்ச் சாறு 4 சேர்
தேவதாளிச் சாறு 4 „



பசுவின் பால் 2 படி ($2\frac{1}{2}$ சேர்)
பசுவின் நெய் 1 படி ($1\frac{1}{4}$ சேர்)

இவைகளை ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் 2 வராகனெடை யளவெடுத்து உட்கொள்ளவும். க்ஷயரோகம் தீரும். மலடிகளுக்கும் குழந்தைகள் உண்டாகும்.

---

## 35. க்ஷயத்திற்கு "திரிகடு மாத்திரை"

திரிகடுகு கிராம்புசா திக்காயிந்
துப்பரத்தை சிறுநாகப்பூக்
கருதிடுமுத் தக்காசு தாளிசபத்
திரியோடுகற் கடகசிங்கி
தருமுயிற்று முட்டையக்கி ராக்கார
முயர்காந்தஞ் சாற்றுகின்ற
பெருநெல்லி கடுதான்றி கத்தூரி
மஞ்சிட்டிதிப் பிலிமூலங்கள் (௩௧)

உரைத்திடிவற் றோடுவெள்ளி பொன்னெவையுஞ்
சமன்கூட்டி யுயர்கையாந்த
கரைச்சாறு விட்டொருமுச் சாமமரைத்
தோர்மிளகு கடுப்பவுண்டை
யுருட்டியதி லோருண்டை வராகனெடை
திப்பிலித்தூ ளொடுதேன் கூட்டி
யருந்தியுட்கொ ளிற்க்ஷயநோய் தீர்ந்திடுமென்
றுணர்வுடையோ ரரைந்திட்டாரே (௩௨)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கிராம்பு |
| சாதிக்காய் | பொரித்த இந்துப்பு |

| | |
|---|---|
| சிற்றரத்தை | சிறுநாகப்பூ |
| கோரைக்கிழங்கு | தாளிசப்பத்திரி |
| கற்கடசிங்கி | முசுருமுசுட்டை |
| அக்கிராக்காரம் | சுத்திசெய்த காந்தம் |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | திப்பிலிமூலம் |
| மஞ்சிஷ்டிக்கிழங்கு | |

இவைகளை யொன்றாகூட்டிக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு 3 ஜாமங்கள் அரைக்கவும். பின்பு, வெள்ளிரேக், தங்கரேக், கஸ்தூரி இம்மூன்றையும் வேறொரு கல்வத்திலிட்டுக் கையான் தகரைச் சாறுவிட்டு நன்றாக ஒன்றாகும் வரை அரைத்தபின் முன்சொன்ன விழுதையுஞ் சேர்த்து ஒன்று கலந்து நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும்.

திப்பிலித்தூள் 1 வராகனெடையுடன், இம்மாத்திரையி லொன்றைவைத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடக் கய ரோகம் தீரும்.

---

## 36. கயத்திற்குச் "சொர்ணச் செந்தூரம்"

சுத்திபுரி மெல்லியபொற் றகட்டைப்பொன்
　　னிமிளையெனச் சொல்லுகின்ற
வத்தையெலு மிச்சைநறும் பழச்சாற்றில்
　　மத்தித்துமே லணையப்பூசி
யுயத்தவொரு மடக்கினிடை வைத்துமூ
　　டிச்சேலை யுறுமண் செய்து
பத்திரமாய்க் கஜபுடமொன் றிட்டெடுத்தா
　　லினியசொன்ன பற்பமாகும் (சரு)

பற்பமதை நீடரசம் பட்டைச்சாற்
　　றிலுமெருக்கம் பாலிலேயும்



பொற்புறவே மதித்திலிங்கஞ் சமங்கூட்டி
　　யரைத்துப்பின் பூனைக்காலித்
தாபதவேர்ச் சாறுசிறு புள்ளடிச்சா
　　றதினான்கு தரமதித்துச்
சொற்பெறுகாட் டெருவினிலைம் புடமிடவே
　　சொன்னசிந் தூரமாகும் (ருச)

(இ-ள்)

சுத்திசெய்த பொன் தகட்டின்மேல் பொன்னிமிளையை எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாகவரைத்து ஒரே சீராகப் பூசி ஒருஅகலில் வைத்து, அதன்வாய் பொருந்தும்படியான வேறொரு அகலைவைத்து, மூடிச் சீலைமண் செய்து சாக்கிரதையாகக் கஜ புடம் இடவும்.

அப் பற்பத்தை மறுபடியும் கல்வத்திலிட்டு அரசம்பட்டைச் சாறும், எருக்கம்பாலும் விட்டு மத்தித்து அதற்குச் சமனெடை சுத்தி செய்த லிங்கம் கூட்டி நன்றாக அரைக்கவும். பின்பு பூனைக் காலி வேர்ச்சாறு, சிறு புள்ளடிச்சாறு இவைகளை விட்டு நான்கு தடவைகளரைத்து காட்டெருவை யடுக்கிப் புடமிடவும். இவ்வாறு 5 தட்வைகள் இடவும். சொர்ண சிந்தூரம் கிடைக்கும்.

குறிப்பு:

காட்டெரு – தானாகவே உலர்ந்த சாணி.

---

## 37. சொர்ண சிந்தூரம்

கருப்பிரதம் விட்டரைத்தக் கந்தகத்தைப்
　　பொற்றகட்டிற் கலக்கப்பூசி
யுருப்படவே யுலர்த்தியிந்தப் படியேழு
　　தரம்பூசி யோர் மடக்கிட்
டுருப்பமுறச் சேலைமண்செய் தொருமூன்றக்
　　கஜபுடந்தா னடுத்துச்செய்யிற்

நிருப்பயில சிந்தூரமா மிதையருந்திற்
கயமெவையுந் தீருமன்றே (௫௫)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" நெல்லிக்காய் கெந்தகம்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாகக் கருப்பாகும் வரை அரைத்துப் பொற்றகட்டின்மேல் பூசவும். இவ்வாறு 7 முறை பூசிவிடவும். பொற் தகட்டில் இக் கலவை ஏறிவிடும். பின்பு இதையொரு அகலில்வைத்து மற்றொரு வாய் பொருந்தும்படியான அகலினால் நன்றாக மூடிச் சேலைமண் செய்துக் கஜ புடம் இடவும். இவ்வாறு மும்முறை செய்யவும். உயர்ந்த சிந்தூரம் கிடைக்கும்.

இதில் நெல்லெடையெடுத்துத் (தேனுடன் குழைத்து) அருந்திவரக் கயரோகம் தீரும்.

---

## 38. கயத்திற்கு வெள்ளி பற்பமும், செந்தூரமும்.

கிளர்வெள்ளித் தகடுதனைத் தழற்காய்ச்சிப்
பெரும்பாகற் கிழங்குச்சாற்றிற்
றெளிவுபெற வேழுதரந் தோய்த்திடவே
சுத்தியாந் திகழுமீதில்
வளர்மணித்தக் காளியிலையை முலைப்பால்விட்
டரைத்தினிது மருவப்பூசி
யொளிர்மடக்கிட் டொருமடக்கான் மூடியெழு
சேலைமண்செய் யுகந்துதானே (௫௬)

செய்தபின்காட் டெருமுட்டை தன்னிலொரு
கஜபுடஞ்செய் திடமதாகக்
கைதருநற் பற்பமதா மிதற்குநிக
ரிலிங்கமதைக் கருவேற்பட்டை



யெய்தலுறு கஷாயம்விட் டரைத்தெருக்கம்
பாலினரைத் தெழுகால்யானை
மெய்தருதிண் புடமிடிற்சிந் தூரமாங்
கயரோய்க்கு மேவகல்கே (௫௭)

(இ-ள்)

வெள்ளித்தகடை அனலின்மேல் வைத்துக் காய்ச்சி பெரும் பாகலிலைச்சாற்றில் தோய்க்கவும். 7 தடவைகள் இம்மாதிரி செய்யச் சுத்தியாகும்.

மணித்தக்காளி இலையை முலைப்பால் விட்டரைத்து அத் தகட்டின்மேல் பூசிக் காயவைத்து ஒரு வாயகலமுள்ள மடக்கில் வைத்து அம் மடக்கின் வாய்க்குத் தக்கபடி வேறொரு மடக்கினால் மூடிச் சீலைமண் செய்யவும்.

நன்கு உலர்ந்தபின் காட்டெருவை அடுக்கி அதனுள் வைத்துக் கஜபுடம் இடவும். புடம் ஆறியபின் பற்பத்தை யெடுத்துக்கொள்ளவும். பின்பு, இதற்குச் சரிநிறை சுத்திசெய்த லிங்கம் எடுத்து கருவேலம்பட்டை கஷாயம் விட்டு ஒருநாள் முழுவதும் அரைக்கவும். மறுநாள் எருக்கம்பால்விட்டு அரைத்து வில்லைகளாகச் செய்து அகலில் வைத்துக் கவசித்து ¾ அடி நீள அகல, உயரமுள்ளதாக வரட்டிகளையடுக்கி அதில் வைத்துப் புடமிடவும். துல்யமான சிந்தூரம் கிடைக்கும்.

கயரோய்க்கு இச் செந்தூரம் அல்லது வெள்ளி பற்பம் இவைகளில் ஒன்றை ஒரு அரிசி எடை எடுத்து (தேனில் குழைத்து)ச் சாப்பிடவும்.

---

## 39. கயத்திற்கு "அசுவகந்தாதி கிருதம்"

விண்டிடுகல் லமுக்கிராக்கி முன்குபல
நூறுசங்கம் வேர்சிவதை
கொண்டிடுசா றணைப்பிரண்டை மிளகரணை
நெருஞ்சில்பெருந் குமிழ்சீன் வில்வங்

கண்டங்கத் தரிபோரா மல்லிசிற்று
    மல்லிமுன்னைக் கருதுமின்ப
மண்டுபெரு வாகைசிறு வழுதுணைபா
    திரியிவற்றின் மருவுவேர்கள் (௫௮)

மருவிடுசீந் தில்விழுது குளச்செந்நெல்
    செவியநீர் வள்ளியின்ற
னுருவுருநற் கிழங்கிவையெல் லாம்வகைக்குப்
    பலம்பத்தா யொருங்குகூட்டி
நெரியவிடித் திருதூணி தண்ணீர்விட்
    டெட்டிலொன்றாய் நேரக்காய்ச்சித்
தருமிதனை வடித்துக்கொண் டாவுறுநெய்
    நானாழி சாரக்கூட்டே (௫௯)

கூட்டியதிற் படமடக்கி யதிமதுரந்
    தேட்கொடுக்கி குங்குமப்பூத்
தேட்டமுறு சூரியபத் திரியரத்தை
    கொடுவேலி தேவதாரங்
காட்டினுறு வெட்பாலை யரிசியரே
    ணுகந்தகரங் கடுகரோணி
யீட்டமுறு விழலரிசி சமுத்திராப்பச்
    சையுடனெ வச்சாரந்தான் (௬௰)

தானமுறு சந்தனங்கா ரகிலிலவங்
    கப்பட்டை சத்திச்சார
மானமுறு மரமஞ்சள் கத்தூரி
    மஞ்சளொடு மணற்கற்பூரங்
கானுறுதிப் பிலிமூலந் திரிகடுகு
    திரிபலைநற் காரவுப்போ
டானவிவை யாவும்வகைக் கோர்நான்கு
    வராகனிறை யரைத்துச்சேரே (௬௧)

சேர்த்துமெது வாகநாற்றி னமெரித்திட்
    டோரைந்தாந் தினம்வடித்துப்



பேர்த்தெடுத்திப் பிலித்தூளெண் பலங்காந்த
    பற்பந்தா மிரபற்பங்கள்
கூத்திடொவ்வோர் பலமிரண்டு படிதேன்சேர்த்
    தொருமாதங் குலவுநெல்லி
னூர்த்தபுடம் வைத்திரண்டு வராகனிறை
    கொளிற்கயநோ யாகிதீரும் (௬௨)

(இ-ள்)

அமுக்கிராக்கிழங்கு 100 பலம் இடித்து அதனுடன்,

| | |
|---|---|
| சங்கம்வேர் | சுத்திசெய்த சிவதைவேர் |
| சாறணைக்கிழங்கு | மிளகாணை |
| நெருஞ்சில் | பெருங்குமிழ்வேர் |
| வில்வவேர் | கண்டங்கத்திரிவேர் |
| பேராமல்லிவேர் | சிற்றுமல்லிவேர் |
| முன்னைவேர் | பெருவாகைவேர் |
| சிறுவழுதுணைவேர் | பாதிரிவேர் |
| சீந்தில் விழுது | செந்நெல் |
| செவ்வியம் | தண்ணீர்விட்டான் கிழங்கு |

இவைகளை வகைக்கு 10 பலமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து 8 மரக்கால் சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகும்வரை வற்றக் காய்ச்சவும். இக் கஷாயத்தை வடிக்கட்டி அதனுடன்,

பசுவின் நெய் 4 படி (5 சேர்) சேர்க்கவும்.

| | |
|---|---|
| தாழை | தேட்கொடுக்கு வேர் |
| அதிமதுரம் | சூரியபத்திரி |
| குங்குமப்பூ | கொடிவேலிவேர் |
| சிற்றரத்தை | வெட்பாலையரிசி |
| தேவதாரு | தகரவிதை |
| காட்டுமிளகு | விழலரிசி |
| கடுகரோகிணி, | எவச்சாரம் |
| சமுத்திராப்பச்சை | அகில்கட்டை |

சந்தனத்தூள் சத்திச்சாரம்
லவங்கப்பட்டை கஸ்தூரிமஞ்சள்
மரமஞ்சள் தோல் திப்பிலிமூலம்
கற்பூரம் திப்பிலி
சுக்கு கடுக்காய்த்தோல்
மிளகு நெல்லிமுள்ளி
தான்றித்தோல் இந்துப்பு
வெங்காரம்

இச் சரக்குகளை வகைக்கு 4 வராகனெடை வீதமெடுத்துச் சூரணித்து ஷை கஷாயம் விட்டு நன்றாகவரைத்து, கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின்மேலேற்றி 4 நாட்கள் மந்தாக்கினியாய் எரிக்கவும். 5வது தினத்தன்று நெய்யைப் பக்குவப்படுத்தி இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். இந் நெய்யுடன் திப்பிலிச் சூரணம் 8 பலம், காந்த பற்பம், தாமிரபற்பம் இவைகள் வகைக்கு 2 பலமும், சேர்த்துக்கொள்ளவும். பின்பு தேன் $2\frac{1}{2}$ சேர் விட்டுக் குழப்பி ஒரு பழகிய பானையிலிட்டு நன்றாக மூடி 1 மாதம் வரை நெல்லிற்குள் புதைத்துவைக்கவும்.

பின்பு இந்நெய்யையெடுத்துத் தினம் 2 வராகனெடையளவெடுத்து உட்கொள்ளவும். கயரோகங்கள் தீரும்.

குறிப்பு:— சூரியபத்திரிக்கு எருக்கிலை என்ற பொருள் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

---

## 40. கயத்திற்குக் "கூஷ்மாண்ட ரஸாயனம்"

பூசினிக்காய் சிறுகவரிந் துலர்த்துவற்றல்
 நூறுபலம் பொருந்தநெய்விட்
டாசகலு வறுத்தினிதாய்ப் பொடிசெய்து
 சீனிசம மாகக்கூட்டி
வாசமூறு சுக்குமிள கேலம் வகைக்
 கோர்பலந்தேன் மருவநாழி
நேசமுறச் சேர்த்தொருமுக் கழஞ்சுதினங்
 கொளிற்கயநோய் நீங்குமன்றே



(இ-ள்)

பூசனிக்காயைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தவும். இதில் 100 பலம் எடுத்து பசுவின் நெய்விட்டு இளவறப்பாய் வறுத்துக்கொள்ளவும். பின்பு இதைக் கல்லுரலிலிட்டு இடித்துச் சரியளவு சீனி சேர்த்து, சுக்கு, மிளகு, ஏலக்காய் இவைகளை வகைக்கு 1 பலம் கூட்டித் (தேன்) $\frac{1}{4}$ சேரும் விட்டு நன்றாக இடித்து லேகியபதமாக்கிக்கொள்ளவும். இதில் $3\frac{3}{4}$ வராகனெடையளவெடுத்துத் தினமும் உட்கொள்ளக் கய நோய் தீரும்.

---

## 41. கயத்திற்குக் "கூஷ்மாண்ட கிருதம்"

பற்றிடுபூ சினிக்காய்ச்சா றிருநான்கு
 படியினொடு படிநெய்விட்டே
யுற்றிரண்டு படியாகக் காய்ச்சியொரு
 நாற்படிபா லொருங்குவிட்டு
மற்றுமுறக் காய்ச்சிக்கா கோலிகோரைக்
 கிழங்கோட்டி மதூரஞ்சுக்குச்
சிற்றரத்தைக் கொடிவேலி யானைத்திப்
 பிலியின்னுஞ் செப்பக்கேளே (அ-ர)

செப்பிடுபற் பாடகந்திப் பிலிமூல
 மிவற்றினொடு சிறியதேக்குத்
திப்பிலியிங் கிவையெல்லாம் வகையொன்றிற்
 கரைப்பலத்தூள் செய்துகூட்டி
வெப்பழலி னிடைக்காய்ச்சிப் பதத்திறக்கிக்
 காற்பலநெய் விரும்பிக் கொண்டா
லெப்படியு மண்டலத்திற் கயங்குன்மஞ்
 சுரம்பித்த மெவையுந்தீரும் (அ-றி)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பூசினிக்காய்ச் சாறு | 8 படி | (1 மரக்கால்) |
| பசுவின் நெய் | 1 படி | (சின்னபடி $\frac{1}{2}$) |

இவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து, அடுப்பின்மேலேற்றிக் கொதிக்கவைத்து நாலிலொன்றானபின் பசுவின்பால் பெரியபடி 1 விட்டு மறுபடியும் காய்ச்சவும். இம்மருந்து கொதிக்கையில்;

| | |
|---|---|
| காகோலி | கோரைக்கிழங்கு |
| அதிமதுரம் | சுக்கு |
| சிற்றரத்தை | கொடிவேலிவேர் |
| யானைத்திப்பிலி | பற்பாடகம் |
| கண்டத்திப்பிலி | சிறுதேக்கு |
| திப்பிலி | |

ஆகிய சரக்குகள் வகைக்கு $\frac{1}{2}$ பலமெடுத்துக் கல்லுரலி லிட்டு இடித்து வஸ்திரகாயஞ்செய்து அதனுடன் சேர்த்துக் காய்ச்சவும். நன்கு பதமாக்கி இறக்கவும்.

இந் நெய்யில் $\frac{1}{4}$ பலமளவெடுத்துப் பசுவின் பாலுடனே உட்கொள்ளக் கயரோகம் குணமாகும். 40 நாட்கள் வரை உபயோகிக்கவும். ஜ்வரம், பித்தம் முதலானவைகளுக்கும் நல்லது.

---

## 42. கயத்திற்கு "நாராயண கிருதம்"

பலமெட்டுப் போட்டுகிறுத் திடுகிறைத்திப்
பிலியதற்குப் பதின்மடங்கு
சலமதினிட் டன்னதனை நாலிலொன்றாய்க்
காய்ச்சியதிற் சமநெய்விட்டு
நலனுறமற் றதனைமறு படிகாய்ச்சிப்
பதத்திறக்கி நாற்கழஞ்சு
இலகுநிறை யருந்திவரிற் காசநோய்
கயநோய்க ளெல்லாந்தீரும் (சுசு)

(இ-ள்)



அரிசித்திப்பிலி 8 பலம் நிறுத்தெடுத்து ஒரு பாத்திரத்தி லிட்டு அதனுடன் 10 மடங்கு சுத்தஜலம் விட்டு நாலிலொன்றாகும் வரை வற்றக் காய்ச்சவும். இதற்குச் சமனெடை பசுவின் நெய் ($2\frac{1}{2}$ சேர்) விட்டு மறுபடியும் காய்ச்சிப் பதத்திலிறக்கவும். இதனை வடிக்கட்டித் தினம் 5 வராகனெடை வீதம் உள்ளுக்குக் கொடுக்கக் காசநோய்கள், கயநோய்கள் முதலானவைகள் தீரும்.

---

## 43. கயநோய்களுக்கு "அரிதார பற்பம்"

அரிதாரத் தகடெடுத்துச் சுண்ணம்பு
தனிற்சுத்தி யாகச்செய்து
புரிவினொடு கழுவிகற்றா ழஞ்சாற்றி
னிலொருநாள் புரசம்பட்டை
தருசாற்றி லொருநாள்பின் னெருக்கம்பா
லினொருநாள் சாரவிட்டுத்
திறமாக வரைத்துவில்லை செய்துலர்த்தி
யோர்சட்டி திறமாய்க்கொண்டு (சுஎ)

புகல்சட்டி தனிலிரண்டு படியுப்பு
வைத்துழக்குப் புளியஞ்சாம்பல்
புகவைத்தன் னதில்வில்லை வைத்ததன்மேல்
முன்போலச் சாம்பல்வைத்துத்
திகழுதன்மேல் முன்போல வுப்பிட்டோர்
சட்டிகொண்டு சேரமூடி
வகையுடனச் சட்டிவாய் சேலைமண்செய்
தெரியினிடை மருவவையே (சுஅ)

வைத்ததனை யாறிரண்டு சாமமெரித்
தெடுக்கியது வளமையான
சுத்தவரி தாரபற்ப மாமதனிற்
பணவெடைதான் தும்பைச்சாற்றிற்
றுய்த்துவரிற் குளிர்சுரம்போந் திப்பிலியீற்

கொளின்மூன்று தோடமும்போந்
திதித்தன் மிகுதேங்காய்ப் பாலிலருந்
திடில்வாத சிலேத்துமம்போம் (௬௯)

போமதனை வெற்றிலைச்சாற் றினிலருந்திற்
கயம்வெண்ணெய் போக்கும்விக்கல்
நாமமுறு திரிகடுகிற் சுவாசகா
சந்தீரு நல்லமோரி
லேமமுறு மதிசார மாறிடுநெற்
பொரியதனி லேகும்வாந்தி
காமருவு மருதம்பட் டைச்சாற்றிற்
சுக்கிலமே கம்போம்பாரே (௭௦)

பார்குப்பை மேனிச்சா றதினாலோ
முறைக்காய்ச்சல் பறந்துபோகும்
பேர்தருசெங் கழுநீரின் கிழங்குச்சாற்
றினிரத்த பித்தந்தீரும்
வேர்மிகுவெண் ணொச்சியிலைப் பொடியிலிடச்
சிலேட்டுமத்தின் வெப்புநீங்குந்
தார்மிகுதேட் கொடுக்கியிலைச் சாற்றின்மூத்
திரமிகுதி தணிதல்செய்யும் (௭௧)

செய்யதேன் றிப்பிலித்தூள் கடிவிடங்கள்
சுரங்குட்டந் தீர்க்குங்கண்டாய்
பையவளர் கொடிவேலிச் சாற்றிலிடக்
கிராணியுந்தான் பயப்பட்டோடும்
மொய்யுறுநா யுருவியிலைச் சாற்றிலிட
மூலநோய் முழுதுந்தீரு
மையமிலைப் பருத்திவிதைப் பொடிகுளிர்நீர்த்
திடும்நோய்க ளறிந்துநல்கே (௭௨)

(இ-ள்)

அரிதாரம் (1 பலம்) ஒரேகட்டியாக எடுத்துச் சுண்ணாம்பிற் குள் பொதிந்துவைத்து 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்பு எடுத்து நன்றாகக் கழுவிவிடவும். பின்பு கற்றாழஞ்சாற்றில் ஒரு



நாள் அரைக்கவும். புரசம்பட்டைச் சாற்றில் மறுநாள் அரைக்கவும். எருக்கம் பாலில் ஒருநாள் முழுவதும் அரைத்து வில்லைகளாகச்செய்யவும். நன்றாக உலர்ந்தபின், ஒரு புதுச்சட்டியில் 2 படி உப்பைஇட்டு அதற்குமேல் ஒரு உழக்கு புளியஞ்சாம்பல்போட்டு அதன்மேல் வில்லைகளை வைக்கவும். அதன்மேல் மறுபடியும் புளியம்புராணி சுட்டசாம்பலையிட்டு 2 படி உப்பைப் போடவும். அச்சட்டியின் வாய்க்குப் பொருந்தும்படியான ஒரு மற்றொரு அகலினால் மூடிச் சேலைமண்செய்யவும். இதனை அடுப்பின் மேலேற்றி 12 ஜாமங்கள் மந்தாக்கினியாக எரிக்கவும். சுத்தமான அரிதார பற்பம் கிடைக்கும்.

இதில் $3\frac{1}{2}$ குன்றியளவெடுத்துத் தும்பைச் சாற்றில் சாப்பிட்டுவரக் குளிர் ஜ்வரம் தீரும்.

திப்பிலிச் சூரணத்துடன் உட்கொள்ள சந்நி தீரும்.

தேங்காய்ப் பாலுடன் அருந்திவர வாதகபரோகங்கள் குணமாகும்.

இத் தாளக பற்பத்தை வெற்றிலைச் சாற்றுடன் சேர்த்துச் சாப்பிடக் கயம் போகும்.

வெண்ணெயுடனே குழைத்து நல்க விக்கல் நிற்கும்.

சுக்கு, திப்பிலி, மிளகுச்சூரணத்துடன் சாப்பிடச் சுவாசகாசம் தீரும்.

மோரில் உட்கொள்ள அதிசாரம் தீரும்.

நெற்பொரிமாவுடன் சாப்பிட வாந்தி நிற்கும்.

மருதம் பட்டைச் சாற்றில் சாப்பிட்டால் சுக்கிலமேகம் நிற்கும்.

முறைக்காய்ச்சலுக்குக் குப்பைமேனிச் சாற்றிலிடவும்.

இரத்தபித்தம் தீரவேண்டுமானால் செங்கழுநீர்க் கிழங்குச் சாற்றில் நல்கவும்.

கபரோகங்கள் நிவர்த்தியாகவேண்டுமானால் வெண்ணொச்சி யிலைப் பொடியுடன் கூட்டிச் சாப்பிடவும்.

அதிமூத்திர ரோகம் நிற்கத் தேட்கொடுக்கியிலைச் சாற்றில் உட்கொள்ளவும்.

கடிவிஷங்கள், ஜ்வரம், குஷ்டம் முதலான நோய்கள் தீர வேண்டுமெனில் இப்பற்பத்தைத் திப்பிலித்தூள் தேன் இவற்றுடன் கூட்டிச் சாப்பிடவும்.

கொடிவேலிச் சாற்றிலிடக் (சாக்கிரதையாக நாக்கு, ஈறு முதலான இடங்களில் படாமல் விழுங்கவும்) கிராணிகள் தீரும்.

நாயுருவி யிலைச் சாற்றுடன் உட்கொள்ள மூலநோய்கள் தீரும்.

பருத்திவிதைப் பொடியுடன் இதைச் சாப்பிடக் குளிர் தீரும்.

## 44. கய முதலானதற்கு "முஸல்யாதி (நிலப்பனை) நெய்"

நிலப்பனையின் கிழங்கினொடு பூசணிக்காய்
நிகழ்ந்திடுசா றிவ்விரண்டும் வகைக்கோர் நாழி
கலக்கமறு வெள்ளாட்டுப் பாலுடனே யிளநீர்
கரும்பாடா தோடைநெல்லிக் காய்ச்சாறு பினனும்
பலித்திடுதண் ணீர்விட்டான் சாறிவையோர் வகைக்குப்
பகருமிரு நாழிநெய் யறுநாழி கூட்டிச்
சலிப்பிலாப் பேரீச்சம் பழங்கொத்த மல்லி
சந்தனந்தா மரைவளையு முயற்தக் கோலம் (௧)

கோலமுறு மதிவிடைய முத்தக்காசு
குலவிடுமா தளம்பிஞ்சு சீரகங்கச்
சோலம்வாய் விளங்கமொடு கடுகரோணி
சொல்லிடுதிப் பிலியோமமொவ் வோர்கழஞ்சா
யெலவே பொடிசெய்து போட்டுக் காய்ச்சி
யிசைபதத்தில் வடித்துத்தே னிருநாழிவிட்டுக்



காலையின்மூ வராகனெடை யருந்திவந்தாற்
கயமிரத்தம் பித்தங்கா மாலைநீங்கும் (௨)

(இ-ள்)

| | |
|---|---|
| நிலப்பனைக்கிழங்குச் சாறு | 1 படி |
| பூசணிக்காய்ச்சாறு | 1 ,, |
| வெள்ளாட்டுப்பால் | 2 ,, |
| இளநீர் | 2 ,, |
| கருப்பஞ்சாறு | 2 ,, |
| ஆடாதோடைச்சாறு | 2 ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | 2 ,, |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | 2 படி |
| பசுவின் நெய் | 6 படி |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | கொத்தமல்லிவிதை |
| சந்தனத்தூள் | தாமரைவளையம் |
| தக்கோலம் | அதிவிடையம் |
| கோரைக்கிழங்கு | மாதளம்பிஞ்சு |
| சீரகம் | கச்சோலம் (பூலாங்கிழங்கு) |
| வாய்விடங்கம் | கடுகரோகிணி |
| திப்பிலி | ஓமம் |

ஆகிய சரக்குகள் வகைக்கு 1¼ வராகனெடை எடுத்துச் சூரணித்துச் சாறுகள் கூட்டிய நெய்யில் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய் ஆறியவுடன், தேன் 2 படிவிட்டுக் குழப்பிக் காலை வேளைகளில் 3 வராகனெடை அருந்திவரவும்.

க்ஷயம், இரத்தபித்தம், காமாலை முதலியவைகள் நீங்கும்.

## 45. க்ஷயத்திற்கு "ராஜாம்ருகாங்க ரஸம்"

சுத்திபுரி சொர்ண்ணபற்பஞ் செம்பின்பற்பஞ்
சொல்லும்வகைக் கோரிரண்டு கெருக்கத்தோடே
எய்த்தலிலா மனோசிலைகந் தகமிரண்டு
மீரிரண்டு வராகனெடை யெல்லாங்கூட்டி
மேய்த்தபல கரையொடுவெங் காரந்தன்னை
வெள்ளையின்பால் விட்டரைத்துக் குகையதாக்கி
மொய்த்திடுமுன் பொடிநான்கு மிதனுள்வைத்து
முந்தரைத்த பலகரையாற் குகைவாய்மூடே. (எரு)

மூடியொரு சட்டியில்வைத் ததையோர்சட்டி
மொய்த்திடமேன் மூடிவாய்ச்சே லைமண்செய்து
காடுறுமீ டெருமுட்டை நடுவில்வைத்துக்
கயபுடமிட் டோர்நான்கு குன்றிநேர்கொண்
டுடுதுகால் வராகனிறை திப்பிலியுமிளகு
மினிதாகப் பொடித்தது னுடனேநெய்யிற்
கூடுறவே குழைத்தருந்திற் கயநோய்பின்பு
குறிக்குமொரு மண்டலத்திற் பறக்கும்பாரே (எசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சொர்ணபற்பம் | 2 | வராகனெடை |
| செம்பு பற்பம் | 2 | ,, |
| சுத்திசெய்த மனோசிலை | 4 | ,, |
| ,, கெந்தகம் | 4 | ,, |

இவைகளைத் தனித்தனியே நன்றாக அரைத்துக்கொள்ளவும் சோழி, வெங்காரம் இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து வெள்ளாட்டுப்பால் விட்டு நன்றாக அரைத்துக் குகை செய்து கொண்டு அதனுள் மேல்கூறிய பற்பம், சூரணம் முதலியவை களைச் சாக்கிரதையாகப் போட்டு ஷை விழுதுகொண்டு மூடிச் சேலைமண் செய்து, அது நன்றாக உலர்ந்தபின் எருமுட்டைகளை யடுக்கிக் கஜபுடம் இடவும்.



சுத்தமான பற்பம் கிடைக்கும். இதனை 4 குன்றிமணி யிறையெடுத்துத் திப்பிலி, மிளகு இவ்விரண்டின் சூரணம் $\frac{1}{4}$ வராகனெடை சேர்த்து நெய்யுடன் குழப்பி உட்கொள்ளவும், 40 நாட்களுள் க்ஷயரோகம் தீரும்.

**குறிப்பு :—**

மனோசிலை, கெந்தகம் இவ்விரண்டையும் மருந்தில் கலக்கும் போது அதி ஜாக்கிரதையாகக் கலக்கவும். விழுதை அழுக்கக் கூடாது.

---

## 46. கயத்திற்கு "ராஜம்ருகாங்கம்"

இரதபற்பம் பலமூன்று சொர்ண்ணபற்ப
மிசையுமொரு பலமாம்வெள் ளீயபற்பங்
கருதிடுதாம் பிரபற்பம் பலநான்காகுங்
கனத்தமுத்தின் பற்பமனோ சிலைகந்தகத்தோ
டுரைதருதா ளகமிவையும் பலமொவ்வொன்று
யுத்தகல்வந் தனில்வைத்தே யரைத்திந்தப்
பொடியைப்
பெரியவொரு கிளிஞ்சில்வைத்து மேலுமொன்று
பிசகாமல் வைத்தினிது மூடவேண்டும் (எஎ)

மூடியபின் னாட்டுப்பால் வார்த்தரைத்த
மொழிந்திடுவெண் காரத்தைக் கிளிஞ்சிவாய்சந்
தூடுறவே தெரியாமற் றடவிப்பின்ன
ரொருபானை தனினன்கு விரனீடுப்பு
மெடுறப்போட் டதிற்கிளிஞ்சில் தன்னைவைத்து
மீதுமந்தப் படியுப்புப் போட்டுப்பானை
கூடிடமேற் சட்டியொன்று கொண்டுமூடிக்
களித்திடுமண் செய்துகச புடத்தின்வையே (எஅ)

வைத்துநன்கு யாறியபின் னெடுத்திட்டந்த
வன்கிளிஞ்சி லுடனரைத்து நீடுமூங்கி
லுய்த்தவொரு குழாயினிடை யடைத்துக்கொண்டே

யோதுமனு பானத்திற் கயநோய்க்கங்கே
மெய்த்தவொரு பணவெடைதான் மகிழ்ந்துநல்கு
மீதுள்ள பிணியுமொரு மதியிற்போகும்
பத்தியத்திற் காவின்பா லாவின்னெய்யாம்
பண்புதரு கத்தரியின் பிஞ்சுமாகும் (எகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இரதபற்பம் | 3 | பலம் |
| ஸ்வர்ணபற்பம் | 1 | ,, |
| வெள்ளீய பற்பம் | 4 | ,, |
| தாமிர பற்பம் | 4 | ,, |
| முத்து பற்பம் | 1 | ,, |
| சுத்திசெய்த மனோசிலை | 1 | பலம் |
| ,, கெந்தகம் | 1 | பலம் |
| ,, தாளகம் | 1 | பலம் |

இவைகளைச் சுத்தமான கல்வத்திலிட்டுத் தனித்தனியாக நன்றாக நுணுக்கிக்கொண்டு பின்பு அதிசாக்கிரதையாக ஒன்று கலந்துகொண்டு ஒரு பெருங்கிளிஞ்சிற்குள் வைத்து வேறொரு கிளிஞ்சிலினால் நன்றாக மூடிவிடவும். பின்பு அந்த கிளிஞ்சிலின் சந்துவாயை வெங்காரத்தை ஆட்டுப்பால் விட்டரைத்த விழுதினால் மூடிவிடவும். இதை நன்றாகக் காயவைக்கவும்.

ஒரு புதுப்பானையில் 4 விரற்கடையளவு உப்புப் போட்டு ஒரே சீராக நிரவிவிடவும். அதன்மேல் கிளிஞ்சிலை வைத்து மறுபடியும் உப்பை 4 விரலளவு இருக்கும்படி போட்டுப் பானையின் வாய்க்குத் தகுந்தபடி ஒரு அகலிட்டுச் சீலைமண் செய்யவும்.

சீலைமண் காய்ந்தபின் கஜபுடம் இடவும். புடம் காய்ந்தவுடன் பானையைத் திறந்து உள்ளிருக்கும் கிளிஞ்சிலை அதிசாக்கிரதையாக எடுத்துக் கல்வத்தில் வைத்து நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு ஒரு மூங்கில் குழாயில் வைத்துப் பதனம் பண்ணவும். தக்க அனுபானத்தில் இம்மருந்தை $3\frac{1}{8}$ குன்றி நிறையெடுத்து உட்கொள்ள ஒரு மாதத்திற்குள் கய ரோகம் தீரும்.



**பத்தியம் :**

பசுவின் பால், பசுவின் நெய் இவைகளைச் சேர்த்துச் சாதம் சாப்பிடவும்.

கத்தரிப் பிஞ்சும் சேர்த்துக்கொள்ளலாம்.

---

## 47. கயத்திற்கு "ஸ்வர்ணமாலினீ வஸந்தம்"

பொன்னொன்று முத்திரண்டு சாதிலிங்கம்
பொருந்திடவோர் மூன்றுடனே மிளகுநான்கு
பன்னுவெள்ளைத் துத்தமெட்டுப் பங்குகூட்டிப்
பான்மையுறு தலையிற்றுப் பசுவின்வெண்ணெய்
தன்னிலரைத் தெலுமிச்சம் பழத்தின்சாறு
சார்ந்திடவார்த் தரைத்துமாத்தி ரைதான்செய்தே
தன்னுபண வெடைதேனி லருந்திவந்தாற்
றொலைந்திடுமே கயமிரும லொருமாதத்துள் (அ௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பொன் | 1 | பலம் (ரேக்) |
| ,, முத்து | 2 | ,, |
| ,, லிங்கம் | 3 | ,, |
| மிளகு | 4 | ,, |

சுத்திசெய்த வெள்ளைத்துத்தம் 8 பலம்

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டும் பசுவின் வெண்ணெய் சேர்த்து நன்றாக அரைக்கவும். பின்பு எலுமிச்சம் பழச்சாறு வார்த்து (3 ஜாமங்கள்) அரைத்துப் பணவெடையுள்ள ($3\frac{1}{8}$ குன்றி) மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதிலொரு மாத்திரையைத் தேனுடன் குழைத்து உட்கொள்ள ஒரு மாதத்திற்குள் க்ஷயம், இருமல் முதலானவை தீரும்.

**குறிப்பு :—** பொன், முத்து, துத்தம், லிங்கம் முதலான சரக்குகளின் பற்பத்தையும் கூட்டிக்கொள்ளலாம்.

## 48. கயத்திற்குக் "கூஷ்மாண்ட ரஸாயனம்"

பூசனிக்காய் தனைச்சிறுக வரிந்துகொண்டு
புகலுமொரு படிபசுவின் னெய்யிற்போட்டுத்
தேசுறுநீ ரெலாஞ்சுண்ட வறுத்துமீது
சிவந்தநிறங் கண்டவுட னெடுத்திட்டேலம்
வாசமுறு திரிகடுகு கொத்தமல்லி
வளர்ருசீ ரகம்வகைக்கோர் பலத்துள்தேனெய்
பேசிடுநற் சர்க்கரைசேர்த் தருந்தில் விக்கல்
பித்தமரோ சிகங்கயநோய் காசந்தீரும் (அக)

(இ-ள்)

பூசினிக்காயைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிவைத்துக் கொண்டு, ஒருபடி பசுவின் நெய்விட்டு நீர் முழுவதும் சுண்டும் வரை வறுத்துச் சிவந்தநிறம் ஆனவுடன் இறக்கி வைத்துக் கொள்ளவும். இதனுடன்

| | |
|---|---|
| ஏலக்காய் | கருஞ்சீரகம் |
| சுக்கு | கொத்தமல்லி |
| திப்பிலி | சீரகம் |
| மிளகு | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, யாவற்றையும் கல்லுரலிலிட்டுப் பூணில்லா உலக்கையினால் நன்றாக இடித்துத் தேன், நெய், சர்க்கரை இவைகளைச் சேர்த்து இடித்து வைத்துக்கொண்டு (3 விரல்கொண்ட அளவெடுத்துத் தினம் 2 வேளைகள் உட்கொள்ள)

விக்கல், பித்தம், அரோசகம், கயநோய், காசம் முதலானவை தீரும்.

---

## 49. கூஷ்மாண்ட ரஸாயனம் (கயத்திற்கு)

பொருந்துமொரு பூசனிக்காய் தோலும்வித்தும்
போக்கிநீர் பிழிந்ததுண்டோர் நாழியுடனே



பரிந்துநீர் பிழியாத்துண்டோர் நூறுபலமும்
பசுவினெய்படி யொன்றதனிற் சிவக்கவறுத்துத்
திருந்திடவே பொடிசெய்து வைத்துக்கொண்டு
தெரிக்குமொரு நூறுபலக்கற் கண்டுதனையு
னிருந்திடுபூ சனிக்காய்நீ ரதனிற்போட்டுக்
காய்ச்சியிந்த நறும்பாகோடு முன்பொடியுஞ்சேர
(அஉ)

சேருமித னுடனேலங் கருவாப்பட்டை
திகழ்சாதிப் பத்திரிநற் கொத்தமல்லி
சீரகமின் னவையொன்றுக் கரைப்பலங்கள்
திரிகடுகு வகைக்கிரண்டு பலமதாகும்
ஆறுமிந்தப் பொடிகளையுங் கூட்டிநற்றே
னையிரண்டு பலங்கூட்டிக் கிண்டிநித்தம்
வாரமுட னரைப்பலங்கொண் டருந்திவந்தால்
மாறிவிடுங் கயரோகஞ் சுவாசம்விக்கல் (அங)

(இ-ள்)

ஒரு பெரும் பூசனிக்காயை அறுத்து அதன் தோலையும் விதைகளையும் நீக்கி பாதி பூசனிக்காயைத் துருவிச் சாறுபிழிந்து கொள்ளவும்.

மறுபாதியை அப்படியே சிறுசிறு துண்டுகளாக்கி எடுத்துச் சதை 100 பலத்தை எடுத்துக்கொண்டு பசுவின் நெய்விட்டுச் சிவக்க வறுத்துக்கொள்ளவும். பூசனிச்சாறு 1 படியில் 100 பலம் கற்கண்டைக் கரைத்து அடுப்பின்மேல் வைத்துப் பாகாக்கிக்கொள்ளவும். இதனுடன் முன் சொன்ன வறுத்த பூசினிச் சூரணத்தையும்,

ஏலக்காய்
லவங்கப்பட்டை
சாதிப்பத்திரி
கொத்தமல்லி விதை
சீரகம்

இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ பலம்

சுக்கு
திப்பிலி
மிளகு

இவைகள் வகைக்கு 2 பலமும் எடுத்து இடித்துச் சூரணஞ் செய்து பாகுடன் சேர்த்து லேகியபதமாக்கிக்கொள்ளவும். ஆறியபின் சுத்தமான தேன் 2 பலம் விட்டுக் கிளறி வைத்துக் கொண்டு தினம் $\frac{1}{2}$ பலம் வீதம் உட்கொள்ள க்ஷயரோகம், சுவாசம், விக்கல், முதலான ரோகங்கள் தீரும்.

---

## 50 க்ஷயத்திற்கு 'வாசாதி லேகியம்'

கண்டங்கத் திரியாடா தோடையேமுள்
ளிக்கத்தரி தூதளைவாகை வேலிசங்கு
விண்டணியுந் துளசிதிப் பிலிமூலத்தின்
வேர்வகைக்குப் பலமிருபான் துணிநீரிற்
கொண்டிடப்போட் டெட்டிலொன்று கக்காய்ச்சிக்கொண்
டதனினொச்சி தூதளைசெம்முள்ளி
துண்டிடுகாஞ் சோறிகையாந் தகரையாடா
தோடையிலையின் சாறுவகைக் கொருகாற்சேரே (அசு

சேர்த்ததனி லீரிருசேர் வெல்லமிட்டுத்
திறமாகப் பாகாக்கிச் செவ்வியஞ்சுக்குக்
கூர்த்திடுதிப் பிலிமூலஞ் சிறுநாகப்பூக்
கொடிவேலி சடாமாஞ்சி லேலமிந்துப்
பார்த்திடுதிப் பிலியினுட னிலவங்கத்தி
னரும்பட்டை பத்திரிகள் பலப்பலத்துள்
பார்த்திடுலோ கசிந்தூரமோர் பலந்தான்
பரிவுறுமப் பாகதனிற் பண்பாய்க்கூட்டே (அரு)



கூட்டியிரு பதுபலத்தேன் கூடவிட்டுக்
குலவுறுநெய் பானையினில் வைத்துப்பின்னை
சீட்டமுறு தானியத்தி லிரண்டுவார
மிருத்தியெடுத் தொருநாளைக் கிரண்டுபோதும்
வாட்டமின்றிக் காற்பலந்தா னருந்திவந்தால்
வலிகொண்ட க்ஷயரோகஞ் சுவாசகாசம்
நீட்டமின்றிச் சிலபகலி னகன்றுபோகு
நிகழ்த்துமிது கைகண்ட முறையதாமே. (அசு)

(இ-ள்)

கண்டங்கத்திரி வேர்
ஆடாதோடை
முள்ளுக்கத்திரிவேர்
தூதுவேளை
வாகை
வேலிப்பருத்தி
சங்கு
துளசி
திப்பிலிமூலம்

இவைகளின் வேர்வகைக்கு 20 பலம் வீதமெடுத்து நறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

| | |
|---|---|
| நொச்சிச் சாறு | $\frac{1}{4}$ சேர் |
| தூதுவேளை ,, | ,, |
| செம்முள்ளி ,, | ,, |
| காஞ்சோறி ,, | ,, |
| கையாந்தகரைச்சாறு | ,, |
| ஆடாதோடையிலைச்சாறு | $\frac{1}{4}$ சேர் |

இவற்றை யொன்றாகலந்து, இதனுடன் 4 சேர் வெல்லம் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கிக் கொள்ளவும். பின்பு

செவ்வியம் — சுக்கு
திப்பிலிமூலம் — சிறுநாகப்பூ
கொடிவேலிவேர் — சடாமாஞ்சில்
ஏலக்காய் — இந்துப்பு
திப்பிலி — இலவங்கப்பட்டை
இலவங்கப்பத்திரி

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ்செய்துகொண்டு

லோகசிந்தூரம் 1 பலத்தையுங் கூட்டிப் பாகுடன் கிளறி லேகிய பதத்திலிறக்கவும் ஆறியபின் தேன் 20 பலம் சேர்த்து நெய் தடவிய பழகிய பானையில் போட்டு நன்றாக மூடித் தானிய புடமாக 15 நாட்கள் வைக்கவும்.

இந்த லேகியத்தைத் தினம் 2 வேளை $\frac{1}{4}$ பலம் அளவெடுத்துச் சாப்பிடவும்.

க்ஷயரோகம், சுவாசகாசம், முதலான ரோகங்கள் தீரும்.

---

## 51. க்ஷயரோகத்திற்கு நெய்

நெல்லிக்காய்ச் சாறுபடி யரையேசீந்தி
        னீடுசர்க் கரையுழக்கு நிகழ்ச்சிதேவி
சொல்லிடுசெங் கழுநீரின் சாறுநாழி
        தொகுத்திடுமா வாரையிலைச் சாறுநாழி
வல்லநத்தைப் பாலுழக்கு முலைப்பானாழி
        வகுத்திடுகை யாந்தகரைச் சாறுநாழி
கல்லிடுநீர்ப் பூலாவே ரினியபொன்னாங்
        காணிசிறுக் கீரைவேர் வெட்டிவேரே (அஎ)

வெட்டிவே ருடன்றழையு மிலாமிச்சம்வேர்
        மேவுசிற்று மணக்கம்வேர் தண்ணீர்விட்டா



னிட்டநிலப் பனைக்கிழங்கோ டெழுத்தாணிப்பூண்
        டிவைவகைக்குப் பலமிரண்டா மேலங்கோட்டந்
திட்டமுள விலவங்கஞ் சண்பகப்பூச்
        சீரகங்கோ ரோசனைசெஞ் சந்தனங்காண்
விட்டகலை மான்கொம்பு நாகத்தாது
        விளம்புமதி மதுரம்வகைக் கரைப்பலந்தால் (அஅ)

பலந்தருமின் னவையெல்லாம் பசுவின்பாலிற்
        பரிந்தரைத்து முன்சொன்ன பாலுஞ்சாறுங்
கலந்தெண்ணெய் விட்டெரித்து வடித்துப்பச்சைக்
        கற்பூரஞ் சமுத்திராப் பச்சைகொஞ்ச
மிலங்கிடவே பொடிசெய்து போட்டுமூழ்கி
        லேகிவிடுங் க்ஷயரோக முதலாநோய்கள்
வலந்தருமேற் சுகமுள்வர் மூழ்குநாளின்
        மாற்றிடுக பூசனிக்காய் புளிமோர்தாமே (அகூ)

(இ-ள்)

நெல்லிக்காய்ச்சாறு $\frac{1}{2}$ படி
சீந்தில் சர்க்கரை 1 உழக்கு
சிதேவிச் செங்கழுநீர்ச்சாறு 1 படி
ஆவாரையிலைச்சாறு 1 படி
பசுவின் பால் 1 உழக்கு
முலைப்பால் 1 படி
கையாந்தகரைச்சாறு 1 படி

இவைகளை யொன்றுகூட்டிக்கொள்ளவும்.

நீர்ப்பூலாவேர் — பொன்னாங்காணிவேர்
சிறுகீரை வேர் — வெட்டிவேர்
இலாமிச்சை வேர் — சிற்றாமணக்கம் வேர்
தண்ணீர்விட்டான் கிழங்கு — நிலப்பனைக்கிழங்கு
எழுத்தாணிப்பூண்டு

இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| ஏலக்காய் | கோஷ்டம் |
| கிராம்பு | சண்பகப்பூ |
| சீரகம் | கோரோசனை |
| செஞ்சந்தனம் | மான்கொம்பு |
| நாகப்பூ | அதிமதுரம் |

இவைகள் வகைக்கு ½ பலம்

மேற்கூறிய சரக்குகளைச் சிறு சிறு துண்டுகளாக்கிப் பசுவின் பால்விட்டூறவைத்து நன்றாக அரைத்து முன் சொல்லிய சாறுகளுடன் கூட்டி, நல்லெண்ணெய் (10 சேர்) விட்டு அடுப்பின்மேலேற்றிப் பதத்தில் வடித்து இறக்கவும்.

மறுநாள்,

பச்சைக் கற்பூரம்
சமுத்திராப்பச்சை

இவ்விரண்டையும் வகைக்கு (1 வராகனெடை) எடுத்து துணியிலிட்டு முடிச்சாக்கி எண்ணெயுடன் சேர்த்துக் கசக்கிப் பிழியவும். இத்தைலத்தைத் தலைமுழுகிவர க்ஷயரோகம் முதலான பற்பல நோய்கள் தீரும்.

**பத்தியம் :—**

பூசினிக்காய், புளி, மோர் முதலானவைகளை நீக்கிவிடவும்.

---

## 52. க்ஷயத்திற்கு நெய்.

புளியாரைச் சாற்றினொடு கீழாநெல்லி
பூசினிக்காய் நெல்லிக்காய் பேயன்வாழை
வள னுறுதண் ணீர்விட்டான் கிழங்கின்சாறு
வளரிளநீர் பசுவின்பால் வகைக்குநாழி
குளிர்குமிழங் கிழங்குநிலப் பனைக்கிழங்கு
குலவுசிற்று முட்டிவேர் வில்வத்தின்வேர்



கிளரில்வம் பிசின்பூனைப் புல்லுருவியாவுங்
கிடைத்திடவோர் வகையினுக்குப் பலந்தான்
கொள்ளே (௪௰)

கொண்டிடித்துத் துணிநீர்தன்னிற் போட்டுக்
குறுகவே யெட்டிலொன்றாய்க் காய்ச்சியாவின்
கண்டிடுநெய் தன்னிலொக்கக் கூட்டிக்காய்ச்சிக்
கனிவுறவே வடித்தேலங் கூகைநீறு
விண்டிடதி மதுரஞ்சுக் கிலுப்பையின்பூ
மிகுந்திடில வங்கப்பத் திரிதன்னோடு
தண்டருநீர்ச் சுண்டிவேர முக்கிராவேர்
சாற்றிடுமுந் திரிகையுறு பழமின்னுந்தான் (௪௧)

தானுமுறு காயுருவி வித்துபூமி
சர்க்கரையோ ரிலைக்கஞ்ச மிலவங்கப்பூ
கானமுறு பேரீச்சம் பழமிவ்வெல்லாங்
கருதுவகைக் கிருகழஞ்சு கொண்டுச்சுக்கோ
டனமிலாத் திப்பிலியும் வகையினுக்கோ
ரிரண்டுபலங் கொண்டுநுள் செய்தித்தூளுக்
கானசருக் கரைசரியாய்க் கூட்டித்தேன்விட்
டதனையிரு வாரந்தா னியத்துள்வைப (௪௨)

வைத்தெடுத்து நித்தமுக்க ழஞ்சுநெய்தான்
வகையுடனே யருந்திவந்தாற் பாண்டுரோகம்
பித்தமதி சாரங்கா மாலைசென்னிப்
பிரமமிவை தீர்ந்திடும்பெண் பிள்ளைகொண்டாற்
புத்திரரை மிகப்பெறுவாள் புருடன்கொண்டாற்
போகத்திற் கிளைந்து மாதர்வேண்டு
மித்தரணி யோருய்ய வெண்ணிமுன்னா
விலங்கிடுதன் வந்தரிசொன் முறையிதாமே (௪௩)

(இ-ள்)

புளியாரைச்சாறு
கீழாநெல்லிச்சாறு
பூசினிக்காய்

நெல்லிக்காய்
பேயன்வாழை
தண்ணீர்விட்டான்கிழங்கு

இவைகளை யிடித்துப் பிழிந்த சாறுவகைகள் தனித் தனியே 1 படி ($1\frac{1}{4}$ சேர்)

இளநீர் 1 படி
பசுவின்பால் 1 படி

இதனுடன்,

குமிழங்கிழங்கு
நிலப்பனைக்கிழங்கு
சிற்றாமுட்டிவேர்
வில்வவேர்
இலவம்பிசின்
பூனைப்புல்லுருவி

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டு ஒன்றிரண்டாக இடித்து 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாக வற்றக்காய்ச்சவும். சாறு வகைகளுடன் இக்கஷாயத்தைச் சேர்த்துப் பசுவின் நெய் 1 படியும் விட்டு,

| | |
|---|---|
| ஏலக்காய் | கூகைநீர் |
| அதிமதுரம் | சுக்கு |
| இலுப்பைப்பூ | இலவங்கப்பத்திரி |
| நீர்ச்சுண்டி | அமுக்கிராக்கிழங்கு |
| திராக்ஷைப்பழம் | நாயுருவிவிதை |
| பூமிச்சர்க்கரைக்கிழங்கு | கிராம்பு |
| பேரீச்சம்பழம் | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையும்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |

இவை வகைக்கு 2 பலம் வீதமுமெடுத்துச் சூரணித்து



வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, சாறுகூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இந்நெய்யுடன் சர்க்கரையும், தேனும் வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும். இதனை ஒரு பழகிய பாண்டத்தில் வைத்து மூடி நெற்குவியற்குள் 2 வாரம்வரை புதைத்து வைக்கவும்.

இந்நெய்யில் 3 கழஞ்சளவெடுத்து உட்கொள்ளப்

| | |
|---|---|
| பாண்டுரோகம் | பித்தம் |
| அதிசாரம் | காமாலை |
| சன்னி | மயக்கம் |

இவைகள் தீரும். ஸ்திரீகள் இம்மருந்தை சாப்பிட மகப்பேறு உண்டாகும். புருஷன் இதனை உட்கொண்டுவரத் தாது புஷ்டி உண்டாகும்.

---

## 53. க்ஷயத்திற்குச் சூரணம்.

மிளகுத்தூ ளெருக்கம்பூ மொட்டுத்தூள்பின்
விளம்பிடுதிப் பிலித்தூளொவ் வோர்சிறங்கை
யளவாகக் கொண்டுதேன் கலந்ததோர்பாக்
களவிரண்டு போதுங்கொள் ளாவினெய்து
தளையினங்காய் கத்தரிக்காய் முருங்கைப்பிஞ்சு
தான்கொண்டு புளிப்பகற்று பத்தியத்துக்
குளமருட்சி செய்துநின்ற கயநோயெல்லா
மோடிவிடுங் கைகண்ட முறையிதாமே (௯௪)

(இ-ள்)

மிளகுத்தூள்
எருக்கம்பூவின் மொட்டு
திப்பிலித்தூள்

இவைகள் வகைக்கு ஒரு சிறங்கையளவெடுத்து இடித்துச் சுத்தமானதேன்விட்டுக் கலந்துகொள்ளவும். இதில் ஒரு பாக்களவெடுத்து உட்கொள்ளவும். தினம் 2 வேளை சாப்பிடவும்.

பசுவின் நெய், தூதுவளங்காய், கத்தரிக்காய், முருங்கைப் பிஞ்சு, முதலானவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளவும். புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

கயநோய்கள் தீரும். கைகண்டது.

---

## 54. கயத்திற்கு மருந்து.

அந்தரத்தா மரைத்தூளொ டுசிலம்பட்டை
யரைத்திடுதூள் வகைக்கொருமுப் பலமதாகுஞ்
சந்தமுறு திப்பிலித்தூள் பலந்தானொன்று
சார்ந்திடுந்த மூன்றையுமொன் றாகக்கூட்டி
முந்துவெரு கடியளவு தேனிற்கொண்டால்
முப்பதுநா ளாகுமுன்ன ரிருமலீளை
மந்தார காசமொடு கயநோய்தீரும்
வயிறுப்ப லதுவுமெளி தகன்றுபோகும் (௫௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| அந்தரத்தாமரைத்தூள் | 3 | பலம் |
| உசிலம்பட்டை | 3 | ,, |
| திப்பிலித்தூள் | 1 | ,, |

இம்மூன்றையும் ஒன்றாகக் கூட்டிக் கலந்துவைத்துக்கொள்ளவும். இதில் ஒரு வெருகடியளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொண்டுவர இருமல், ஈளை, மந்தாரகாசம், கயநோய் வயிறு உப்பிசம் முதலான ரோகவகைகள் 30 நாட்களுள் தீரும்

---

## 55. சீந்திற் சர்க்கரை

சீந்தின்முதிர் பருங்கொடியைக் கொண்டுமேற்றோல்
சீவியெரிந் திடித்துநீர் விட்டுநன்றாய்



நேர்ந்திடவே பிசைந்துகோ தெடுத்துப்போட்டந்
நீரையொரு புதுப்பானை தன்னில்விட்டே
யேய்ந்தெட்டுச் சாமந்தான் சென்றபின்ன
ரிறுத்துப்பார்த் தாலடியிற் சுண்ணம்பென்னச்
சேர்ந்திருக்கு மெடுத்துலர்த்திக் கொண்டிடுதே
சீந்திலுறு சர்க்கரையென் றுரைப்பாராய்ந்தோர் (௫௬)

(இ-ள்)

முற்றிய சீந்தில் கொடியைப் பருமனாக எடுத்து அதன் மேற்றோலைச் சீவிவிடவும். அதன் பச்சை நிறமுள்ள தோலையும் நீக்கவும். பின்னர், இதனைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்துச் சுத்தஜலத்தில் பிசைந்து விடவும். நீர் தெளிவை வேறொரு புதுப் பாத்திரத்தில் இறுக்கவும். ஒரு ஜாமம் நேரம் அப்படியே வைத்திருக்கவும். அப்பாத்திரத்தின் அடியில் சுண்ணம்பைப்போல் வெள்ளையாகச் சீந்திற் சர்க்கரை படியும். மேலே நிற்கும் தண்ணீரை இறுத்துக் கொட்டிவிடவும். பின்பு சர்க்கரையை எடுத்து உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

---

## 56. க்ஷயத்திற்கு "அமுத சர்க்கரை ரஸாயனம்."

'ஓமஞ்சீ ரகங்கோட்டங் குந்திரிக்க
முயர்ந்திடுசந் தனமாக்கு மிளகுசுக்குத்
தாமரையின் வளையந்தா மரையின்றூது
சார்ந்திடுநெல் லிப்பருப்பு சிறுநாகப்பூச்
சேமமுறு முந்திரிகைப் பழத்தினோடு
திப்பிலிகற் பூரமதி மதுரமேலம்
நாமமில வங்கப்பத் திரிசாதிக்காய்
நயனுறுநெற் பொரிநெருஞ்சிக் காய்தக்கோலம் (௫௭)

கோலமுறு கச்சோல மமுக்கிராவேர்
கூகைநீற் றோடுசிலைப் பனைக்கிழங்கு

பாலுகற் கடகசிங்கி யுடனீர்வள்ளிப்
 பருங்கிழங்கு பேரிச்சம் பழமிவ்வெல்லாஞ்
சாலவே சமன்கூட்டிப் பொடித்துச்சீந்திற்
 சர்க்கரையங் கதற்கிரட்டி கூட்டிச்சீனி
மேலுமைந்து பலங்கூட்டிப் புதுப்பாண்டத்தில்
 விருப்பமொடு பத்திரமாய் வைத்துக்கொள்ளே (௬௮)

வைத்தொருமூ வராகனெடை தூளுந்தேனும்
 வளர்பசுவி னெய்யுநேர் கூட்டியாங்கே
நித்தம்வரு காலைபின்மண் டலந்தான்கொண்டா
 னீரிழிவு கயமீளை யிருமல்பித்தம்
பித்தகா சஞ்சுவாச காசத்தோடு
 பிறங்குபுற மேகமுடம் பெரிவுதீரும்
பத்தியம்பூ சினிக்காய்நல் லெருமைமோர் பால்
 பழஞ்சோறு புளியாகா தறிந்தருந்தே (௬௯)

(இ-ள்)

| | |
|---|---|
| ஓமம் | சீரகம் |
| கோட்டம் | குந்திருக்கம் (குங்கிலியம்) |
| சந்தனத்தூள் | அரக்கு |
| மிளகு | சுக்கு |
| தாமரையிலைச்சுருள் | தாமரைத்தாது |
| நெல்லிப்பருப்பு | சிறுநாகப்பூ |
| திராக்ஷைப்பழம் | திப்பிலி |
| கற்பூரம் | அதிமதூரம் |
| ஏலக்காய் | இலவங்கப்பத்திரி |
| சாதிக்காய் | நெற்பொரி |
| நெரிஞ்சில் | தக்கோலம் |
| பூலாங்கிழங்கு | அமுக்கிராக்கிழங்கு |
| கூகைநீர் | நிலப்பனைக்கிழங்கு |
| கற்கடசிங்கி | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| பேரீச்சம்பழம் | |



இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து உலர்த்தி நன்றாகக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணஞ்செய்து வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும். இதற்கு 2 பங்கு சீந்தில் சர்க்கரை கூட்டிக்கொள்ளவும். அதற்குமேல் 5 பலம் சீனிச்சர்க்கரை சேர்த்து ஒன்றாகக் கலந்துகொண்டு ஒரு புதுப் பாண்டத்தில் பத்திரப்படுத்தவும். இதில் 3 வராகனெடை தூளெடுத்துத் தேன், நெய், இவைகளைச் சேர்த்துக் குழைத்துக் காலை நேரத்தில் உட்கொள்ளவும். 40 நாட்கள் இவ்வாறு சாப்பிட்டால்

நீரிழிவு, கயம், ஈளை, இருமல், பித்தம், பித்தகாசம், சுவாஸகாஸம், பிரமேகம், உடம்பெரிச்சல், முதலானவை தீரும்.

**பத்தியம் :**

பூசினிக்காய், எருமைமோர், எருமைப்பால், பழயது, புளி முதலானவைகளை நீக்கிவிடவும்.

---

## 57 கயம் முதலான நோய்க்கு "அமுக்கிராக்கிழங்கு நெய்"

நூறுபல வமுக்கிரா வேரினோடு
 நுவல்சங்கு பிரண்டைமிள கறணைமுன்னைச்
சாரணைபா திரிவில்வஞ் சிவதையின்வேர்
 சாற்றிடுசிற் றாமல்லி பேராமல்லி
தேறுபெரு வாகைபெருங் குமிழின்றன்வேர்
 சிறியவழு தூணைநெருஞ்சி தன்வேர்சீந்தில்
காறுகண்டங் கத்திரிவேர் செவியஞ்செந்நெல்
 காருளுந்து நீர்வள்ளிக் கிழங்கிதெல்லாம் (௱)

ஆறுரலிட் டிடித்தெட்டு மரக்காநீரில்
 மாந்திடப்போட் டொருகுறுணி யாகக்காய்ச்சி
யேமமுற மற்றொன்றில் வடித்துக்கொண்டே
 யிலங்கிடுநா ழிநெய் கூடவிட்டுத்

நீமுறுநீ டதிமதுரங் கடுகரோணி
திரிகடுகு சூரியபத் திரிதேட்கட்டை
வாமெமுறு திரிபலைவெட் பாலைமஞ்சள்
மாமஞ்ச ளாத்தையொடு சத்திச்சாரம் (௱க)

சாரமுறு மெவச்சாரந் தேவதாரந்
தகரந்திப் பிலிமூலம் படமடக்கி
காரகில்சந் தனங்கோட்டங் குங்குமப்பூக்
கற்பூரஞ் சமுத்திராப் பச்சைதன்னோ
டூரமுறு கத்தூரி மஞ்சள்நல்ல
விலவங்கப் பட்டைவிழ லரிசிமேலுங்
காரவுப்பும் வகைக்குநால்வ ராகன்மானங்
கலந்தரைத்திட் டைந்துநா ளூறவெரித்து (௱௨)

வடித்ததனிற் காந்தபற்பம் பலந்தானென்று
வயங்கிடுதா மிரபற்பம் பலமங்கொன்று
கடுத்திடுதிப் பிலித்தூளெண் பலமுங்கூட்டிக்
கருதிரண்டு படிதேன்விட் டொருமாதந்தா
னடுத்திடுதா னியபுடம்வைத் திருவராக
னளவுகாலைப்போதி லருந்திவந்தாற்
றொடுத்திடுபீ லிகையிரத்த பித்தஞ்சூலை
சுவாசமோ சிகங்கயநோ யெவையுந்தீரும் (௱௩)

(இ-ள்)

அமுக்கிராக்கிழங்கு 100 பலம் எடுத்து சிறுசிறு துண்டுகளாக்கி அதனுடன்

| | |
|---|---|
| சங்கங்குப்பிவேர் | பிரண்டை |
| மிளகரணை | முன்னை |
| சாரணை | பாதிரிவேர் |
| வில்வம் | சுத்திசெய்த சிவதைவேர் |
| சிற்றாமல்லிவேர் | பேராமல்லிவேர் |
| பெருவாகை | பெருங்குமிழ்வேர் |
| சிறுவழுதுணைவேர் | நெருஞ்சில்வேர் |
| சிந்தில்தண்டு | கண்டங்கத்திரி |



| | |
|---|---|
| செவ்வியம் | செந்நெல் |
| உளுந்து | தண்ணீர்விட்டான் கிழங்கு |

இவைகளை வகைக்கு (10 பலம்) வீதமெடுத்து நறுக்கி கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து 8 மரக்கால் ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி 1 மரக்கால் கஷாயம் ஆகும்வரை வற்றவைத்து வேறொரு பாத்திரத்தில் வடிகட்டவும். இதனுடன் 4 படி நெய்விட்டு,

| | |
|---|---|
| அதிமதுரம் | கடுகரோகிணி |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | எருக்கிலை |
| தேட்கொடுக்குப்பூண்டு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| வெட்பாலையரிசி | மஞ்சள் |
| மரமஞ்சள் தோல் | சிற்றரத்தை |
| சத்திச்சாரம் | எவச்சாரம் |
| தேவதாரம் | தகரம் |
| கண்டத்திப்பிலி | தாழைவிழுது |
| அகில்கட்டை | சந்தனத்தூள் |
| கோஷ்டம் | குங்குமப்பூ |
| கற்பூரம் | சமுத்திரப்பச்சை |
| கஸ்தூரிமஞ்சள் | லவங்கப்பட்டை |
| விழலரிசி | உப்பு |

இவைகளை வகைக்கு 4 வராகனெடை வீதம் எடுத்துச் சூரணித்து முன்சொன்ன நெய்க்கலவையுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி 5 நாட்கள்வரை சிறுகொதியிட்டு எரித்து 6வது நாளன்று பக்குவப்படுத்தவும்,

இதனுடன்

காந்தபற்பம் 1 பலமும்
தாமிரபற்பம் 1 பலமும்
திப்பிலிச்சூரணம் 8 பலமும்

சேர்த்துக் குழப்பிக்கொள்ளவும். பின்பு சுத்தமான தேன் 2 படியும் கூட்டி ஒரு புதுப்பாத்திரத்தில் வைத்து நன்முக மூடி நெற்குவியலுள் வைத்து விடவும். ஒருமாதம் சென்றபின்னர் இதனையெடுத்து உபயோகிக்கவும். 2 வராகனெடை அளவு காலை நேரத்தில் உட்கொள்ளவும்.

பீலிகை, இரத்தபித்தம், சூலை, சுவாசம், அரோசகம், கய நோய் முதலானவை தீரும்.

குறிப்பு:— இம்முறை ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

---

## 58. கயத்திற்கு இலவங்கப்பட்டை லேகியம்.

சன்னலவங் கப்பட்டை சிற்றரத்தை
தான்றிக்காய் சிறுதேக்கு கொத்தமல்லி
மேன்மையுறு சீரகம்வால் மிளகுசுக்கு
மிளகொடுதிப் பிலியோமந் தேற்றாங்கொட்டை
சொன்னவிவை வகையினுக்குப் பலமொவ்வொன்று
தொடர்சாதிப் பத்திரிசா திக்காயேலம்
வன்மையுறு கோட்டத்தி னுடன்கிராம்பு
வளர்தாளி சபத்திரியக்கிரா காரமாமே (௱௪)

மேவுமிந்த மருந்தெல்லாம் வகையொன்றுக்கு
விளம்பிரண்டு வராகனெடை மயக்குங்கஞ்சா
தாவிலிரு வராகனெடை கசகசாமேற்
சாற்றிடுகாற் பலங்கோரோ சனைவீசந்தான்
பாவுமிவை யனைத்தையுந்தூ ளாகச்செய்து
பனைவெல்ல மீரைந்து பலமுங்கூட்டி
யாவினெய்விட் டிலேகியஞ்செய் திருவராக
னளவுகொளிற் கயம்வெட்டை புகைச்சனீங்கும் (௱௫)

(இ-ள்)

| | |
|---|---|
| சன்னலவங்கப்பட்டை | சிற்றரத்தை |
| தான்றித்தோல் | சிறுதேக்கு |
| கொத்தமல்லிவிதை | சீரகம் |



| | |
|---|---|
| வால்மிளகு | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| ஓமம் | தேற்றாங்கொட்டை |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | சாதிக்காய் |
| ஏலக்காய் | கோஷ்டம் |
| கிராம்பு | தாளீசபத்திரி |
| அக்கிராகாரம் | |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை

| | |
|---|---|
| சுத்திசெய்த கஞ்சா | 2 வராகனெடை |
| கசகசா | $\frac{1}{4}$ பலம் |
| கோரோசனை | 20 குன்றிநிறை |

இவைகளையெல்லாவற்றையும் ஒன்றுகலந்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதனுடன் பனைவெல்லம் 10 பலம் சேர்த்துப் பசுவின்பால் கூடவிட்டு இடித்து லேகிய மாக்கிக்கொள்ளவும்.

இந்த லேகியத்தில் 2 வராகனெடையளவெடுத்து உட் கொள்ள க்ஷயம், வெட்டை, புகைச்சல் முதலானவை தீரும்.

---

## 59. கயத்திற்குப் "பாற்கடுக்காய்"

பருஞ்சுக்குத் திப்பிலியிவ் விரண்டினோடு
பாற்கடுக்காய் வகைக்குநாற் பதுதான்கொண்டு
திருந்துமொரு பானையிற்போட் டொருநாழி
திறம்பெருநல் வல்லாரைச் சாறுவிட்டாங்
கிருந்தெரித்துச் சுவறியபின் னந்தச்சாறே
யீரிரண்டு நாழியொடு வெள்ளாட்டின்பால்
பொருந்துமிரு நாழியும்விட் டெரித்துநன்றாய்ப்
புகலிவையுஞ் சுவறவிடு நாழிதானே (௱௬)

தேனைவிட்டுக் கிண்டியொரு கலசந்தன்னிற்
சேரவடைத் ததன்மீதோ ரகலான்மூடி
மானமுற விருபதுநாள் நெற்புடத்தில்
வைத்தெடுத்துக் காலையினிற் கடுக்காயொன்றும்
ஆனகுழம் பிருகழஞ்சு மருந்திவந்தா
லப்பனே யென்னசொல்வேன் மண்டலத்தி
லீனமுறு கபமென்ப தெல்லாந்தீரு
மெற்றிடுதீ பனமுண்டாங் கொடுத்துப்பாரே (௫௭)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| பாற்கடுக்காய் | |

இவைகள் வகைக்கு 40 எண்ணிக்கையில் எடுத்து ஒரு பானையில் போட்டு 4 படி வல்லாரைச்சாறு விட்டு ஊற வைத்து அடுப்பின்மேலேற்றிச் சாறு சுவறும்வரை வற்றவைத்து மறுபடியும் 4 படி. வல்லாரைச் சாறும், வெள்ளாட்டுப்பால் 2படியும் விட்டுச் சுண்டவைக்கவும். தேன் 1 நாழி விட்டு ஒன்று கலந்து ஒரு பானையில் வைத்து ஒரு அகலினால் மூடி. நெற் குவியலுக்குள் 20 நாட்கள் புதைத்து வைக்கவும்.

கயரோகி தினம் ஒரு கடுக்காயுடன் குழம்பில் சுமார் 2½ வராகனெடையளவும் எடுத்து உட்கொள்ள 40 நாட்களுள் ரோகம் குணமாகும். பசியும் உண்டாகும்.

---

## 60. கயத்திற்குத் திரிகடுகாதி வடகம்.

திரிகடுகு சாதிக்கா யிலாமிச்சம்வேர்
திரியிலைசந் தனம்வெட்டி வேர்நாகப்பூக்
கருதிடுபே ரீச்சுமுந்தி ரிகையின்றன்
கனியேலங் கொத்தமல்லி யமுக்கிராவே
ரிருவகைச்சீ ரகங்கிராம்பு முயர்தக்கோல
மித்தனையுஞ் சமன்கூட்டிப் பொடியாய்ச் செய்து



மருவுமித னளவுசருக் கரைபாகாக்கி
மற்றதனிற் போட்டினிதாய்க் கிளறிக்கொள்ளே. (௫௮)

கிளறியெடுத் ததனையொரு கலசந்தன்னிற்
கிடைத்திடவே வைத்துக்கொண் டொருதான்றிக்கா
யளவுபெற வுண்டைசெய் ததிலொருண்டை
யாவினெய்யி னிற்காலைப் போதுகொள்ளிற்
மளவுபெறச் செய்திருந்த கயநோயெல்லாஞ்
சரிந்திடுஞ்சேட் டுமம்பித்த மதிகமாகில்
வளனுறுதே னதிற்கொண்டா லிரண்டும்நிற்கும்
மருவிடுபத் தியமுருங்கை யிலைச்சாறுதும். (௫௯)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சாதிக்காய் |
| இலாமிச்சம் வேர் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சந்தனத்தூள் | வெட்டிவேர் |
| சிறுநாகப்பூ | பேரீச்சம்பழம் |
| முந்திரிகைப்பழம் | ஏலக்காய் |
| கொத்தமல்லி | அமுக்கிராக்கிழங்கு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கிராம்பு | தக்கோலம் |

இவைகளை (வகைக்கு 1 பலம்) வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். பின்பு சர்க்கரையைப் பாகுசெய்து அதனுடன் சேர்த்துக் கிளறி வைத்துக்கொண்டு, தான்றிப்பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு உருண்டையெடுத்துப் பசுவின் நெய்யுடன் சேர்த்துக் காலை வேளையில் உட்கொள்ளவும். கயநோய் தீரும். கபம், பித்தம் முதலியன அதிகமானால் தேனுடன் குழைத்துச் சாப்பிடவும்.

முருங்கையிலை இ ர ஸ ம் முதலானவைகளை உட்கொண்டு பத்தியமாக இருக்கவும்.

---

## 61. கயநோய்க்கு "ஆடாதோடை நெய்"

கூறுமா டாதோடை யிருபத்து நாற்பலங்
குறுகத்த ரித்திடித்துக்
கொண்டேப தக்குநீர் தன்னிலிடுநாழி
யாகக்கு றுக்கிவடியிட்
டேறுமிது தன்னிலைச் சாறுமொரு நாழி
யிதிலரைக் குங்கற்கமே
யெண்ணவரு திரிகடுக திரிபலையு மிந்துப்பி
ளிச்செய்யக் கொடிவேலிவேர்
காறுமுந் திரிகைவிழ லரிசிஞா ழல்முழிமஞ்
சள்கற்க டகசிங்கிமுத்
தக்காசு சிறுதேக்கு டன்கழஞ் சாகவே
யரைத்துக்க ரைத்துநெய்விட்
டெரித்தேயா றிப்பின்னு ழக்குத்தே னுடன்கலந்
தடைவாகவே யருந்தி
லரியகய ரோகமுங் காசமும் பித்தமும்
மப்போத கன்றுவிடுமே (கசா)

(இ-ள்)

ஆடாதோடை ஸமூலம் 24 பலம் எ டு த் து ச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி 2 மரக்கால் சுத்த ஜலத்துடன் இடித்துப் போட்டு அடுப்பின்மேலேற்றிச் சின்னபடி 1 படியாகுமட்டும் வைக்கவும். இக்கஷாயத்துடன்,

ஆடாதோடையிலைச்சாறு சின்னபடி ஒன்றும்விட்டு,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |



| | |
|---|---|
| இந்துப்பு | கொடிவேலிவேர் |
| திராக்ஷைப்பழம் | விழலரிசி |
| ஞாழல் | மஞ்சள் |
| கற்கடசிங்கி | கோரைக்கிழங்கு |
| சிறுதேக்கு | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்து மேற்கூறிய தி ர வ ம் ஏதேனுமொன்றினு லரைத்துச் சாறுகளுடன் கலந்து பசுவின் நெய் 1 படியும் சேர்த்து அடுப்பின்மேலேற்றி சிறு தீயாலெரிக்கவும். ம று நா ள் இந்நெய்யைப் பதமாக்கி இறக்கி வடிக்கட்டிக்கொண்டு, நன்றாக ஆறியபின் சுத்தமான தேன் ஒரு உழக்கும் விட்டுக் கலந்துகொள்ளவும்.

இந்நெய்யைத் தி ன ம் ஒரு வராகனெடை யளவெடுத்து உட்கொள்ள க்ஷயம், காசம், பித்தம், முதலான ரோகவகைகள் தீரும்.

---

## 62. க்ஷயத்திற்கு "மயூர தைலம்"

பரிவொடுமயிற் றசையெடுத்து வெள்வெண்காயம்
பலமைந்து பலமிரண்டு சீரகஞ்சுக்
கொருபலமே மிளகுபெருங் காயந்தானு
முற்றவொரு வராகனெடை யெல்லாமுன்ன
ருரைதசையி னுடனரைத்துப் பிசறிப்பின்ன
ரொருபடிநல் லெண்ணெய்விட்ட டுப்பிலேற்றி
யுருவுறமோர் கரண்டியினுற் றுழாவிக்காய்ச்சி
யுற்றபதந் தனிலிறக்கி வைத்துக்கொள்ளே (ரகக)

வைத்ததிலா றாக்கெண்ணெ யுடனேயந்த
வளத்தைதையு மிருபோது மெட்டுநாளைக்
கொத்தபடி யருந்திவந்தாற் கயநோய்தன்னே
டுளைமாந்தை யிருமலுடன் வழலைதீரும்
பத்தியந்தான் புளியினெடு பூசினிக்காய்
பகரெருமைத் தயிரினெடு மோர்பாலாகா

வுத்தமனே நோயறிந்து மருந்துநல்கி
யிறுதிபெறப் பத்தியமுங் கொள்ளச்சொல்லே (௱௧௨)

(இ-ள்)

| | |
|---|---|
| மயிலின் மாமிஸம் (5 பலம்) யெடுத்து | |
| வெள்ளை வெங்காயம் 5 பலம் | |
| சீரகம் | 2 பலம் |
| சுக்கு. | 1 பலம் |
| மிளகு | 1 வராகனெடை |
| பெருங்காயம் | 1 வராகனெடை |

இவைகளை நன்றாகச் சூரணம் செய்து மாம்சத்துடன் பிசறி வைத்துக்கொண்டு, நல்லெண்ணெய் 5 சேர்விட்டு அடுப்பின்மே லேற்றியெரித்துப் பதத்திலிறக்கவும். இதில் ஒரு சிறு ஆழாக்கு அளவெடுத்து உட்கொள்ளவும். தினம் 2 வேளை சாப்பிடவும். 8 நாளைக்குள் கயரோகம் தீரும்.

உளைமாந்தை, இருமல், வழலை முதலான ரோகங்களுக்கும் ஹிதமானது.

**பத்தியம் :**

புளி, பூசினிக்காய், எருமைத் தயிர், எருமை மோர், பால் இவைகள் ஆகாது.

**குறிப்பு :—**

வேளைக்கு ஒரு ஆழாக்கு கொடுப்பது அதிகமெனத் தோன்றுகிறது. இதில் பாதியளவு கொடுத்தால் போதும்.

---

## 63. க்ஷயகாசத்திற்கு "ராஜமிருகாங்க ரஸம்"

இரதமொடு சொர்ன்னபற்ப மொருபங்காகு
மிசைந்தமனோ சிலையிரண்டு பங்கதாகுங்



கருதிடுதா ளகமிரண்டு பங்கேயாகுங்
கந்தகமு மிரண்டுபங்கே யாமிவ்வெல்லாம்
பரிவுதரு சுத்தியுள தாகக்கூட்டிப்
பாகமுறப் பொடிசெய்து வெள்ளாட்டின்பால்
விரிவுறவிட் டரைத்தபல கரையினோடு
வெங்காரத் தாற்செய்த குகையில்வையே (௧௧௩)

குகையதின்வா யரைத்தபல கரையால்மூடிக்
குலவுமொரு சட்டியில்வைத் ததையோர்சட்டி
வகையுறக்கொண் டெதிர்மூடிச் சந்திற்சேலை
மண்செய்து கசபுடமிட் டெடுத்துத் தூள்செய்
தகமகிழ்ந்து நாற்குன்றி நிறைத்தூளோடே
மறுமூன்று மிளகுதிப்பிலித் தூளுஞ்சேர்த்
துரிமையுட நெய்யினிற்கொள் கயநோயெல்லா
மோடிவிடு மிருகாங்க ரசமிதாமே (௧௧௪)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 | வராகனெடை |
| சொர்ணபற்பம் | 1 | ,, |
| சுத்திசெய்த மனோசிலை | 2 | ,, |
| ,, தாளகம் | 2 | ,, |
| ,, நெல்லிக்காய் கெந்தகம் | 2 | வராகனெடை |

இவைகளைச் சூரணித்துக் கல்வத்திலிட்டு வெள்ளாட்டின் பால்விட்டு நன்றாக அரைக்கவும். பின்னர் பொரித்த சோழி, வெங்காரம் இவ்விரண்டையும் தண்ணீர்விட்டரைத்துக் குகையாகச் செய்து உலர்ந்தபின் மேலேசொன்ன விழுதை அதற்குள் வைத்து, சோழி வெங்காரக் கலவையினால் மூடிவிடவும். இதை ஒரு புதுச்சட்டியில் வைத்து வேறொரு அகலினால் நன்றாக மூடிச் சேலைமண் செய்து காயவைத்துக் கஜபுடம் இடவும். பின்னர் இதைத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும். இம்மருந்தில் 4 குன்றிநிறை யெடுத்து மிளகு, திப்பிலி இவைகளின் சூரணஞ்சேர்த்து நெய்யுடன் கூட்டி உட்கொள்ளவும்.

கயநோய் தீரும். இதன் பெயர் "மிருகாங்க ரசம்" என்பதாகும்.

---

## 64. கயம், சுவாசகாசம் முதலானவைகளுக்குக் "குக்குளுச் சூரணம்"

திப்பிலியெ வட்சாரம் நெ(ல்)லிமுள்ளி மாட்சிகஞ்
சிறுமூல கங்கடுக்காய்
செவ்வியஞ் சுக்குமிள கேலமில வங்கஞ்
சிறந்தவிந் துப்புமஞ்ச
ளற்புதவி ழாலரிசி விளவுப்பி தமானவத்
தித்திப்பி லிதான்றிக்காய்
யானபுழுகியுப்புட னவையுடன் கோட்டமு
மன்பான கொடிவேலிவேர்
பிறசிறிய தும்மட்டி. கோரைக்கி ழங்கொடு
பெருந்தும்பை யதனின்வேர்
பெருமுட்டி வேரொன் றொருபலங் கொண்டுடன்
பின்குக்கு லுப்பலந்தான்
வற்கமொடு முப்பலம் வெதுப்பிப்பொ டிசெய்து
வண்சேலை யில்வடித்து
வாகுபடி முக்கழஞ்சு தேனிலும் நெய்யிலும்
மதிப்பாக வேகுழப்பிக்
கற்புட னன்றன்று கொள்ளவே சுவாசமுங்
காசமுங் கயரோகமுங்
கண்டமூ லம்பீலி கையந்தா வெட்டிபழங்
காய்ச்சலுங் தீருமினிதே (கசரு)

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | எவச்சாரம் |
| நெல்லிமுள்ளி | மாட்சிகம்(பொன்நிமிளை) |
| சிறுமூலம் | கடுக்காய்த்தோல் |
| செவ்வியம் | சுக்கு |



| | |
|---|---|
| மிளகு | ஏலக்காய் |
| கிராம்பு | இந்துப்பு |
| மஞ்சள் | விழலரிசி |
| யானைத்திப்பிலி | தான்றித்தோல் |
| வளையலுப்பு | அட்டுப்பு |
| கோஷ்டம் | கொடிவேலிவேர் |
| தும்மட்டிக்காய் | கோரைக்கிழங்கு |
| பெருந்தும்பை | பேராமுட்டி |

இவைகள் வகைக்கு 1 பலம்

சுத்திசெய்த குக்கில் 3 பலம்

முதலான சரக்குகளை சட்டியிலிட்டு இள வறுப்பாக வறுத்துக் கல்லுரலிலிட்டுச் சூரணஞ்செய்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் $3\frac{3}{4}$ வராகனெடையளவெடுத்துத் தேனும் நெய்யும் விட்டுக் குழப்பி தினந்தோறும் உட்கொள்ளவும்.

சுவாசம், காசம், கயரோகம், தொண்டைக் கரகரப்பு பீலிகை (Spleen Enlargement) நாட்பட்ட ஜ்வரம் முதலான ரோகவகைகள் நீங்கும்.

---

## 65. க்ஷயம், குன்மத்துடன் கூடிய வியாதிக்கெல்லாம் "ஆடுதீண்டாப்பாளை எண்ணெய்"

ஆடுதின்னாப் பாளையொடு தக்களிச்சா
றுகும்வகைக் கிரண்டுபடி முடக்கொத்தானு
டடுறுகை யாந்தகரை மாவலிங்கை
இலங்குமுருக் கிலைச்சாறு வகைக்குநாழி
கோடுறுகோ மூத்திரம்வெள் ளாட்டிநீருங்
கூறுவகைக் கிருநாழி யெள்ளினெய்யோ

டாடவுறு மிருப்பையாம ணக்குவேம்பி
  னனைந்திடுநெய் வகையினுக்கோர் நாழிகூட்டு (௧௧௬)

கூட்டுத்திப் பிலிமூலந் தேவதாரங்
  குலவுகருஞ் சீரகம்பற் பாடகந்தான்
கோட்டங்கார் போகரிசி பெருங்குறும்பை
  குறித்திடுநேர் வாளஞ்சேங் கொட்டையுள்ளி
நாட்டுகம்பிப் பிசின்வசம்பு மிளகினோடு
  நயனுதவு வெட்பாலை யரிசிகாயந்
தேட்டமுறு வாலுழுவை யரிசியானைத்
  திப்பிலிதிப் பிலியினிய கடுகரோணி (௧௧௭)

கடுமையுறு மரமஞ்ச ளின்னவெல்லாங்
  கருதுமரை வராகனிறை வகையொன்றுக்குப்
பொடிசெய்து போட்டெரித்துப் பூண்டுநான்கு
  பொருந்தவ ரைத்திட்டுப் புகலிந்துப்பு
வெடியுப்பு நவச்சார மெவச்சாரந்தான்
  விளங்கிடுகாய்ச் சுப்புவகைக் கரைவராக
னெடைபொடித்துப் போட்டுநற்ப தத்திறக்கி
  யிசைத்திடுபாக் களவருந்தக் கயமெலாம்போம்
(௧௧௮)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஆடுதீண்டாப்பாளைச் சாறு | 2 | படி |
| தக்காளிச்சாறு | 2 | ,, |
| முடக்கொத்தான் சாறு | 1 | ,, |
| கையாந்தகரைச்சாறு | 1 | ,, |
| மாவலிங்கஇலைச்சாறு | 1 | ,, |
| முருக்கிலைச்சாறு | 1 | ,, |
| பசுவின் மூத்திரம் | 2 | ,, |
| வெள்ளாட்டு மூத்திரம் | 2 | ,, |
| சுத்தமான எள்ளெண்ணெய் | 1 | படி |
| ,, இலுப்பெண்ணெய் | 1 | படி |
| வேப்பெண்ணெய் | 1 | படி |



இவைகளை யொன்றுகலந்து

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | தேவதாரம் |
| கருஞ்சீரகம் | பற்பாடகம் |
| கோஷ்டம் | கார்போகவரிசி |
| பெருங்குறும்பை | சுத்திசெய்த நேர்வாளம் |
| சுத்திசெய்த சேங்கொட்டை | கம்பிப்பிசின் |
| வசம்பு | மிளகு |
| வெட்பாலையரிசி | பெருங்காயம் |
| வாலுளுவையரிசி | யானைத்திப்பிலி |
| கடுகரோகிணி | மரமஞ்சள் தோல் |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ வராகனெடை (6 குன்றிநிறை) வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் செய்து பூண்டு 4 பல்லும் சேர்த்து அரைத்து சாறுகலந்த எண்ணெயுடன் குழப்பி,

இந்துப்பு
வெடியுப்பு
நவசாரம்
எவச்சாரம்
காய்ச்சுப்பு

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ வராகனெடையும் பொடிசெய்து போட்டு அடுப்பின் மேலேற்றிக் கெட்டியான பதத்திலிறக்கி வடிக்கட்டவும்.

இந்த எண்ணெயில் ஒரு பாக்களவு (சுமார் ¼ தோலா) எடை எடுத்து உட்கொள்ளவும். க்ஷயரோகங்கள் தீரும்.

---

## 66. கயத்திற்கு "கொட்டைக்கரந்தை லேகியம்"

திகழ்கொட்டைக் கரந்தையுறு சாறுமாவி
  னெய்யுமெரித் தியல்பதத்தில் வடித்துக்கொண்டு

திகழரத்தை யதிமதுரங் கோட்டத்தோடு
திப்பிலியின் நான்குவகைக் கரைப்பலத்தூள்
புகலிடுநற் சர்க்கரைநாற் பலமிவ்வைந்தும்
போட்டிலேகியமாகக் கிளறிவைத்திட்
டகமகிழ விருபோதுங் கொட்டைப்பாக்கி
னளவருந்தி யுப்பில்லாக் கஞ்சிகொள்ளே (கககூ)

கொண்டுவருங் காலைநோ யதிகமாகிற்
குலப்பசுவின் பால்கூட்டிப் பத்தியங்கொ
ளெண்டருமெட் டாநாளி ஞமணக்கி
னெண்ணெய்தேய்த் தன்றைக்கு வைத்திருந்து
தண்டமறு நாளுமிட்டுக் களிமண்ணிட்டுக்
கடுகவெந்நீர் தனின்மூழ்கிப் பொரித்தசாறும்
விண்டிடுநல் லனமுங்கொள் வாயால்வீழ்ந்த
மேலிரத்த மபானத்தால் வீழ்ந்துதீரும் (கஉ௰)

(இ-ள்)

கொட்டைக்கரந்தைச் சாறு 1 படி
பசுவின் நெய் 1 படி

இவைகளை யொன்றுசேர்த்து,

சிற்றரத்தை அதிமதுரம்
கோஷ்டம் திப்பிலி

இவைகளின் தூள் வகைக்கு ½ பலம்

சர்க்கரை 4 பலம்

இவைகளை யொன்றுசேர்த்து அடுப்பின்மேலேற்றி லேகிய பதமாக்கி இறக்கிக்கொள்ளவும். இதில் ஒரு கொட்டைப்பாக் களவு எடுத்துத் தினம் 2 வேளை சாப்பிடவும். உப்பில்லாமல் கஞ்சி உட்கொள்ளவும். மருந்து சாப்பிட்டு வருகையில் நோய் அதிகமாவதாகத் தெரிந்தால் பசுவின் பால் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும். 8 வது நாளன்று ஆமணக்கெண்ணெய் சிறிது தலையில் தேய்த்துக்கொண்டு, நன்றாக ஊறி மறுநாள் களிமண்



ணிட்டு வெந்நீரில் தலை முழுகவும். அன்று ரஸம் சாதம் சாப்பிடவும். வாயிலிருந்தும், ஆஸனத்திலிருந்தும் வெளியாகும் இரத்தப்போக்குகள் நிற்கும்.

---

## 67. கயமுதலானவைகளுக்குத் "தூதுவளை லேகியம்"

தூதளையி னிலைபிரமி யிலையோடாடா
தோடைகண்டங் கத்திரியி னிலையிந்நான்குங்
கோதறவே யிட்டுவைத்துப் பிழிந்தசாறு
கூறிரண்டு படிதன்னிற் சிற்றரத்தை
யோதிடுகற் கடசிங்கி சிறியதேக்கோ
டுயர்சாதிக் காய்கடுக்காய் கிராம்புநக்குச்
சாதிப்பத் திரிகோட்ட நெல்லிமுள்ளி
சடாமாஞ்சில் வால்மிளகு தான்றிக்காயே (கஉக)

காயுற்ற திப்பிலிநீ டின்னவெல்லாங்
கருதுவகைக் கொருமுக்கா சளவாய்க்கொண்டு
தாயமுறப் பொடித்துப்போட் டெரித்துத்தேனுஞ்
சார்ந்திடவிட் டிலேகியமாய்க் கிண்டித்தான்றிக்
காயளவு போதிரண்டுந் தின்றுவந்தால்
கவலிருமல் கயசோக நாட்குளப்பின்
றேயுமிது கைகண்ட முறையதாகுந்
தேர்ந்துகுறு முனியுரைத்தா ருலகோருய்ய (கஉஉ)

(இ-ள்)

தூதுவேளை இலை
பிரமி இலை (பிரமியவழுக்கை)
ஆடாதோடை இலை
கண்டங்கத்திரி இலை

இவைகளை சிறுக அரிந்து, வேட்டில் வைத்து இடித்துப் பிழிந்த சாறு 2 படியுடன்

| | |
|---|---|
| சிற்றரத்தை | கற்கடசிங்கி |
| சிறுதேக்கு | சாதிக்காய் |
| கடுக்காய்த்தோல் | கிராம்பு |
| சுக்கு | சாதிப்பத்திரி |
| கோஷ்டம் | நெல்லிமுள்ளி |
| சடாமாஞ்சில் | வால்மிளகு |
| தான்றித்தோல் | திப்பிலி |

ஆகிய சரக்குகளை வகைக்கு 3 காசெடை விதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டுத் தேன் விட்டு ஒன்றுசேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்து லேகிய பதமாகக் கிண்டி இறக்கவும்.

தினந்தோறும் தான்றிக்கா யளவெடுத்துக் காலையிலும் மாலையிலும் சாப்பிட

இருமல், க்ஷயரோகம் முதலானவை தீரும். கைகண்டது.

---

## 68. க்ஷயம் இருமல் காய்ச்சலுக்கு "எண்ணெய்"

வளர்சிற்று மணக்குநெய் யிளநீ ரான்பால்
வகையொன்றுக் கோர்படியே பொன்னாங்காணி
கிளர்நெல்லிக் காய்ச்சாறு படிகாற்காலே
கிளர்த்துமிதை யைந்துஞ்சேர்த் தேலஞ்சுக்குத்
துளசிவிண்டுக் க்ராந்தித்து தளையின்வேர்கள்
சொல்லுறுகோ ரோசனைதிப் பிலிகடுக்கா
யொளிதருசீ ரகமதுரம் வகையொவ்வொன்றுக்
கொருபலங்கொண் டிளநீர்விட் டரைத்துப்போடே (கஉரு)

போட்டெரித்து வடித்துக்கொண் டிராவிலன்னம்
பொசித்தபின்னோர் கரண்டிநெய்கு டித்துறங்கி
நாட்டமுறு விடியலதி லுரையதாகி
நண்ணுமொரு தரம்வயிறு பேதியாகும்



கூட்டமுறு க்ஷயரோக மிருமல்காய்ச்சல்
குடிபோகு மெருமைமோர் பூசினிக்காய்
தேட்டமுறக் கொளலாகா பசுவினெய்பால்
செப்பிடுகத் தரிமுருங்கைப் பிஞ்சதாகும் (கஉசு)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 1 படி |
| இளநீர் | ,, |
| பசுவின்பால் | ,, |
| பொன்னாங்காணிச்சாறு | காற்படி |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| ஏலக்காய் | சுக்கு |
| துளசிவேர் | விஷ்ணுக்ராந்திவேர் |
| தாதுவேளைவேர் | கோரோசனை |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| சீரகம் | அதிமதுரம் |

இவைகளை வகைக்கு 1 பலம் விதம் எடுத்து இடித்துச் சூரணித்து இளநீர் விட்டு நன்றாக வரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடன் கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவப் படுத்தி இறக்கவும்.

இரவில் ஆகாரம் சாப்பிட்டபின்னர் இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொண்டு உறங்கவும். காலையில் ஒருதடவை பேதியாகும்.

க்ஷயரோகம், இருமல், காய்ச்சல் இவை தீரும். எருமை மோர், பூசினிக்காய் இவைகளை நீக்கிப் பசுவின் நெய், பால், கத்தரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு இவைகளை உட்கொள்ளவும்.

---

## 69. வல்லாதகீ ரஸாயனம் ( கிரந்தி முதலானதற்கு )

சேங்கொட்டைப் பலமிரண்டு மஞ்சள் காட்டுச்
சீரகந்திப் பிலீமிளகெள் ளோமத்தோடே
பாங்குறுசோ திமதிவித் தினிமைநீடு
பனைவெல்லங் கொடிவேலி பலம்நன்னான்கு
வாங்கியே ரசாயனஞ்செய் தருந்திவந்தால்
மகத்தான கிரந்திமுத லானரோகம்
நீங்கிடுநற் றிடமுண்டாந் தாதுநீடு
நிகழ்மேனி மேனிதரும் நிசமிதாமே (௧௨௫)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த சேராங்கொட்டை 2 பலம் | |
| மஞ்சள் | காட்டுச்சீரகம் |
| திப்பிலி | மிளகு |
| எள்ளு | ஓமம் |
| வாலுளுவை வித்து | பனைவெல்லம் |
| கொடிவேலி வேர் | |

இவைகள் வகைக்கு பலம் 4 வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டு நன்றாக இடித்து லேகியம்போல் செய்து வைத்துக்கொள் ளவும். இதனை (ஒரு மாதங்கழித்து) தினந்தோறும் சுண்டைப் பிரமாணமெடுத்து 2 வேளை உட்கொண்டுவரக் கிரந்திகள் நீங்கும் தாதுபுஷ்டியுண்டாகும்.

உடம்பும் தேறி வரும். உண்மையானது.

---

## 70. மதனகாமேச்வரம்.

சடைக்கஞ்சா விதையினுடன் மருளுமத்தை
நீர்முள்ளி வித்துப் பலங்காற்காலாம்
படிவமுறு சாதிக்காய் கிராம்புசாதிப்
பத்திரிநன் முருங்கையின்றன் பிசினின்னான்கு



மிடுவகையொவ் வொன்றினுக்கொவ் வோர்வராக
னெடைசேர்த்து நீர்போக்கு தேங்காயொன்றி
லடைவாக்கிச் சேலைமண்செய் ததனைத்தீயி
லணைந்தபுடம் போட்டெடுத்தங் கரைத்துக்கொள்ளே (௧௨௬)

அரைத்ததனிற் றேனுழக்கு நெய்யோர்நாழி
யாமிவற்றோ டிராயபுரி யிடத்தினுற்ற
சருக்கரைநீ டிரண்டுபலங் கூட்டிநன்றாய்ச்
சாரமதித் தெடுத்தொன்றில் வைத்துக்கொண்டு
பருத்தக்கொட்டைப் பாக்களவு கொளின்மயக்கம்
பரிவுபெறக் கொள்ளாது தாதுநீடுந்
தரிக்குமொரு மூன்றுநா ழிகையின்மட்டுந்
தம்பனமா மிந்தமுறை மிகவுநன்றே (௧௨௭)

(இ-ள்)

| | |
|---|---|
| சடைக்கஞ்சாவிதை | $\frac{1}{4}$ பலம் |
| மருள் | ,, |
| ஊமத்தைவிதை | ,, |
| நீர்முள்ளிவித்து | ,, |
| சாதிக்காய் | 1 வராகனெடை |
| கிராம்பு | ,, |
| சாதிப்பத்திரி | ,, |
| முருங்கைப்பிசின் | ,, |

இவைகளை உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணஞ் செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு முற்றிய தேங்காயின் கண்களைத் திறந்து இளநீரைக் கொட்டிவிட்டு அதனுள்ளே முற் கூறிய சூரணத்தை அடைக்கவும். பின்பு இதற்குச் சேலைமண் செய்து நெருப்பிலிட்டு மேற்சீலை, ஓடு முதலானவை கறுகு மட்டும் புடம்போட்டெடுத்து ஆறவைக்கவும்.

காயையுடைத்து உள்ளிருக்கும் சரக்குகளுடன் தேங்கா யையும் கூடச் சேர்த்து தேன் ஒரு உழக்கு, நெய் சின்னபடி $\frac{1}{2}$ யும், ராயபுரிச் சர்க்கரை 2 பலமும் போட்டுக் கல்லுரலிலிட்டு

நன்றாக இடித்து லேகியம்போல் செய்துகொள்ளவும். இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து உட்கொள்ளவும். மயக்கம் உண்டாகாது. தாதுபுஷ்டி யுண்டாகும். 3 நாழிமட்டும் விந்து நழுவாது.

---

## 71. மதனகாமேசுரத் தைலம்.

சீராம தனகாமே சுரத்தின்றன் றயிலம்
பாரோ ரறியவே பகரக்கேளாராய்ந்து
வடமொழியின் பாவதனை வண்மையாகத்தன்றெரிந்து
திடமான சாத்திரத்திற் செப்பவே நடமாடுங்
கயிலையுறை சிவன்பாதங் காணலாமித்தைலம்
பயிலுவதாய்ச் செந்தமிழாற் பாடவே — மயிலேகேள்

வாழைப்பழநூறு வாகுபெறு முந்திரிகை
தாழைப்பழச்சாறு தான்குறுணி — ஏழையே
முந்திரிகைப் பழந்தானு மூன்றுசேர் தானாகும்
பந்திரிகைப் பறங்கியென்ற சாராயங் — திந்திரியா
மெட்டுச்சேர் தானாகி ஏற்றமாம் பானைதனில்
முட்டியாய்த்தானு முயங்கவிட்டுக் — கெட்டியாய்க்
கஞ்சாவு நூறுபலங் காணத் தெரிந்தெடுத்து
மஞ்சாவி நெய்தான் விளங்கவிட்டுத் — துஞ்சாம
லாவிநெய் மூன்றுபடி யதனிலே தான்விட்டு
வாகுபெறு நற்றண்ணீர் மருவியெட்டுப் — பாகுபெறக்
காய்ச்சியெட்டி லொன்றாய்க் காய்ந்தபின்பு கோணிகையில்
மாய்ச்சலாய்க் கிட்டிகட்டி வாதுபெறத் — தாய்ச்சலாபத்
தாழிகையிற்றான்பிழிந்து தன்மேலாய் நிற்குநெய்யை
வாழிகையாலே வழித்தெடுத்து — நீளிகையி
னெய்யெல்லாந் தனில்வாங்கி நீரதனைத் தானகற்றி



யுய்யாமற் றாழிகையி லூற்றியே — மெய்யாகக்
கடைக்கு (ச் சரக்குத்) தன்னை கலங்காமற்றான்கேளாய்
யுடைச்சரக் காமபினதுவு மோர்பலந்தான் — முடைச்
சரக்காம்

நீர்முள்ளி வித்துடனே நேமமிகு காஞ்சோறியும்
நீர்மிகு வெண் நிலப்பனையே — சோரும்
பூனைக்கா லியின்விரையும் புதிதான வத்திவிதை
யானைமதம் பொழியுமக்கா — யேனை
வால்மிளகு தக்கோலம் வாகைவிரை தன்னோடு
மேலமதுர மிலவங்கஞ் — சாலவே
வாலுமுளை நெய்யும் வளமாங் கிராம்பதுவுஞ்
சாலவே சாதிக்காய் பத்திரி — யேலவே
யெல்லா மிடித்திட்டேற்றமாஞ் சாலிலிட்டு
வல்லாம்வெந் திரசட்டிவாகாகச் — செல்வமாம்
சாலின்மேல் வைத்துத்தனி மாடகத்தினைப்
பூவின்புகை போகாமற் பொருந்தவே — நாலின்
படியளவு தப்பாமற் பண்பாகச் சேலைசெய்து
துடியாமல் வாலுகைமேற் றுப்பறவாய் — நெடியாமல்
வைத்துத்தீ மூட்டுவரிசையாய்ச் — சித்தியாய்க்
காயாமற் நீர்வார்த்துக் கருதியே முச்சாமந்
தோயாமற் றானிறங்குஞ் சுத்தமாய் — சாயாமற்
றயிலமா நற்பரணிதனிலடைத்துவைத்துத்
துயிலாமற் றானிருந்து சுத்தமா — யயிலாமற்
கொண்டுவர விரண்டுபலங் கூச்சமறத்தானிருந்தே
யண்டர்பிரானை யனுதினமும் — விண்டு
மேமூலாதாரவிடு மும்மண்டலங்கடந்து
மேலார்தார்வீடும் வெளிப்படுமே — பாலோர்கள்
கொண்டிட்டாற் றம்பனையாங் கூற்றூறுபெண்ணோடே
விண்டிட்டும் விந்துமே வீழாது — மண்டிட்ட
ம(த்)தயானைப் பெலமாய் மகாபெலனுமுண்டாகும்
வித்திசித்துப்போல் வீரியமா மத்தை
யாயுசுமுண்டாகும் மாய்ந்த நன்றிரைபோங்
காயமுமின் னொளிபோற்கா — நேயமுமா
யாயசுவிருத்தியா மாண்பின்னைச் சிங்கமுமாங்

தேசதுவு மன்மதன்போற் றெளிவாகும் — பேசுவது
மதனகாமே சுரத்தைல மாநிலத்தோர் கொண்டாக்கா
லதன்சுத்தார் ... வாரறிந்து

(இ-ள்)

வாழைப்பழம் 100
முந்திரிகைப்பழச் சாறு 1 மரக்கால்
முந்திரிகைப்பழம் 3 சேர்
பறங்கிச்சாராயம் 8 சேர்

இவைகளை யொரு பானைதனிலிட்டு,

சுத்திசெய்த கஞ்சா 100 பலம் போட்டுப்
பசுவின் நெய் 3 படி (15 சேர்)
தண்ணீர் 8 படியும்

சேர்த்து அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி வேறொரு பாத்திரத்தில் பிழிந்துகொள்ளவும். அப்படியே வைத்துவிட நெய் மேலே மிதக்கும். அதனைத் தனியாக வழித்து வேறொரு பாத்திரத்தில் இறுத்துவிடவும். பின்னர் அப் பாத்திரத்தில் வேடுகட்டி அதன் மேல்

சுத்திசெய்த அபினி 1 பலம்
நீர்முள்ளிவிதை
காஞ்சோறி வித்து
வெண்நிலப் பனைக்கிழங்கு
பூனைக்காலி விதை
அத்திவிதை
வால்மிளகு
தக்கோலம்
வாகைவித்து
ஏலக்காய்
அதிமதுரம்
கிராம்பு
வாலுளுவைத் தைலம்



இலவங்கப்பத்திரி
சாதிப்பத்திரி
சாதிக்காய்

இவைகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைக்கவும். பின்பு கீழ் பானைக்குத் தக்கபடி வாயளவுள்ள வேறொரு பானையைக் கவிழ்த்துச் சீலைமண் செய்யவும். ஒரு குழியினுள் சீலைமண்செய்த சட்டி அமிழும்வரை புதைத்து மேல் சட்டியைச் சுற்றிலும் வறட்டிகளையடுக்கித் தீமூட்டவும். 3 ஜாமங்கள்வரை எரிக்கவும். தீ அதிகமானால் தண்ணீரினால் அணைத்துவிடவும். புடம் தானாக ஆறியபின்னர் அதைப் பிரித்து நெய்யை எடுத்து நன்றாகக் குழப்பிக்கொள்ளவும்.

இந்நெய்யில் 2 பலமளவெடுத்து, ஈசுவரனைத் தியானித்து உட்கொள்ளவும். 3 மண்டலங்கள்வரை சாப்பிடவும்.

தாதுபுஷ்டியுண்டாகும். விந்து விழாது. தேகபலம் உண்டாகும். ஆயுள் விருத்தி ஏற்படும். நரை திரை மாறும். பொன் மேனியாகும்.

## குறிப்பு :—

மேற்கூறிய செய்யுட்களிலிருந்து இம்முறையின் செய்முறை நன்றாக விளங்கவில்லை. ஆயினும் கூடியவரை ஊகித்து எழுதப்பட்டிருக்கிறது.

---

## 72. மதனகாமேசுரம்.

மானையொரு கரத்தில்வைத்து சிவனளித்த
வானைமுகனடிதொழுது மானிலத்தில்
மன்மதசிந்தாமணி லேகியகுரு நன்மைதருங்
காமுர்க்கு நானுரைப்பேன் வன்மை.

மதனகா மேசுரப்பூ வாய்த்தநிலை யாவாரை
யதனமுறு கஞ்சா வபின்பங்கி — சதமெனவே
வாலுழுவை பேய்ப்பீர்க்கு வாகா முருங்கைவிரை
சாலநிலப் பனைசாரப் பருப்பு — கோலியே
நன்றாகப் பூனைவித்து நாட்டுமத் தைவிதை
குன்றாத சாதிக்காய் கூட்டியே — நன்றாக
ஏலங் கிராம்புடனே யேமசாதிப் பத்திரியுங்
காலாமப் பத்திரியுங் காயோக்க — வோலமென
முள்ளிலவம் பிசினுடனே மூர்க்கமுள்ள கஞ்சாவும்
தள்ளுங் கசகசாத்தூள் சாற்றினேங் — கொள்ளவொரு
வெட்டிவேர் நீர்முள்ளி யேற்றகுரோ சானியுடன்
புட்டிவெல்ல முந்திரிகை பேரீச்சு — மாட்டறவே
யாவாரை யோமமதி மதுரநன்னாரி
தேவாத நாயுருவி செங்கோட்டம் — நாவாறு
மானைநெரிஞ்சி யமுக்கிரா வக்குரோடு
கான நெரிஞ்சி கடம்புடனே — மானிலத்துக்
கத்தூரிமஞ்சள் கருவேலம் பிசினுடனே
சித்திரமூலந் திரிபலையு முத்தூரங்
காட்டுக் கிராம்புடனே கச்சோலம் வெந்தயமு
நாட்டுக்குள் நாய்வேளை நாடோறுங் — கூட்டமுறு
கையாந்த கரைபச்சைக் கடலையு ளுந்துடனே
மெய்யாகச் சொன்னே மிதமாகப் — பொய்யலவே
கோரைக் கிழங்குடனே கொம்பரக்குப் பட்டையுஞ்
சேரப் பலமரையாய்ச் செப்பினேம் — கோரகப்
பங்குதான் சேரிரண்டு பழவெல்லஞ் சேர்நான்கு
மூங்கிடுநெய் சேரொன்றுக்கவே — பொங்கிவரும்
பால்சேர் பதினைந்து பழவெல்லந் தனைக்கூட்டி
நூல்போலப் பாகுறுவன்றபின்பு — மேலாகச்
சொன்னமருந் தத்தனையுந் தூள்பாகி லேபோட்டு
பன்னுபசு விநெய்கூடப் பாகித்து — வன்னமுறு
கழற்சியினிற் பாதியந்தி காலந்தனி லருந்த
வினைத்து முன்பாலொக்கவே — துளக்கமற
வீடழிக்க வேண்டா மிந்திரியம் பொய்யாம
லோடுவிணைப் பிச்சையு மூற்றிவிடும் — காடியேகள்



கள்ளமில் லைசொன்னேங் கருதி மனதில்வைத்து
மெள்ளவந்தி நாற்பதுநாள் மேவுறநீ — கொள்ளே
யுள்ளவினை களெல்லா மோடியொதுங்கிப்
பளபளெனமேனி பசும்பொன்னாந் — தளதளென
மத்தகத்தைப் போலமதமுண்டா மானிடர்க
ளுற்றவினைக ளெல்லா மோடிவிடுஞ் — சத்தியமாய்த்
தன்மந்திரி மொழியாற் சாற்றினேந் தப்பாது
மன்மதசிந் தாமணியை மானிடர்க்கு — நன்னியே
கொண்டாளனங்களெனக் கூறும்படியாக
மண்டலத்தில் வாழ்வர் மகிழ்ந்து. (கஉஅ)

(இ–ள்)

| | |
|---|---|
| மதனகாமப்பூ | நிலயாவாரை |
| கஞ்சா சுத்தியானது | அபின் |
| வாலுளுவையரிசி | பேய்ப்பீர்க்கம் விதை |
| முருங்கைவித்து | நிலப்பனைக்கிழங்கு |
| சாரப்பருப்பு | பூனைக்காலிவித்து |
| ஊமத்தை வித்து | சாதிக்காய் |
| ஏலக்காய் | கிராம்பு |
| சாதிப்பத்திரி | இலவங்கப்பத்திரி |
| முள்ளிலவம்பிசின் | கசகசா |
| வெட்டிவேர் | நீர்முள்ளிவிதை |
| குரோசானி ஓமம் | வெல்லம் |
| திராக்ஷைப்பழம் | பேரீச்சம்பழம் |
| ஆவாரை | ஓமம் |
| அதிமதுரம் | நன்னாரிவேர் |
| தேவதாரம் | நாயுருவி |
| செங்கோஷ்டம் | யானைநெருஞ்சி |
| அமுக்கிராக்கிழங்கு | அக்ரோட்டுவிதை |
| நெருஞ்சில் | நிலக்கடம்பு |
| கஸ்தூரிமஞ்சள் | கருவேலம்பிசின் |
| சித்திரமூலவேர் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | தான்றித்தோல் |
| கிராம்பு | கச்சோலம் |

| | |
|---|---|
| வெந்தயம் | நாய்வேளை |
| கையாந்தகரை | பச்சைக்கடலை |
| உளுந்து | கோரைக்கிழங்கு |
| கொம்பரக்கு | |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும்.

இவைகளுள் கஞ்சாவை ஒரு பலமாக எடுத்துக்கொள்ளவும், பழைய வெல்லம் 4 சேர் எடுத்து அதனுடன் 15 சேர் சுத்தமான பசுவின் பால்விட்டு அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கி மேற்சொன்ன சூரணத்தைப் போட்டுக் கிளறி பசுவின் நெய் 1 சேர்விட்டு லேகிய பதத்தில் இறக்கவும்.

இந்த லேகியத்தில் அரை கழற்சிக்கொட்டை யளவெடுத்து தினந்தோறும் சாயங்கால வேளையில் உட்கொள்ளவும்.

இந்திரியம் இறுகும். இதனை 40 நாட்கள் சாப்பிடச் சரீரம் மினுமினுப்பாகும். பொன்மேனிபோலாகும். தாது புஷ்டியும் ஏற்படும். தேகத்திலுள்ள வியாதிகள் தீரும்.

குறிப்பு :— இந்த மருந்தின் பெயர் "மன்மத சிந்தாமணி" யாகும். ஆனால் சுவடியில் "மதனகாமேசுரம்" என்று காணப்படுவது சரியல்ல.

## 72. பழவெதுப்பு, மருந்தீட்டிற்குக் கட்டுக்கொடி மருந்து.

மன்னுகட்டுக் கொடியிலையைத் துவைத்துநீ
ரிற் பிசைந்து வடிக்கட்டிக்கொண்
டன்னதனில் வெல்லமொடு நெய்கூட்டி
யருந்திடினு மழிஞ்சில் வேரை
நன்னயமா யரைத்திளவெந் நீர்தனிற்
குடித்திடினு நவின் மருந்தீ
டென்ன வுரைத் திடுதுயரும் பழவெதுப்புந்
தீர்ந்தின்ப மெய்துவரே (கஉசு)



(இ-ள்)

(1) கட்டுக்கொடியிலையை இடித்துச் சாறுபிழிந்து வடிக்கட்டிக்கொண்டு அதனுடன் வெல்லமும் நெய்யும் விட்டுச் சாப்பிடவும்.

(2) அழிஞ்சில் வேரை வெதுவெதுப்பான வெந்நீருடன் அரைத்துக் குடித்தாலும்

மருந்தீடு, உஷ்ணம் முதலானவை தீரும்.

## 73. கயவியாதிக்கு "கண்டங்கத்திரி லேகியம்"

கண்டங்கத் தரிநூறு பலமொருபா
னையிலிட்டுக் கலத்தண்ணீர்விட்
டெண்டருமன்(?) னதுதுணி பதக்காகும்
படிகாய்ச்சி யெதிரிறுத்துக்
கொண்டதனி லொருநூறு கடுக்காய்போட்
டெரித்திறுக்கக் குறுகும்போது
கண்டதனில் வெல்லமொரு முப்பதேனும்
பலமெடுத்துக் கலந்திறக்கே (கஙு௰)

இறக்கினபின் சுக்குத்திப் பிலியேல
மிலவங்க மிந்தநான்கும்
நிறுத்தொவ்வோர் பலத்துளன் னதிற்றூவி
லேகியமாய் நிகழச் செய்து
பிறித்ததிலோர் கடுக்காயு மிலேகியத்திற்
பாக்களவும் பெற்றருந்தில்
வெறுத்திருந்த கயநோய்கள் சிலநாளி
லகலுமென விளம்புநூலே (கஙுக)

(இ-ள்)

கண்டங்கத்திரிவேர் 100 பலமெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஒரு புதுப்பானையிலிட்டு, 12 மரக்கால் சுத்த

ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 6 மரக்காலாகும் வரை எரித்து ஒரு பாத்திரத்தில் அக்கஷாயத்தை இறுத்துக்கொள்ளவும். அதனுடன் 100 முற்றிய கடுக்காய்களைப் போட்டு மறுபடியும் வற்றவைக்கவும். பின்பு கடுக்காய்களை எடுத்துவிட்டு அக்கஷாயத்தில் 30 பலம் பழைய வெல்லத்தைக் கரைக்கவும். இதை யடுப்பின்மேலேற்றிப் பாகாக்கி அதனுடன்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| ஏலக்காய் | கிராம்பு |

இவற்றை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணஞ் செய்து போட்டு, முன்சொன்ன கடுக்காயையும் அப்படியே ஒன்று கலந்து லேகியபதத்தில் இறக்கவும். இதில் ஒரு கடுக்காயுடன், லேகியத்தில் ஒரு பாக்களவும் எடுத்து உட்கொள்ளவும். க்ஷயநோய் தீரும்.

---

## 74. க்ஷயரோகத்திற்கு "ஆடாதோடை நெய்"

பகராடா தோடைச்சா றுகுறுணி
யிருநாழிநெய் பசுவின் பாலோ
மிகவுமொரு நானாழி யிதனிற்றிப்
பிலிகண்டில் வெண்ணெயிந்துப்
பகமிழ்சீ ரகமானைத் திப்பிலிவீ
வகமாஞ்சி லமுக்கிரா வேர்
திகழ்செவிய மரமஞ்சள் பெருங்குறும்பை
கற்கடக சிங்கியின்னும் (௧௩௨)

பின்னமறு விழலரிசி யுயர்தேவ
தாரமெனப் பேசீரேழும்
மன்னுறவே யரைத்தினிது கரைத்தெடுத்துப்
பெறுபதத்தில் வடித்துவைத்துத்
துன்னுமொரு வராகனிடை யருந்திவரிற்
க்ஷயமிருமல் தொலைந்துபோகு



மென்னவுயர் மலையமதி லிருக்குமுனி
தாரணியோர்க் கிசைத்திட்டானே (௧௩௩)

(இ-ள்)

ஆடாதோடைச்சாறு 1 மரக்கால்
பசுவின் நெய் 2 படி (சின்னபடி 1)
பசுவின் பால் 4 படி ( ,, 2)

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| திப்பிலி | கண்டில்வெண்ணெய் |
| இந்துப்பு | சீரகம் |
| யானைத்திப்பிலி | சடாமாஞ்சில் |
| அமுக்கிராக்கிழங்கு | செவ்வியம் |
| மரமஞ்சள் | பெருங்குறும்பை |
| கற்கடசிங்கி | விழாலரிசி |
| தேவதாரம் | கருஞ்சீரகம் |

இவைகளை வகைக்கு (1 பலம் வீதம்) எடுத்து ஷை ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக வரைத்துச் சாறுகூட்டிய நெய்யுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் ஒரு வராகனெடையெடுத்து உட்கொள்ளவும்.

க்ஷயம், இருமல் தீரும்.

101424

## 75. க்ஷயரோகத்திற்கு "முயல் நெய்"

ஆணொடுபெண் முயலிரண்டுங் கொண்டுதலை
கால்குடனீத் தள்ளவெல்லாங்
காணவிடித் தொருபானை தனிற்போட்டு
நாலுமரக் கானீர்விட்டு

மாணவொரு குறுணியதா யவர்க்காய்ச்சி
யுறப்பிழிந்து வடித்துக்கொண்டு
நீணலஞ்சேர் பசுவின்பா லொருநாழி
யுடனாழி நெய்யுங் கூட்டே (௧௩௪)

கூட்டுமிவை யன்றியே சிறியவழு
துணையியங்கங் குலவுகின்ற
காட்டுறுதூ தளையாடா தோடைசிற்றா
முட்டியொடு கருதின் பூரா
நீட்டமுறு மிவற்றின்வேர் வகைக்கொருமுப்
பதுபலந்தா னோராய்க்கொண்டே
யீட்டுறுமெண் மரக்காணீர் விட்டெரித்துப்
பதக்காக விறக்கிச்சேர்த்து (௧௩௫)

சேர்த்துமர மஞ்சள்கிராம் பொடுகடக
சிங்கிநறுந் தேவதாரம்
ஆர்த்தவிழ லரிசிவசு வாசியொடு
வெட்பாலை யரிசிகுக்கில்
கூர்த்தவத்தித் திப்பிலிதூ தளைவேரி
னொடுசதகுப் பைநன்றாய்ப்
பார்த்திடுவெண் பிசின்சிறிய தேக்காடா
தோடையின்வேர் பகரிவ்வெல்லாம் (௧௩௬)

எல்லையுறு நாற்கழஞ்சு திரிகடுகின்
துப்பிவைதா மிசையொவ் வொன்றாய்ச்
சொல்லவுறு பலஞ்சாதிக் காய்பத்துத்
தான்றிக்காய் தொடர்கடுக்காய்
நெல்லிமுள்ளி வகைக்கொருமுப் பதுபலமா
மின்னவையு நிலத்தினோங்கு
நல்லாடா தொடைச்சாறு விட்டரைத்து
முன்னதொடும் நயக்கக்கூட்டே (௧௩௭)



நயனுதவு பசுவின்பா லிருகுறுணி
யுடன்விட்டு நன்கெரித்துப்
பயில்பதத்தில் வடித்தொருமுக் கழஞ்சாறுநெய்
கொளினிருமல் பாவுமீளை
வியனுறுமிம் மருந்தருந்து முதனாளின்
விரோசனஞ்செய் விக்கவேண்டும்
... ... ... ... ... ...
... ... ... ... ... (௧௩௮)

(இ-ள்)

ஆண்முயல் ஒன்றும், பெண்முயல் ஒன்றும் கொண்டு வந்து தலை, கால், குடல் இவைகளை நீக்கிவிட்டு அப்படியே சிறுசிறு துண்டுகளாக நறுக்கி இடித்து ஒரு பானையில் போட்டு 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு ஒரு மரக்காலாகுமட்டும் வற்றக் காய்ச்சவும். பின்பு மாம்ஸத்தை வஸ்திரத்தில் வைத்து நன்றாகப் பிழிந்து வைத்துக்கொண்டு அக்கஷாயத்துடன்

பசுவின் பால் 1 படி
பசுவின் நெய் 1 படியும்

கலந்துகொள்ளவும்.

| | |
|---|---|
| சிறுவழுதுணைவேர் | தூதுவளைவேர் |
| ஆடாதோடைவேர் | சிற்றாமுட்டி |
| இன்புராச்சமூலம் | இசங்கம் வேர் |

முதலான சரக்குகளை வகைக்கு 30 பலமாக எடுத்துக் கொண்டு இடித்து 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 2 மரக்காலாகச் சுண்டவைக்கவும். இக்கஷாயத்தை யும் மாம்ஸ கஷாயத்துடன் சேர்த்துக்கொள்ளவும்.

பின்பு

| | |
|---|---|
| மரமஞ்சள் | கிராம்பு |
| கற்கடசிங்கி | தேவதாரு |
| விழலரிசி | ஆடாதோடைவேர் |

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | குக்கில் |
| யானைத்திப்பிலி | தூதுவளைவேர் |
| சதகுப்பை | வெளிச்சைப்பிசின் |
| சிறுதேக்கு | வேங்கைவைரம் |

இவைகள் வகைக்கு 5 வராகனெடை

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |

இவைகள் வகைக்கு 1 பலம்

சாதிக்காய் 10 (எண்ணிக்கையில்)
கடுக்காய்த் தோல்
தான்றிக்காய்
நெல்லிக்காய்

வகைக்கு 30 பலமும் எடுத்து எல்லாவற்றையும் கல்லுரலில் விட்டு இடித்து ஆடாதோடைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து முன்கூட்டிய நெய்யுடனே சேர்த்துப் பசுவின் பால் 2 மரக்கால் விட்டு அடுப்பின்மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்நெய்யில் 3 கழஞ்சளவெடுத்து உட்கொள்ளவும்.

ஈளை, இருமல் முதலானவை தீரும்.

இந்நெய்யை உட்கொள்ளுவதற்கு முன் பேதிக்குச் சாப்பிடுதல் வேண்டும்.

## 76. கயரோகத்திற்குத் "தேவதாளி நெய்"

தேவதா ளிச்சாறு மஞ்சட்சா
றுடனாவின் றிகழுநெய்பால்
மேவும்வகைக் கிருநாழி நானாழி
பேய்புடலின் விரவுசாறு



பாவுறுகை யார்தகரை யுடனாடா
தொடைமேனி பாவுஞ்சாறு
தாவில்வகைக் கொருநாழி யின்னதற்றிற்
பெருங்குறும்பை தரும்வசம்பு (க௩௯)

வசமுறுசி ரகங்கடுகு ரோகிணிநல்
விழலரிசி மன்னுங்காய
மிசைவுபெறு திரிகடுகு செவ்வியமதி
விடையமுய ரெவச்சாரத்தோ
டசைவில்சிவ னார்வேம்பு முத்தக்கா
சியல்கடுக்கா யணிமுருங்கை
பசுமையுறு முடக்கொற்றான் கழற்கொடிக
ளின்கொழுந்து பரிவாய்க்கொள்ளே (க௪௰)

கொண்டவற்றை வகைக்கிளவெந் நீரிற்பாக்
களவரைத்துக் குழப்பிநீடு
மண்டழலின் மெழுகுபத மாகவே
யெரித்தினிது வடித்துவைத்திட்
டெண்டருநாட் கிருகழஞ்சு காலையினி
லருந்திவரி னிருமலீளை
மண்டலத்திற் றங்காது புளிப்பொடுகைப்
புத்தவிர்த்து மற்றதுண்ணே (க௪௧)

(இ-ள்)

| | |
|---|---|
| தேவதாளிச்சாறு | 2 படி |
| மஞ்சட்சாறு | ,, |
| பசுவின் நெய் | ,, |
| பசுவின் பால் | ,, |
| பேய்ப்புடல்சாறு | 4 படி |
| கையாந்தகரைச்சாறு | ,, |
| ஆடாதோடைச் சாறு | ,, |
| குப்பைமேனிச் சாறு | ,, |

இவைகளை யொன்றுகலந்து

| | |
|---|---|
| பெருங்குறும்பை | வசம்பு |
| சீரகம் | கடுகரோகிணி |
| விழலரிசி | பெருங்காயம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | செவ்வியம் |
| அதிவிடையம் | எவச்சாரம் |
| சிவனார்வேம்பு | கோரைக்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | முருங்கைக் கொழுந்து |
| முடக்கொத்தான் | கழற்சிக்கொழுந்து |

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்து வெதுவெதுப்பான வெந்நீர் விட்டு நன்றாக அரைத்துச் சாறுகள் கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் எரிக்கவும்.

இந்நெய்யை வகைக்கு 2 கழஞ்சளவெடுத்து காலை வேளையில் சாப்பிட

இருமல், ஈளை இவைகள் 40 நாட்களுள் தீரும்.

**பத்தியம் :—**

புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும், கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கிவிடவும்.

## 77. கயரோகத்திற்குக் "குதிரைலத்தி எண்ணெய்"

இயல்குதிரை யிலத்திதனைப் பிழிந்திடுசா
றொருநாழி யெண்ணெய் நாழி
பயிலிவற்றி னுரியமிள கரைத்திட்டு
காய்ச்சியுறு பதத்திறுத்து
நயமுறநாற் பதுநாள்கா லையிலருந்தக்
கயரோகம் நடுங்கியோடும்



பயமொடுநெய் முதலாகும் புளியோடுகைப்
பாகாது பத்தியந்தான் (கசஉ)

(இ-ள்)

அப்போதிட்ட (புதிய) குதிரை இலத்தியைப் பிழிந்தெடுத்த சாறு 1 படியுடன் சுத்தமான நல்லெண்ணெய் 1 படிவிட்டு, அதனுடன் மிளகு (சுமார் 5 பலம்) எடுத்து நன்கு அரைத்துக் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்த எண்ணெயை 40 நாட்கள் அதிகாலையில் உட்கொள்ளவும். கயரோகம் தீரும்.

**பத்தியம் :**

பசுவின் பால், நெய் முதலானவைகளைக் கூட்டி புளிப்புச் சுவையுள்ளதும், கைப்புச் சுவையுள்ளதுமான பதார்த்தங்களையும் நீக்கிவிடவும்.

## 78. கயரோகத்திற்கு "எலியால் எண்ணெய்"

எலியாலி னேடுநிலக் குராவகைக்கு
பலமிருப தியலழிஞ்சில்
சலமுறுபேய்ப் பீர்க்கினொடு பிராயெனுமிம்
மூவகையுஞ் சமூலமாக
வலனுதவு சிறுகுறட்டை யப்பையமுக்
கிராக்கிழங்கு வகைக்குப்
பலமறுகு மூக்குறட்டை சாறடைவேர்
வகைக்கோரைம் பதுபலந்தான் (கசங)

பலனுறமின் னவையெல்லா மிடித்திருது
ணிப்புனலிற் பதியப்போட்டு
நலனுறநான் கினிலொன்றாய்க் காய்ச்சிவடித்
ததிமதுரம் நவில்கிராம்பு

குலனுறுநற் றிரிகடுகு திரிபலைகற்
கடகசிங்கி கோட்டமேலம்
இலவங்கஞ் சிறுதேக்குப் பூதவிருக்
கங்குக்கி லிசைசேங்கொட்டை (௧௪௪)

இசையிருசீ ரகமரத்தை பொன்னினரி
தாரமிவை யெலாம்வகைக்கு
நசையுறவோர் பலமரைத்துக் கலந்தெண்ணெய்
நானாழி நயக்கக்கூட்டி
யசையெரியி லெரித்திலகு பதத்திறக்கி
வடித்துத்தே னதுவுங்கூட்டி
மிசையிரண்டு வராகனெடை யருந்திவரிற்
கயரோகம் விலகிப்போமால் (௧௪௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| காட்டாமணக்கு | 20 | பலம் |
| நிலக்குரா (?) | 20 | ,, |
| அழிஞ்சில் சமூலம் | 10 | ,, |
| பேய்ப்பீர்க்கு ,, | 10 | ,, |
| பிராய் ,, | 10 | ,, |
| சிறுகுறட்டை | 10 | ,, |
| அப்பைக்கோவைக்கிழங்கு | 10 | ,, |
| அமுக்கிராக்கிழங்கு | 10 | ,, |
| மூக்கிரட்டை | 50 | ,, |
| சாறடைவேர் | 50 | ,, |

இவைகளை நறுக்கி ஒன்றிரண்டாக இடித்து ஒரு பெரும் பானையிலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு ஒருநாளூற வைத்து அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்றாகும்வரை வற்ற வைக்கவும்.

இக்கஷாயத்துடன்

| | |
|---|---|
| அதிமதுரம் | கிராம்பு |
| சுக்கு | திப்பிலி |



| | |
|---|---|
| மிளகு | கற்கடசிருங்கி |
| கோஷ்டம் | ஏலக்காய் |
| இலவங்கப்பத்திரி | சிறுதேக்கு |
| பூதகரப்பான்பட்டை | வெருகங்கிழங்கு |
| சுத்திசெய்த குக்கில் | சுத்திசெய்த சேங்கொட்டை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| சுத்திசெய்த பொன்னதாரம் | |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் கஷாயம் விட்டரைத்துச் சுத்தமான நல்லெண்ணெய் 4 படிவிட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் கொஞ்சம் தேன் விட்டு வேளைக்கு 2 வராகனெடை யளவெடுத்து உட்கொள்ளவும்.

கயரோகம் தீரும்.

## 79. கயரோகத்திற்குப் 'பிட்டு'

மிளகொடுசீ ரகம்புழுங்க லரிசிவகைக்
கொவ்வொருசேர் விளம்பிமூன்று
மிளவரையாய் வறுத்தெடுத்துப் பொடிசெய்து
பனவெல்ல மெண்பலஞ்சேர்த்
தளவுழக்குப் பசுவினெய் காய்வித்துச்
சிறங்கைது ளதனிற்போட்டுக்
கிளறியருந் திடுகவிந்தப் படிமூன்று
தினமருந்திற் கெடுநோய் எட்டி (௧௪௬)

கெடுதிபுரி யிருமல்சீ விழுதல்சுரம்
புகைச்சலொடு கிளத்துங்கோழை
யுடலதற் குத்துவலி தலைவலிவாய்
நீர்சுழற்ற லுடம்புதன்னின்
முடைநாற்ற நாறிடுதல் குடற்பிரட்டு
நெஞ்சுவலி மொழிவிலாவின்

இடைவலிவெங் கயஞ்சீயி னுடன்மிகுநீர்
விழுந்திடுத லெவையுந்தீரும் (க௭௭)

(இ-ன்)

மிளகு சீரகம்
புழுங்கலரிசி

இவை வகைக்கு ஒரு சேர்எடுத்து இவைகளை ஒரு இருப்புச்சட்டியிலிட்டு இளவறுப்பாய் வறுத்துக்கொள்ளவும். பின்பு கல்லுரலிலிட்டு இடித்துப் பனைவெல்லம் 8 பலம் சேர்த்துப் பசுவின் நெய் ஒரு உழக்கு காய்ச்சி அதில் ஒரு சிறங்கையளவு இச்சூரணத்தை யிட்டுப் பொரித்துச் சாப்பிடவும். இம்மாதிரி 3 தினங்கள் உட்கொள்ளவும்.

| | |
|---|---|
| இருமல் | சீழ்விழுதல் |
| சுரம் | புகைச்சல் |
| கோழைவிழுதல் | குத்துவலி |
| தலைவலி | வாய்நீர் சுரத்தல் |
| உடம்பின் நாற்றம் | குடற்புரட்டு |
| நெஞ்சுவலி | விலாவலி |
| கயரோகம் | சீழுடன் நீர்விழுதல் |

முதலான ரோகவகைகள் தீரும்.

---

## 80. கயத்திற்கு "முயல் நெய்"

எலும்புதோல் கால்போக்கி நூறுபல
முயற்றசையி லினியதண்ணீர்
கலம்பெறவிட் டொருபதக்கு நாழியாகக்
காய்ச்சியதிற் கண்டகாலி
வலந்தருவே ருடன்சுழலா வாரையாடா
தோடைவேர் மன்னுகின்ற



சலந்தருகை யாந்தகரை யிவையொவ்வோர்
கழஞ்சுவகை தனக்குத்தானே (க௭௮)

தானமுருங் கைகொடி வேலிவேர்
நாற்கழஞ்சு தன்வகைக்கு
மானமுறப் போட்டன்று செய்தகடா
யந்தன்னில் வளர்நானாழி
யீனமறக் கலந்துநெய் நாழிவிட்டுச்
சவுக்கார மினியகாயம்
ஆனைத்திப் பிலிசெவ்வியஞ் சிறுமூலம்
வாலுளுவை யரிசிமேலும் (க௭௯)

மேலுறுநத் ததுவச்சிதை (?) யிருவகைச்சீ
ரகத்தினொடு விளங்கிந்துப்பு
சீலமுறு மசமோதம் வகைக்கிரண்டு
கழஞ்சுபொடி செய்துபோட்டுச்
சாலவெரித் துப்பதத்தில் வடித்தொருமுக்
கழஞ்சுகொளிற் சாறுங்காலை
பீலிகைமேன் மூச்சிளைப்புச் சத்திகுன்மங்
கயமிருமல் பெயர்ந்துபோமால் (க௮௦)

(இ-ள்)

எலும்பு, தோல், கால் (குடல்) இவைகளை நீக்கினபின் இருக்கும் முயலின் தசை 100 பலத்துடன் 12 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 2⅛ மரக்காலாகும்வரை வற்றவைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | சுழலாவாரை |
| ஆடாதோடைவேர் | கையாந்தகரை |

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை

முருங்கை வேர்
கொடிவேலி வேர்

இவ்விரண்டும் வகைக்கு 5 வராகனெடை

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு ஜலம்விட்டு ஒரு படியாகும்வரை வற்றவைக்கவும். இதனுடன் நெய் ஒரு படியும் சேர்த்து (5 சேர்) அதனுடன்

| | |
|---|---|
| சவுக்காரம் | பெருங்காயம் |
| யானைத்திப்பிலி | செவ்வியம் |
| திப்பிலி | வாலுளுவையரிசி |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| இந்துப்பு | ஓமம் |
| பிஞ்சுக்கடுக்காய் | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையளவெடுத்துச் சூரணித்துப் போட்டு ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி ஒரே சீராக வெரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்நெய்யில் தினந்தோறும் $3\frac{3}{4}$ வராகனெடையளவெடுத்துக் காலையில் உட்கொள்ளவும்.

பீலிகை, மேல்மூச்சு, இளைப்பு, சத்திகுன்மம், க்ஷயம், இருமல் இவைகள் தீரும்.

---

## 81. வாதக்ஷயரோகத்திற்கு எண்ணெய்.

சங்குடனு டாதொடைகை யாந்தகரை
நொச்சியொடு தகுபொரும்பி
லங்குறுதேட் கொடுக்கிசிறு வழுதுணைநற்
பொடுதலைநீ டழிஞ்சிலோற்பாற்
றங்கிடுசா றணையிவற்றி னிலைச்சாறேரவ்
வோர்நாழி தருநல்லெண்ணெய்
புங்கமுற விருநாழி கலந்திவற்றி
னதிவிடயம் பொருந்துமேலம் (கஈக)

ஏலுறுவேர்க் கொம்புகொடி வேலிதிப்பி
லிசெவ்விய மிளகுங்காயம்



பாலுறுசீ ரகங்கடுகு கடுகுரோ
கிணிகோரைப் பருங்கிழங்கு
காலிலகு சிறுதேக்குப் பெருங்குறும்பை
வகைக்கிரண்டு கழஞ்சரைத்து
மாலுறச்சேர்த் தெரித்திருகா செடைகொளின்வா
தக்கயநோய் மாறிப்போமே (கஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கம்வேர் | சாறணை |
| கையாந்தகரை | ஆடாதோடை |
| பொரும்பிலி (சுழலாவாரை) | நொச்சி |
| சிறுதேட்கொடுக்கு | சிறுவழுதுணை |
| பொடுதலை | அழிஞ்சில் |

இவ்வகை மருந்துகளின் இலைச்சாறு வகைக்கு ஒரு படியுடன், சுத்தமான நல்லெண்ணெய் 2 படியும் விட்டு ஒன்று கலந்து,

| | |
|---|---|
| ஏலக்காய் | சுக்கு |
| கொடிவேலிவேர் | திப்பிலி |
| செவ்வியம் | பெருங்காயம் |
| சீரகம் | கடுகுரோகிணி |
| கோரைக்கிழங்கு | சிறுதேக்கு |
| பெருங்குரும்பை | கடுகு |
| *மிளகு | *அதிவிடயம் |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதம் எடுத்துச் சூரணம் செய்து சாறுகூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதில் 2 காசளவெடுத்து உட்கொள்ளவும். வாதக்ஷயரோகம் தீரும்.

---

* 74. நெ. சுவடியில் உள்ளது.

## 82. வாத கய முதலானதற்குக் குடிநீர்.

போமிதற்குக் குடிநீர்தேட் கொடுக்கிசங்கம்
வேரினொடு புகலுஞ்சுக்குத்
தாமுறுமா டாதொடைகை யாந்தகரை
சிறுதேக்குத் தருமிவ்வெல்லா
மாமிருகா செடைவகைக்கிட் டிருநாழி
நீரிலுழக் காகக்காய்ச்சி
யாமமதி லசனத்தின் மேற்குடிக்கக்
கயமிரும லெலவையுந்தீரும் (கஙஈ.)

(இ-ள்)

| | |
|---|---|
| தேட்கொடுக்குவேர் | சங்கம்வேர் |
| சுக்கு | ஆடாதோடை |
| கையாந்தகரை | சிறுதேக்கு |

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சின்னபடி அரைப்படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து இராச்சாப்பாட்டிற்குப் பின் பருகவும்.

---

## 83. வாத கயத்திற்கு வாழைப்பழம்.

பசுவினெய் படியொன்றி லுயர்மொந்தம்
வாழையின்றன் பழந்தான்மூன்று
மிசையுறதோ லுரித்திட்டு வைத்துமறு
நாளொன்று மேவக்கொண்டு
நசையினுட னருந்திநெய்யைக் கழுத்துக்குக்
கீழுடலி னன்குபூச்சு
வசமுறவோர் மூன்றுநாள் பூசியருந்
தக்கயமும் வறட்சியும்போம் (கஙச)

(இ-ன்)



பசுவின் நெய் ஒருபடியுடன்,

மொந்தன் வாழைப்பழம் மூன்றைத் தோலுரித்துப் போட்டு ஒருநாள் முழுதும்ஊறவைத்து மறுநாள் வாழைப் பழத்தைத் தின்றுவிட்டு அந்நெய்யைக் கழுத்துக்குக் கீழே உடம்பில் நன்றாகப் பூசவும். இவ்வாறு 3 நாட்கள் செய்ய கயமும், வறட்சியும் போகும்.

---

## 84. வறட்சி முதலானதற்கு "ஊமத்தை மருந்து"

மருளூமத் தங்காயி னிளசாயவ்
விரைநசுங்கா வகைநறுக்கி
விரவுழக்குச் சாறுபிழிந் தருந்திலுடன்
வாயிலெதிர் மிகவெடுக்கும்
பாவுறுசி யுடன்வழலை யாகவிழும்
வெள்ளாட்டுப் பாலிற்கஞ்சி
மருவிடச்செய் தருந்திலுயர் கயம்வறட்சி
தீருமுந்நாள் வலிந்துசெய்யே (கஙரு)

செய்திடுபத் தியமுருங்கை யிலைக்காயா
மொருபதுநாள் சென்றபின்பு
மெய்தருபே ராத்திக்காய் கொண்டுலர்த்தி
யிடித்துத்தூள் விரவச்செய்து
பைதவிர்தேன் றன்னில்வெரு கடியளவு
கொண்டருந்தி வரில்வறட்சி
கைதருவெங் கயநோய்நீ டிருமல்முத
லானபிணி கலங்கியோடும் (கஙசு)

(இ-ள்)

இளம் ஊமத்தங்காயின் விதை

இவைகளை இடித்து ஒரு உழக்குச் சாறு பிழிந்துகொள்ளவும். இதனை உட்கொள்ள அதிகமாக வாந்தி உண்டாகும். சீழ்போலும் கபம்போலும் வெளிவரும்

வெள்ளாட்டுப்பால்விட்ட கஞ்சியருந்தவும்.

கயம், வறட்சி முதலானவைகள் 3 நாட்களில் தீரும்.

**பத்தியம் :—**

முருங்கையிலை, முருங்கைக்காய் முதலியவைகளை 10 நாட்கள் உட்கொள்ளவும்.

போத்திக்காய் வற்றலைச் சூரணஞ்செய்து மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

வறட்சி, இருமல், கயநோய் தீரும்.

---

## 85. கயம், வறட்சி முதலானவைகட்கு "ஆமலகாதிக்ருதம்"

பசுவிநெய் படியொன்றும் பச்சைநெல்லிக்
 காய்ப்பாலைப் பழம்நாரத்தை
யிசைதருநற் பழமானை நெருஞ்சியோ
 ரிலைக்கஞ்ச மின்பஞ்செய்யும்
பசியபழம் பாசியிவற் றுறுசாறு
 வகைக்குரியும் பரிவாய்க்கூட்டி
நசைதருசீ ரகஞ்சாதிக் காய்வகைக்குப்
 பலமிரண்டு நயமாய்க்கொள்ளே (௧௫௭)

கொண்டிடுசிற் றரத்தைபல மரைக்கால்மென்
 செங்கழுநீர் கோட்டத்தோடு
தண்டருவெட் பாலையரிக் கடுகுரோ
 கணிவகைக்குத் திப்பிலிக்கால்



விண்டிடுதிப் பிலிபலங்கால் சிறங்கைநு
 தளம்பழம்பால் விட்டரைத்து
மண்டிடவே கரைத்திளநீ ரிரண்டுடனே
 பசுவின்பால் வளர்நாழி (௧௫௮)

நாழிசிற்று மணக்கெண்ணெய் விட்டிரவி
 புடமாக நயக்கவைத்து
வாழியிளம் பதமாக நெய்தெளிந்து
 வரும்போது வடித்துக்கொண்டு
சூழிருபோ தினுங்காண்டி யருந்தியுப்புப்
 புளிதவிர்த்து துயக்கிநெய்பா
லெழுநாளி னிற்கைகா லுடம்பெரிவு
 வறட்சிமயக் கெவையுந்தீரும் (௧௫௯)

(இ-ள்)

| | |
|---|---|
| பசுவின் நெய் ஒருபடி | |
| நெல்லிக்காய்ச் சாறு | ½ படி |
| பாலைப்பழச் சாறு | ,, |
| நாரத்தைப்பழச் சாறு | ,, |
| யானைநெருஞ்சிச் சாறு | ,, |
| ஓரிலைத்தாமரைச் சாறு | ,, |
| பழம்பாசிச்சாறு | ,, |

இவைகளை யொன்றுகலந்துகொண்டு, இவற்றுடன்

சீரகம் சாதிக்காய்

இவ்விரண்டும் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| சிற்றரத்தை | $\frac{1}{8}$ பலம் |
| செங்கழுநீர் | ¼ பலம் |
| கோஷ்டம் | ,, |
| வெட்பாலையரிசி | ,, |
| கடுகரோகிணி | ,, |
| திப்பிலி | ,, |
| நுதுவளம்பழம் | ஒருசிறங்கை |

இவைகளை யொன்றிரண்டாகவிடித்துப் பசுவின் பால் விட்டு இரு இளநீரு (சுமார் 5 சேர்) டன் குழப்பி, பசுவின் பால் 4 படியும், சிற்றுமணக்கெண்ணெய் ஒருபடியும் சேர்த்துக் கலந்து சூரியபுடம் இடவும். ஐந்தாறு நாட்கள் சென்றபின்னர் இதை யடுப்பின் மேலேற்றி சிறுகச் சிறுகக் கொதிக்கவைத்து நெய் வெளியே தெளிந்துவரும் பதம் கண்டு அடுப்பின் மேலிருந்து இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

இந்த நெய்யில் ஒரு சிறு கரண்டி யளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

**பத்தியம் :—**

உப்பு, புளி, (கசப்பு) முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கி பசுவின் நெய், பால் இவைகளைக் கூட்டவும்.

7 நாட்களுள் கைகாலுடம்பெரிச்சல், வறட்சி, மயக்கம் முதலானவைகள் தீரும்.

---

## 86 க்ஷயம் இருமலுக்கு "ரஸபற்பம்"

மருவுசிற்று மணக்கம்வேர்ப் பட்டையரைத்
துக்குகையாய் மன்னச்செய்தே
யிரதத்தை யதில்விட்டு மூடியொரு
சட்டியினுப் பிட்டுவைத்து
விரவிடுமே வொருசட்டி யான்மூடிச்
சேலைமண்ணு மேவச்செய்தே
யிரவுபக லிரண்டுநா ளொருவிறகு
கொண்டுவிடா தெரித்துமுன்னர் (கசுய)

முன்னியிடு மூன்றுநாட் பார்க்கிலுயர்
பற்பமதாய் முடிந்திருக்கும்
பின்னுப்புப் படர்தெடுத்துப் பொடிசெய்து
சிமிழொன்றிற் பிறங்கவைத்து



மன்னுபண வெடைதேனிற் காலையிலோர்
மூன்றுநாள் மகிழ்ந்தருந்திப்
பன்னிடுநெய் பால்கூட்டிப் புளியுப்பு
விடிற்க்ஷயநோய் பறக்கும்பாரே (கசுக)

(இ-ள்)

சிற்றுமணக்கம் வேர்ப்பட்டையைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து (விளாங்காயளவு எடுத்துக்) குகையாகச் செய்யவும். அதனுள் சுத்திசெய்த பாதரஸத்தை (8 வராகனெடை) விட்டு மறுபடியும் அதன் வேர்ப்பட்டையை அரைத்த விழுதினால் மூடிவிடவும். ஒரு சட்டியில் உப்பைப் பரப்பி அதன்மேல் மேற்சொல்லிய விழுதை வைத்து (மறுபடியும் உப்பைப்போட்டு மூடி) மேலே வாய்க்குப் பொருந்தும் ஒரு சட்டியினால் மூடிச் சேலைமண் செய்யவும்.

நன்றாகக் காய்ந்தபின்னர் இதனை அடுப்பின் மேலேற்றி 2 நாட்கள் வரை இரவு பகல் விடாமல் ஒரே விதமான விறகினால் எரிக்கவும்.

பின்னர், மருந்து தானாகவே ஆறிய பின் மூன்றும் நாட் காலை சீலைமண்ணைத் திறந்து பார்க்க இரஸபற்பம் கிடைக்கும். இதனைப் பொடிசெய்து ஒரு சிமிழில் வைத்துக்கொள்ளவும். இதில் $3\frac{1}{3}$ அளவெடுத்துக் காலை நேரங்களில் தேனில் உட்கொள்ளவும். இவ்வாறு 3 நாட்கள் சாப்பிட்டுப் பசுவின் பால், நெய் சேர்த்துக்கொண்டு புளிப்பு, உப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

---

## 87. க்ஷயம், இருமல், காசத்திற்கு "துளஸீகிருதம்"

திருத்துழா யுடனாடா தோடைகையாந்
தகரைதனிச் செய்யமுள்ளி
செருப்படிபொன் னுவாரை தூதளைநற்
பொடுதலைமேற் றிகழுகின்ற

முருக்கிவற்றி னிலைச்சாறோ டிருநாழி
பசுவினெய் மொழியுநாழி
பொருந்துறச்சேர்த் திதிற்கோட்டந் தான்றிக்காய்
தூதளைவேர் புகலுமேலம் (க௱௨)

ஏலுறுகற் கடசிங்கி திப்பிலிவா
லுளுவையரி யின்புராவேர்
மேலுறுகார் போகரிசி யசமதா
கத்தியொடு விளம்பிடுங்கச்
சோலமொடு வசம்பினிய செவியமிந்துப்
பமுக்கிராத் துன்னிடும்வேர்
பாலுறுநன் னாரிசங்கம் வேர்வகைக்குக்
கழஞ்சுதான் பரிவாய்க்கொள்ளே (க௱௩)

கொண்டரைத்து வெள்ளாட்டுப் பாலொடுநெய்
யதுங்கூட்டிக் கூட்டியெல்லாம்
மண்டழலி னெரித்திலகு மெழுகுபதந்
தனிலிறக்கி வடித்துக்கொண்டு
தண்டருதே னுடன்கழஞ்சு நெய்கலந்திட்
டருந்திவரிற் சார்ந்திருந்த
மிண்டிருமல் கயரோகங் காசமிவை
சிலநாளின் விலகிப்போமால் (க௱௪)

(இ-ள்)

துளசிச்சாறு
ஆடாதோடைச்சாறு
கையாந்தகரைச்சாறு
செம்முள்ளிச்சாறு
செருப்படிச்சாறு
பொன்னாவரைச்சாறு
தூதுவேளைச்சாறு
பொடுதலைச்சாறு
முருங்கிலைச்சாறு



இவைகளை வகைக்கு 2 படி (சின்னபடி 1) வீதம் எடுத்துப் பசுவின் நெய் 1 படியும் (5 சேர்) விட்டு ஒன்றாகக் குழப்பிக் கொண்டு,

| | |
|---|---|
| கோஷ்டம் | தான்றித்தோல் |
| தூதுவேளைவேர் | ஏலக்காய் |
| கற்கடசிங்கி | திப்பிலி |
| வாலுளுவையரிசி | இம்புராவேர் |
| கார்போகவரிசி | ஓமம் |
| பூலாங்கிழங்கு | வசம்பு |
| செவ்வியம் | இந்துப்பு |
| அமுக்கிராக்கிழங்கு | நன்னாரிவேர் |
| சங்கம்வேர் | |

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஆட்டுப்பால் விட்டு நன்றாகவரைத்துச் சாறுகூட்டிய நெய்யுடன் ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். இதனை வடிக்கட்டிப் பழகிய மட்பாண்டத்தில் பத்திரப்படுத்தி வேண்டும்போது 1¼ வராகனெடை நெய்யுடனே சிறிது தேன்விட்டு ஒன்றுகலந்து சாப்பிடவும்.

இருமல், கயரோகம், காசம் முதலான ரோகங்கள் சில நாளில் தீரும்.

---

## 88. கயம், இருமல், இளைப்புக்குத் "தூதுவேளை நெய்" முதலிய மருந்துகள்.

ஊரினுறு பன்றிதனைப் புளிக்கறிசெய்
தெட்டுநா ளுகந்தருந்திப்
பேருறுதேற் றங்கொட்டை யரைத்தெலுமிச்
சங்காயின் பருமன்கொண்டு
சீருறுநற் கடுகரோ கணியொருகால்
வராகனெடை சிவந்தவாழை

யாருறுதீங் கனியொன்றும் பிசைந்துமுந்நா
        ளினிதருந்தி யன்னதன்பின் (௧௬௫)

அன்னதன்பின் தூதளைச்சா றுழாக்கா
        ழாக்குத்தேன் தன்னோடுற்ற
பின்னமுறு கடுகரோ கணியொருகால்
        வராகனெடை பெயர்ந்தரைத்துப்
பன்னிடொரு மூன்றுநா ளிருபோதுங்
        குடித்ததன்பின் பகரோர்சட்டி
தன்னிலொரு படியளவு தூதளையின்
        பழத்தினிலத் தனைப்பால்விட்டு (௧௬௬)

விட்டுமதித் தவ்வளவவ் விலைச்சாறு
        விட்டெரித்து விளம்பவ்வாறே
திட்டமுற நெய்விட்டுத் திப்பிலிமூ
        லங்கரிய சீரகத்தோ
டிட்டமிகு கடுகுரோ கணிமிளகு
        திப்பிலித்து ளின்னவைந்துங்
கிட்டமொவ்வோர் பலமினிய சருக்கரையைம்
        பலம்போட்டுக் கிளறிவையே (௧௬௭)

வைத்ததனி லெலுமிச்சங் காயினள
        விருபோதும் வகுத்தருந்திற்
சித்தமயக் கிடுமிரும லீளைகய
        முடனிளைப்புத் தீர்ந்துபோகும்
பத்தியமுப் புப்புளிப்பா காதுமுருங்
        கைப்பிஞ்சு பகர்திருக்கை
யுய்த்தகரு வாடுசுறு விளங்கிளை
        யாகுமென வுரைக்குநூலே (௧௬௮)

(இ-ள்)

(1) ஊர்ப்பன்றி மாம்ஸத்தைப் புளியிட்டுக் கறியாக சமைத்து 8 நாட்கள் சாப்பிட்டு,



தேற்றாங்கொட்டையை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துக் கடுகரோகிணி ¼ வராகனெடையும் சேர்த்து சிவப்பு வாழைப்பழம் ஒன்றும் சேர்த்துப் பிசைந்து 3 நாட்களுக்குச் சாப்பிடவும்.

(2) பின்னர்

| | |
|---|---|
| தூதுவேளையிலைச்சாறு | ஒரு ஆழாக்கும் |
| சுத்தமான தேன் | ,, |
| கடுகரோகணி | ¼ வராகனெடையும் |

சேர்த்து மற்றும் 3 நாட்களுக்கு தினம் 2 வேளைகள் உட்கொள்ளவும்.

(3) ஒரு சட்டியில் தூதுவளம்பழம் 1 படி போட்டு (சின்னப் படி ½) ப் பசுவின்பால் 1 படி, தூதுவேளையிலைச்சாறு 1 படி, பசுவின் நெய் 1 படி, இவற்றை யொன்றுகலந்து

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | கருஞ்சீரகம் |
| கடுகரோகிணி | மிளகு |
| திப்பிலித்தூள் | |

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து இடித்துப் போட்டு, சர்க்கரை 5 பலம் போட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு எலுமிச்சையளவெடுத்துத் தினம் 2 வேளை சாப்பிட்டுவர

இருமல், ஈளை, கயம், உடல் இளைப்பு முதலானவை தீரும்.

**பத்தியம் :—**

உப்பு, புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள் ஆகாது. முருங்கைப் பிஞ்சு, திருக்கைக் கருவாடு, சுறாக்கருவாடு, இளங்கிளை முதலியவைகளை உட்கொள்ளலாம்.

## 89. மதன காமேச்வரம்

முருங்கைவித்தின் விழுதினொடு முத்தக்காசு
    முசுட்டைவித்துக் குறுவைவித்து முயன்றுதேடும்
நெருஞ்சிவேர் நிலப்பனையின் கிழங்குமற்ற
    நெடுங்கான்பூ னைக்காலி வித்துங்கூட்டி
யொருங்காக வுலர்த்திநிறை யொக்கத்தூள்செய்
    தருக்கிடுநெய் தேனதனிற் கொள்வீராகிற்
றிருந்தவே சந்ததமு முயங்கிப்பன்னுந்
    தெரிவையர்க்கு மதனெனத் திரியலாமே (கசாகூ)

(இ-ள்)

பச்சை முருங்கைவிதையின் விழுது
கோரைக்கிழங்கு
முசுட்டை வித்து
குறுவை வித்து
நெருஞ்சி வேர்
நிலப்பனைக்கிழங்கு
பூனைக்காலி விதை

இவைகளைச் சமனெடுத்து உலர்த்தித் தூள் செய்து விழுதின் எடையெடுத்து நெய், தேன் இவ்விரண்டையும் சேர்த்துக் குழப்பித் தினந்தோறும் உட்கொள்ளத் தாதுபுஷ்டி உண்டாகும்.

---

## 90. தாதுவிருத்திக்குச் சொர்ணபற்பம்.

பொற்றகடு பலமிரண்டோ டரையேசுத்தி
    புரியிரதம் பலமெட்டுக் கந்தகந்தா
னுற்றபல மிருமூன்று மிவற்றைக்கூட்டி
    யுயர்ந்திடுசெம் பரத்தைப்பூச் சாற்றினோடு
பற்றரசங் கொழுந்தாலங் கொழுந்துநல்ல
    பதுமத்தின் சாறுநன் னரிச்சாறு



கற்றாழஞ் சாறுவே றெவ்வோர்சாமங்
    கல்வத்தில் விட்டரைத்து வழித்துக்கொள்ளே
(கஎ0)

கொண்டதனை யொருகாசிக் குப்பிதன்னிற்
    கூறிடுமுக் காற்குப்பி யுறவடைத்தும்
கண்டதன்வா யொருமூங்கிற் கறனைதன்னாற்
    கனக்கவடைத் தேழுசேலை மண்செய்திட்டு
விண்டிடதை யுலர்த்தியொரு பானைதன்னில்
    விரவுமரைப் பானைமண லிட்டுமேல்வைத்
தெண்டருமன் னதன்மேலு மணற்பரப்பி
    யிடுபானை வாய்ச்சட்டி கொண்டுமூடே (கஎக)

மூடியபின் சேலைமண் மூன்றுசெய்து
    மூன்றுநா ளிரவுபகல் விடாதெரித்து
நாடியதை யெடுத்தாற்றிப் பொடித்தபற்பம்
    நவிலுமொரு பணவெடையுங் கிராம்புதன்னோ
டுடுறுதிப் பிலிசாதிக் காய்கற்பூர
    மிவையுநேர் சேர்த்தருந்திற் றாதுநீடும்
வாடுதல்செய் யெப்பிணியுந் தீருமேலு
    மருவுநரை திரைமாறு மகிழ்ந்துசெய்யே (கஎஉ)

(இ-ள்)

பொற்றகடு 2½ பலமெடுத்து சுத்திசெய்துகொள்ளவும்.

சுத்திசெய்த பாதரஸம் 8 பலமும்
,, நெல்லிக்காய் கெந்தகம் 6 பலமும்

கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து கொள்ளவும்.

பின்பு ஸ்வர்ணத் தகட்டைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அவற்றுடன் சேர்த்து

செம்பரத்தம்பூச் சாறு
அரசங்கொழுந்துச் சாறு

ஆலங்கொழுந்துச் சாறு
தாமரைப்புஷ்பச் சாறு
நன்னாரிவேர்ச் சாறு
சோற்றுக்கத்தாழைச் சாறு

முதலான சாறு வகைகளைக்கொண்டு தனித்தனியே ஒவ்வொரு சாமம் அரைத்து வழித்துக்கொள்ளவும்.

பின்பு இதனையொரு காசிக்குப்பிக்குள் முக்கால் பாகம் வரும்வண்ணம் இட்டு, அதன் வாய்க்குத் தக்கபடி ஒரு மூங்கில் குச்சியை தக்கையாகச் செய்து அடைத்துவிடவும். பின்பு காசி குப்பிக்கு 7 தடவை சீலைமண் செய்யவும். ஒரு பானையில் அரைவாசி மணல் போட்டு, அதன்மேல் மேற்சொல்லிய காசிக் குப்பியை (நன்றாக உலர்ந்த பின்பு) வைத்து மேலும் அதன் கழுத்துவரை மணல் போட்டுவிடவும். பின்பு அந்த பானை வாய்க்குத் தக்கபடி ஒரு சட்டிகொண்டு மூடவும். பின்பு பானை வாய்க்குச் சீலைமண் 3 தடவை செய்து காயவைக்கவும்.

இந்தப் பானையை அடுப்பின் மேலேற்றி 3 நாட்கள் இரவும் பகலும் விடாமல் எரிக்கவும். புடம் தானாகவே ஆறியபின் இதை யுடைத்து மருந்தை சாக்கிரதையாக எடுத்துக் கல்வத்திலிட்டு நுணுக்கிக்கொள்ளவும்.

இதில் $3\frac{1}{3}$ குன்றியளவெடுத்து, அதனுடன்

கிராம்பு
திப்பிலி
சாதிக்காய்
கர்ப்பூரம்

இவற்றின் சூரணத்துடன் சேர்த்து உட்கொள்ளவும்.

தாதுநீற்றல் முதலான பற்பல வியாதிகளும், நரை, திரையும் மாறும்.



## 91. வீரிய விருத்திக்குச் "சாதிப்பத்திரிக் கல்கம்"

சாதிப்பத் திரியோம நீர்முள்ளி
வித்தினொடு சாதிக்காயுந்
தீதகல்பால் விட்டரைத்துச் சர்க்கரைப்பா
லினிலாதல் தேற்றாங்கொட்டை
யீதளவு தின்றிடினுங் கோழிமுட்டை
வெண்கருவோ டிஞ்சிச்சாறு
தாதுறுவெண் காயத்தின் சாறுதேன்
சரிகொளினுந் தாதுநீடும் (௧௭௩)

(இ-ள்)

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | நீர்முள்ளிவிதை |
| ஓமம் | சாதிக்காய் |

இவைகளைப் பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்துத் தேத்தான்கொட்டையின் பிரமாணமெடுத்துப் பாலிலோ அல்லது சர்க்கரையிலோ சாப்பிடவும்.

2. கோழிமுட்டை வெள்ளைக் கருவுடன் இஞ்சிச் சாறு, வெங்காயச்சாறு, தேன் இவைகளை ஒன்றாகச் சேர்த்துக் குழப்பி 3 நாட்கள் காலையில் சாப்பிடவும். தாதுபுஷ்டி உண்டாகும்.

## 92. தாதுபுஷ்டிக்கு நிலப்பனை கோவா.

நிலப்பனையின் கிழங்கினொடு திகழ்பூனைக்
காலிவித்தும் நெருஞ்சிக்காயும்
வலித்திடுகாஞ் சொறிவித்தும் நேர்கூட்டிப்
பொடித்ததனை மானநீடு
குலத்தகையச் சர்க்கரையுஞ் சேர்த்தாவின்
பால்காய்ச்சிக் குழம்பாம்போது
கலப்புறச்செய் தொருபாக்கி னளவருந்தி
வறிற்றுது கதிக்குந்தானே (௧௭௪)

(இ-ள்)

நிலப்பனைக்கிழங்கு
பூனைக்காலி விதை
நெருஞ்சிக்காய்
சிறுகாஞ்சோறி விதை

இவைகளைச் சரியளவெடுத்து இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதற்குச் சரியளவு சர்க்கரைக் கூட்டிப் பசுவின் பாலுடன் சேர்த்துக் குழம்பாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் தினந்தோறும் ஒரு பாக்களவெடுத்து உட்கொள்ளவும்.

தாதுபுஷ்டி உண்டாகும்.

## 93. தாதுபுஷ்டிக்கு 'அகஸ்தியர் குளிகை'

இரதமொரு வராகனெடை விடத்தேர்வேர்
வராகனெடை யிரண்டுஞ் சேர்த்துக்
கருதுகல்வத் திட்டுமல்லி கைப்பூமென்
றுகில்வைத்துக் கசக்கிச்சாறு
விரவவிட்டு நாற்சாம மரைத்துமிள
களவுண்டை விளங்கச்செய்து
மருவுமொரு பீங்கானிற் போட்டினிய
கொம்புத்தேன் வார்த்துவையே (௧௭௫)

வைத்ததனி லொவ்வொருண்டை யிருபோதுங்
கொண்டிடுக மருவுநெய்பால்
துய்த்திடுக விவ்வாறே யொருபதுநா
ளருந்துமுன்னர் தொடர்ந்துநின்ற
வெத்தகய வாயுவும்போந் தாதுவுமேல்
விருத்தியதா மினையசெய்கை
சத்தியமே யாகுமெனக் குறுமுனிவ
ரிசைத்திட்டான் றானறிவோரே (௧௭௬)



(இ-ள்)

சுத்தி செய்த பாதரஸம் 1 வராகனெடை
விடத்தேர் வேர் ,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, மல்லிகைப் புஷ்பத்தின் இதழ்களைக் கசக்கிப் பிழிந்த சாறு விட்டு 4 ஜாமங்கள் வரை நன்றாக வரைக்கவும். (ஒரு பகல் பொழுது) பின்பு இதனை மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி, பீங்கான் பாத்திரத்தில் வைத்துச் சுத்தமான கொம்புத்தேன் ஊற்றவும்.

இதில் வேளையொன்றுக்கு 1 மாத்திரை வீதம் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

பால், நெய், முதலானவைகளைக் கிடைக்குமட்டும் சேர்த்துக்கொள்ளவும். இவ்வாறு 20 நாட்கள் சாப்பிட்டுவரக்

கயரோகம் நீங்கித் தாதுபுஷ்டி உண்டாகும்.

## 94. ஜலதோஷத்திற்குக் "காடி"

முருங்கையிலை மாவிலங்கை யிலையமுக்கி
ராவிலையிம் மூன்றுங்கூட்டிப்
பொருந்தவுறு மொருகுறுணிக் காடியுடன்
குறுணிநீர் புகுதவிட்டுத்
திருந்துபத முறக்காய்ச்சி முப்பொழுது
கொள்ளுமுன்னர் செறிந்துநின்ற
பெருந்துயர்செய் சலதோடம் பறந்திடுமென்
றறிந்தோர்கள் பேசினரே (௧௭௭)

(இ-ள்)

முருங்கையிலை
மாவிலங்கையிலை
அமுக்கிரா இலை

இவைகளை வகைக்கு ஒரு பிடி யெடுத்துச் சிறுகவரிந்து ஒரு மரக்கால் காடிக்கு 1 மரக்கால் சுத்த ஜலம் விட்டு ஒன்ருக்கி அதிலிட்டு அடுப்பின் மேலேற்றி நன்ருக (1 சேராக) வற்ற வைத்து 3 தடவை உட்கொள்ளவும். ஜலதோஷம் தீரும்.

---

## 95. மதன காமேஸ்வரம்.

சுண்டைவேர் நெருஞ்சிவேர் நீர்முள்ளி
வேர்கோட்டந் துலங்குசீந்திற்
றண்டிலவம் பிசினமுக்கி ராவேர்வா
ழைக்கிழங்கு தண்ணீர்விட்டான்
கண்டநிலப் பனைக்கிழங்கு கொத்தமல்லி
மதுரமருட் காரையின்வேர்
விண்டதிரி கடுகுதிரி பலசாதிக்
காய்காரெள் விளாவின்வித்து (கஎஅ)

வித்தையுறு கரிசாரக் கண்ணிசிறு
நாகப்பூ வியன் கச்சோலம்
மெய்த்தசிறு தேக்குடன்கற் கடகசிங்கி
கொடிவேலி வேரிந்துப்பு
வைத்திடச மதாகஞ்சிற் ருமுட்டிவே
ரிந்தமருந் தெல்லாஞ்சேரத்
தேர்த்தநிறை கஞ்சாவின் வித்துஞ்சேர்த்
துலர்த்திக்கொண் டொருங்குதூள்செய் (கஎகூ)

செய்துவடிக் கட்டியது னிஜக்கிரட்டிச்
சர்க்கரையுஞ் சேர்த்திட்டாவி
னெய்யதனே டினிமைதரு தேனுஞ்சேர்த்
தயர்பாக்கி னேராயுண்டை
கையுறச்செய் திரவிலனங் கொள்ளுமுன்ன
ரோருண்டை கருதிக்கொள்ளின்
மையனுறு தாதுவருந் தனமாகு
மெலிந்தவுடல் வடிவுகொள்ளும் (கஅ௦)



(இ-ள்)

| | |
|---|---|
| சுண்டைவேர் | கடுக்காய்த்தோல் |
| நெருஞ்சிவேர் | தான்றித்தோல் |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | நெல்லிவற்றல் |
| | சாதிக்காய் |
| கோஷ்டம் | எள்ளு |
| சீந்தில்கொடி | விளாம்பழ விதை |
| இலவம்பிசின் | கரிசாரங்கண்ணி |
| அமுக்கிராக்கிழங்கு | சிறுநாகப்பூ |
| வாழைக்கிழங்கு | பூலாங்கிழங்கு |
| நிலப்பனைக்கிழங்கு | சிறுதேக்கு |
| கொத்துமல்லி விதை | கற்கடசிங்கி |
| அதிமதுரம் | கொடிவேலிவேர் |
| மருக்காரைவேர் | இந்துப்பு |
| சுக்கு | ஓமம் |
| திப்பிலி | சிற்ருமுட்டி வேர் |
| மிளகு | நீர்முள்ளி வேர் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, இதற்குச் சமனெடை கஞ்சா விதையும் சேர்த்துக் கல்லுரலிலிட்டு நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச் சூரணத்திற்கு 2 மடங்கு சர்க்கரையிட்டு, பசுவின் நெய்,' தேன் இவைகளை விட்டு இடித்து லேகியமாகச் செய்து கொள்ளவும். இதில் ஒரு பாக்களவெடுத்து இரவில் சாப்பாட்டிற்கு முன்னர் உட்கொள்ளவும்.

தாது புஷ்டியுண்டாகும். மெலிந்த உடல் தடிக்கும்.

---

## 96. தாது விருத்திக்குப் "பிரம்மி கிருதம்"

பசுவினெய் பிரமியச்சா றிவ்விரண்டும்
வகையினுக்குப் பலம்நன்னூன்கு

மிசையிதனிற் றிரிகடுகு திரிபலைசீ
　　ரகமஞ்சள் விளங்கிந்துப்பு
நசைதருமிவ் விரண்டுபலத் தூள்சேர்த்துக்
　　கிளறிநெல்லி நறுங்காய்மான
விசைவுறக்கொள் பாலருந்து குட்டம்போம்
　　வீரியமிக் கெய்துந்தானே　　　　(கஅக)

(இ-ள்)

பசுவின் நெய் 16 பலம்
பிரமிச்சாறு ,,

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய்த் தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| சீரகம் | மஞ்சள் |
| இந்துப்பு | |

இவைகள் வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து மேல்சொல்லிய சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துச் சாறுவகை சுண்டிய பின் இறக்கி ஒரு எலுமிச்சையளவெடுத்துப் பாலுடனே உட்கொள்ளவும்.

குஷ்டம் தீரும். வீரியவிருத்தியுண்டாகும்.

## 97. பலத்திற்கு "நோச்சிக் கல்பம்"

தேனுநொச்சியின்சா றொருகுறுணிப்
　　புதுப்பானைச் சேரவிட்டே
யீனமிலாப் புவியினுக்குள் வைத்தொருமண்
　　டலம்போக்கி யெடுத்துநான்கு
மானமுறு கழஞ்சொருமண் டலங்கொளினு
　　நொச்சியின்வேர் வயங்குதூளும்



ஆனுதவு நெய்யதுங்கொண் டிடினுமுடற்
　　கின்பமுறு மாற்றலெய்தும்　　　　(கஅஉ)

(இ-ள்)

தேன் சின்னபடி ½
நொச்சிச்சாறு 1 மரக்கால்

இவ்விரண்டையும் ஒரு புதுப்பானையில் விட்டு நன்றாக மூடி பூமிக்குள் புதைத்துவிடவும். 40 நாட்கள் சென்றபின் அதை யெடுத்து ½ பலமளவு தினந்தோறும் உட்கொள்ளவும்.

(2) நொச்சியின் வேரை யெடுத்துலர்த்திச் சூரணித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, அதனுடன் பசுவின் நெய் சேர்த்து உட்கொள்ளவும்.

உடம்பு தேறும். பலமும் உண்டாகும்.

## 98. தேற்றான் கற்பம். (வஜ்ரகாயம்)

அண்டியதேற் றாம்பட்டைத் தூளையொரு
　　வெருகடியி னளவுதேனிற்
கொண்டிடினு மழகண்ணிச் சாறுங்கா
　　ராம்பசுவின் சூலவுபாலும்
விண்டிடதி னெய்பினொடு தேனதுவுஞ்
　　சமனாக விரவிக்கூட்டி
மண்டலங்கொண் டிடினுமுடற் கின்பமுறும்
　　வாழ்நாளும் வளருமன்றே　　　　(கஅ௩)

(இ-ள்)

தேத்தான் பட்டையை உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, மூவிரல் கொள்ளுமளவு இச் சூரணம் எடுத்துத் தேன்விட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

(2) அழுகண்ணிச் சாறும், காராம் பசுவின் பால், பசுவின் நெய், தேன் இவைகளைச் சமனளவெடுத்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிடவும்.

உடம்புக்கு ஹிதமாகும். ஆயுள் விருத்தியும் ஏற்படும்.

குறிப்பு:— அழுகண்ணி என்ற பச்சிலை கொல்லிமலைப் பிரதேசத்தில் காணப்படும் தரையோடு தரையாகப் படரும் ஒருவித செடி என்று சொல்கிறார்கள். கடுங் கோடையில்கூட இதன் இலையிலிருந்து முத்துப்போன்ற தண்ணீர் கசிந்துகொண்டிருக்கும் என்றும் கூறுகிறார்கள். இந்த குணத்தினால்தான் "அழுகண்ணி" என்று பெயரிட்டிருக்கின்றனர் போலும்.

## 99. தாது விருத்திக்கு முருங்கைப்பூ மாத்திரை.

தொகுமுருங்கைப் பூவிரண்டு பலமழுக்
கிராக்கிழங்கு சொல்லுளுந்து
மிகுகடலை யெள்ளிவற்றின் றேல்வகைக்குப்
பலமரையாம் வியன்முள்ளங்கி
தகுபூனைக் காலிநீர்முள் ளிகஞ்சா
ஞாழலிவை சாறும்வித்து
நகைதருசா திக்காய்கு ரோசாணி
யோமமொடு நறுக்குமூலம் (கஅச)

மூலமொடு சாதிபத் திரிசாரப்
பருப்புநன்கு மொழிகிராம்பு
மாலுதவு நன்னாரி வேர்கரிய
சீரகநன் மதுரமெல்லாஞ்
சாலும்வகைக் கோர்மூன்று வராகநிறைத்
தூள்செய்து தகுதேங்காயின்
பாலொருபா னையின்மூன்று படிவிட்டு
வேடுகட்டிப் பகர்வேட்டின்மேல் (கஅரு)



மேலுரைத்த சூரணத்தை வைத்தொருசட்
டியின்மூடி விளங்கவ்வாயிற்
சேலைமண்செய் தொருநான்கு நாழியெரித்
திறக்கியொரு தேங்காய்தந்த
பாலினரைத் தொன்றேகால் வராகனிறை
யுண்டைபண்ணிப் பசுவினெய்பால்
கோலிளநீர் தனிலொன்று கொளத்தாது
வளர்தலுறுங் குடிபோமேகம் (கஅசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| முருங்கைப்பூ | 2 பலம் | |
| அமுக்கிராக்கிழங்கு | $\frac{1}{2}$ பலம் | |
| உளுந்து | ,, | |
| கடலை | ,, | |
| எள்ளு | ,, | |
| முள்ளங்கி விதை | | 3 வராகனெடை |
| பூனைக்காலி விதை | | ,, |
| நீர்முள்ளி வித்து | | ,, |
| கஞ்சா விதை | | ,, |
| ஞாழல் வித்து | | ,, |
| சாதிக்காய் | | ,, |
| குரோசாணியோமம் | | ,, |
| கண்டத்திப்பிலி | | ,, |
| சாதிப்பத்திரி | | ,, |
| சாரப்பருப்பு | | ,, |
| கிராம்பு | | ,, |
| நன்னாரிவேர் | | ,, |
| கருஞ்சீரகம் | | ,, |
| அதிமதுரம் | | ,, |

இவைகளை நன்கு உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். ஒரு புதுப்பானையில் தேங்காய்ப்பால் 3 படிவிட்டு அதன் வாய்க்கு வேடுகட்டவும். அதன் மேல் மேற்சொன்ன சூரணத்தை வைத்து மேலே வேறொரு

சட்டியினால் மூடிச் சீலைமண் செய்யவும். பின்பு இதனை அடுப்பின்மேலேற்றி 4 நாழிகைவரை எரித்து இறக்கவும்.

பின்னர் இச் சூரணங்களைத் தேங்காய்ப் பால் விட்டு நன்ருக அரைத்து 1¼ வராகனெடையுள்ள உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

பசுவின் நெய், பால், இளநீர் இவைகள் ஏதேனுமொன்றில் ஒரு உருண்டை சாப்பிடவும்.

தாதுபுஷ்டி உண்டாகும்.

---

## 100. தாதுவிருத்திக்கு "தேவதாளி கல்பம்"

பலனுதவு நற்றேவ தாளியையுள்
　　ளடிப்பூசிப் பார்மேற்செல்ல
நலனுறவே தம்பனமா மின்னதன்றன்
　　சமூலமுந்தா னயமாக்கொண்டு
குலவுறவே யினிதாக வரைத்துடலிற்
　　பூசவெட்டுக் குத்தருது
நிலவுமித னிலைச்சாறு குடிக்கவுட
　　லழகாகி நிறம்வேருகும் (கஅள)

(இ-ள்)

தேவதாளி (இலையை) யரைத்து உள்ளங்காலில் பூசிக்கொண்டு நடக்க "ஸ்தம்பனம்" உண்டாகும்.

இதன் சமூலத்தை நன்ருக வரைத்து உடலில் பூசிக்கொண்டு யுத்தமிட வெட்டு, குத்து முதலானவை ஒன்றும் செய்யாது.

இதன் சாற்றை உட்கொள்ள உடம்பு நன்ருக ஆகி நிறமும் மாறும்.

---



### தம்பனம்.

சொல்லிடந்த நற்றேவ தாளிசமூ
　　லமுங்கொண்ட தூளிஞேடு
நல்லெண்ணெய் சர்க்கரைசேர்த் தருந்திலுயர்
　　மூலநோய் களனுகாதோடும்
வெல்லமுட னிப்பொடியைச் சேர்த்தருந்தக்
　　குட்டநோய் விலகிப்போகும்
வல்லிநயப் பொடிநெய்யிற் குழைத்தருந்தச்
　　செவிநோய் பல் வலியுந்தீரும் (கஅஅ)

(இ-ள்)

தேவதாளியைச் சமூலமாக எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இதனுடன் நல்லெண்ணெய், சர்க்கரை இவைகளைக் கூட்டி உட்கொள்ள மூலரோகம் தீரும்.

வெல்லத்துடன் சாப்பிடக் குஷ்டநோய் தீரும்.

நெய்யுடன் குழைத்து உண்ணக் காதுரோகங்கள், பல்வலி முதலானவை தீரும்.

---

## 101. இலேபனத்திற்கு.

மாதளைச்ச மூலமொடு வெள்ளலரி
　　யொருபாலை மருவப்போட்டுக்
கோதறுநற் பூமிபுடஞ் செய்திறங்கு
　　தைலமது கொண்டுநித்த
மோதுமரைப் பணவெடையுட் கொண்டு கோசந்
　　தனிலுமொ ருங்குபூசிற்
ருதுவளர்ந் திடுமிலேப னமாகு
　　மாகுமட்டுந் தடவிக்கொள்ளே (கஅகூ)

(இ-ள்)

மாதுளைசமூலம்
வெள்ளை அரளி

இவ்விரண்டையும் வகைக்கு 1 வீசையெடுத்து ஈரமாக இருக்கையிலே சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பானையிலிட்டுப் பானையினடியில் துவாரம் இடவும். இதனை பூமியில் புதைத்துப் புடமிட்டுக் குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும்.

இதனை தினந்தோறும் $\frac{1}{2}$ பணவெடையளவெடுத்து உட்கொள்ளவும். இதையே கோசத்திலும் பூசவும்.

---

## 102. இலேபனத்திற்கு வெண்ணெய்.

வெள்ளாட்டுப் பாலிரண்டு படிகாய்ச்சி
வெள்ளலரி வேரின்தூளிற்
றெள்ளியரைப் பலம்போட்டு மோர்குத்தி
யுறைந்தபின்பு திறமதாக
மெள்ளவே கடைந்துவெண்ணெ யெடுத்ததனிற்
கிராம்போடபின் மிகுசாதிக்காய்
விள்ளதன்பத் திரிவகைக்கு வராகனிறை
பொடிசெய்து விரவக்கூட்டே (௧௬௰)

கூட்டியுற மத்தித்துப் பணவெடைவெற்
றிலையொன்றிற் கொள்ளவைத்து
நீட்டமுறு காலையினி லருந்திவளர்
கோசத்தும் நிலவுமேழ்நாள்
நாட்டமுறப் பூசிபத்தி யம்புளிப்புப்
புகையிலையு நண்ணுறில்
வாட்டமின்றி யிலேபனமாந் தாதுவிருத்
தியுமாகும் வையத்தோர்க்கே (௧௬௧)



(இ-ள்)

வெள்ளாட்டுப்பால் 2 படியெடுத்து நன்றாகக் காய்ச்சி வெள்ளை அரளிவேர் தூள் $\frac{1}{2}$ பலம் சூரணஞ்செய்து போட்டு, மோர் விட்டு பிறைக்குத்தவும். மறுநாள் இது தயிராகத் தோய்ந்தபின் இதைக் கடைந்து வெண்ணெயை யெடுத்து அதனுடன்,

கிராம்பு
அபின்
சாதிக்காய்
சாதிப்பத்திரி

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, நன்றாக மத்தித்து வைத்துக் கொள்ளவும். இதில் $3\frac{1}{3}$ குன்றிநிறை எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்து காலையில் உட்கொள்ளவும்.

இந்த மருந்தையே குறியின்மேலும் போடவும். இவ்வாறு 7 நாட்கள் செய்து, புளிப்பு, புகையிலை முதலான பதார்த்தங்களை நீக்கவும்.

தாதுவிருத்தி உண்டாகும்.

---

## 103. தாதுவிருத்தி ஆண்கட்டுக்கு, முருங்கைப் பால்.

தருமுருங்கைப் பிஞ்சுமதன் கொழுந்திங்கி
மூநெல்லி சமூலமுங்கொண்
டுறுவமுறச் சமன்கூட்டித் தேங்காய்ப்பால்
விட்டரைத்திட் டுயர்ச்சியாக்கி
யிவெனுமிச் சங்காயி னளவுகரைத்
தருந்தினரேல் விடுமாண்கட்டென்
றிருநிலத்தோர் சுகமெய்த மலயமுறு
குறுமுனிவன் முன்னிசைத்திட்டாரே (௧௬௨)

(இ-ள்)

முருங்கைப் பிஞ்சு, முருங்கைக் கொழுந்து, கீழாநெல்லிச் சமூலம்

இம்மூன்றையும் சமனெடை யெடுத்துத் தேங்காய்ப் பால் விட்டு நன்ருக அரைத்து எலுமிச்சங்காய் பிரமாணம் எடுத்து அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி அருந்தவும்.

ஆண்கட்டு விடும்.

---

## 104. மருந்தீட்டிற்கு எண்ணெய்

மருதொடுசங் காவாரை யிவற்றிவேர்
முக்கழஞ்சு வகைக்குக்கொண்டு
பாவுழக்கு நாரத்தம் பழச்சாரு
ழாக்கெருக்கம் பால் நல்லெண்ணெய்
கருதுமொரு நாழிகலந் திவற்றவைத்துக்
கலந்துதுத்தங் கழஞ்சுதுள்போட்
டொருபிடிநா யுருவிவேர் நாய்க்காதி
னுண்ணிபத்தெட் டொக்கப்போடே (கசாரு)

போட்டுமெது வாயெரித்து வரும்போதவ்
வோதனைப் புகல் கைக்கொண்டு
நீட்டாமற் வொடித்திடிற்சுக் கென்வொடி
யும்பதத்தி னேர்மையாக
வீட்டமுற வடித்திருகா செடைமூன்று
காசெடைகொண் டினிதருந்தில்
வாட்டமுறு மெத்தகயம் மருந்தீடுந்
தீருமிது வாய்மையாமால் (கசாச)

(இ-ள்)



மருதுவேர் $3\frac{3}{4}$ வராகனெடை
சங்கம்வேர் ,,
ஆவாரைவேர் ,,

இம்மூன்றையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கல்வத்தி லிட்டு நாரத்தம்பழச் சாறு ஒரு ஆழாக்கும் விட்டு நன்ருக அரைக்கவும். பின்பு இதனுடன்

எருக்கம்பால் சின்னபடி $\frac{1}{2}$
நல்லெண்ணெய் ,,

இவ்விரண்டையும் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைக்கவும். இதனுடன் துத்தம் $1\frac{1}{4}$ வராகனெடையும், நாயுருவி வேர் ஒரு பிடியும், நாயின் காதில் ஒட்டியிருக்கும் உண்ணி 8 அல்லது 10 எடுத்து அகிலிட்டு யாவற்றையும் ஒன்று கலந்து நன்ருக எரிக்கவும். நாயுருவிவேர் முறுகி முறிக்கும் போது "பட பட" என்று சப்தம் கேட்டால் அதுதான் பதம் என்று அறிந்து இறக்கி வடிக்கட்டவும்.

இந்த எண்ணெயில் 3 காசளவெடுத்து உட்கொள்ளவும்.

கயரோகம், மருந்தீடு முதலானவை தீரும்.

---

## 105. மருந்தீட்டிற்கு "அழிஞ்சில் மருந்து

வடக்கொடு முற்றழிஞ்சில் வேர்ப்பட்டை
பாக்களவு வளவெவந்நீரிற்
கொடுத்திடில்வா யாலும்வயிற் ருலும்போ
முத்தினத்திற் குணமாம்பன்றி
விடுத்திடுநெய் முறுக்கிலேச்சா றெலிமிச்சம்
பழச்சாறு விளம்பிரண்டா
யடுத்திடுகா செடைமூன்று நாட்கொளினு
மருந்தீடங் கனைத்துந்தீரும் (கசுரு)

(இ-ள்)

வடக்கு நோக்கி செல்லும் அழிஞ்சில் வேரின் மேல் பட்டையைப் பாக்களவெடுத்து வெந்நீருடன் அரைத்துக் கலக்கி அருந்தவும்.

வாந்தியும் பேதியும் உண்டாகும். 3 நாட்களுள் குணமுண்டாகும்.

(2) பன்றி நெய்
முருக்கிலைச்சாறு
எலுமிச்சம்பழச்சாறு

இவைகளை வகைக்கு 1 காசெடை யளவெடுத்து உட்கொள்ளவும். 3 நாட்களுள் மருந்திடு தீரும்.

---

## 106 மருந்தீட்டிற்கு

ஆரைவேர் சிறுகீரை விதைபொன்னாங்
கண்ணிவே ரமுதவல்லி
நேருறுநற் கிழங்கிவைபால் வார்த்தரைத்துச்
சிலபொழுது நெயிற்கொண்டாலு
மீரமுறு மாம்பட்டை தனைக்காடி
விட்டடித்தே யினிதுறப்போட்
டாருநா ழிச்சாறு காலையினிற்
கொளினுமருந் தனைத்துமாறும் (௧௬௬)

இளவெந்நீர் தன்னில்விளாம் பழமரைத்துக்
குடித்திடினு மினிவெள்ளுள்ளி
வளனுறவே ரினையரைத்துப் பாலினெட்டு
நாட்கொளினு மன்னுபாலிற்
கிளர்பூனைக் காலிவித்தி னோடுநிலப்
பனையினுறு கிழங்குமன்று
யிளகவரைத் துக்கரைத்துக் கொளினுமருந்
திடுள்ள தெல்லாந்தீரும் (௧௬௭)



(இ-ள்)

(1) ஆரைவேர்
சிறுகீரைவிதை
பொன்னாங்கண்ணிவேர்
சீந்தில்கொடிக் கிழங்கு

இவைகளைச் சமமெடுத்துப் பசுவின்பால் விட்டரைத்து நெய்யுடன் குழைத்துச் சாப்பிடவும்.

(2) மாம்பட்டையை காடிவிட்டரைத்துப் பிழிந்த சாறு சின்னபடி ½ எடுத்துக் காலையில் உட்கொள்ளவும். மருந்திடு தீரும்.

(3) விளாம்பழத்தை வெதுவெதுப்பான வெந்நீர் விட்டு அரைத்துக் குடிக்கவும்.

(4) வெள்ளுள்ளியைப் பசுவின்பால் விட்டரைத்து 8 நாட்கள் உட்கொள்ளவும்.

(5) பூனைக்காலி விதை
நிலப்பனைக்கிழங்கு

இவ்விரண்டையும் சமமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துக் குடிக்கவும். மருந்திடு தீரும்.

---

## 107 மருந்தீட்டிற்கு

வல்லமுருக் கிலையதனைக் காடிவார்த்
துத்துவைத்து வடித்துக்கொண்டு
வெல்லமொடு நெய்கூட்டிக் குடித்திடினும்
நிலக்கடம்பின் வேர்துவைத்துச்
செல்லலறு பழங்காடி தனிற்கொளினும்
மருந்திடு தீருமென்ன

நல்லவர்கள் புகழ்தஞ்சை சரபோஜி
மன்னவர்முன் னவின்றிட்டாரே (கரு௮)

(இ-ள்)

(1) முருக்கிலையைக் காடிவிட்டு நன்றாக அரைத்துப் பிழிந்து, வெல்லம், நெய், முதலானவைகளை சேர்த்துக் குடிக்கவும்.

(2) நிலக்கடம்பின் வேரை இடித்துப் பிழிந்து பழைய காடியுடன் சேர்த்து உட்கொள்ளவும். மருந்தீடுகள் தீரும்.

---

## 108 மருந்தீட்டிற்கு

இனியவிளாங் காயளவு பசியகுப்பை
மேனியரைத் தெருமைமோரிற்
சனிவாரம் போட்டிரவி வாரமதி
னீர்மூழ்கிச் சார்ந்தபின்பு
கனிவினுடன் கரைத்தருந்தில் விடமெவையு
மெடுத்துவிடுங் கருதுமிந்தத்
தனிமருந்தால் வாந்திமிகுந் திடின்மாற்றுக்
கொடுத்திடுகச் சாந்தமாமே (கருகூ)

(இ-ள்)

குப்பைமேனி விழுது ஒரு விளாங்காயளவெடுத்து எருமை மோருடன் சனிக்கிழமையன்று குழப்பி, ஞாயிற்றுக்கிழமையன்று தலை முழுகிய பின்பு சாப்பிடவும்.

விஷங்கள் தீரும்.

வாந்தி எடுத்தால் வாந்திக்கேற்ற மருந்து வகைகளையுட் கொள்ள அது நிற்கும்.

---



## 109. மருந்தீட்டிற்கு

பருத்தியிளம் பிஞ்சுபொன்னுங் கண்ணிவேர்
சிறுபீளை பகர் நெருஞ்சி
யுரைத்தவிந்த நான்கினையு மொருபடிதண்
ணீரிற்போட் டுழக்காய்க் காய்ச்சி
யருத்தியுறு சீரகத்தை வெதுப்பித்தூள்
செய்துபோட் டருந்தினோர்க்கு
வருத்தமுறச் செய்திருந்த மருந்தீடுள்
ளனவெல்லா மாறிப்போமால் (உ௱)

(இ-ள்)

பருத்திப் பிஞ்சு
பொன்னாங்காணிவேர்
சிறுபீளை
நெருஞ்சி

இந்நான்கு சரக்குகளையும் வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துச்சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி, பொன் வறுகலாக வறுத்து இடித்த சீரகத்தூள் போட்டு அருந்தவும். மருந்தீடுகள் தீரும்.

---

## 110. மருந்தீட்டிற்கு

உற்றிடுதேற் றாங்கொட்டை மூன்றுநாள்
மோர்தன்னி லூறவைத்து
மற்றைநா ளரப்பொடியுங் காலெலுமிச்
சம்பழமும் வளரிம்மூன்றும்
அற்றிடாதப் பழச்சாறு விட்டரைத்து
மூவருட மணைந்தகாடி
பெற்றதனிற் கரைத்தருந்தின் மருந்தீடுள்
ளனவெல்லாம் பெரிதுந்தீரும் (உ௱க)

(இ-ள்)

தேற்றாங்கொட்டையின் மேல் தோலைச் சீவிவிட்டு அதை 3 நாட்களுக்கு மோரில் ஊறவைக்கவும். மறுநாள் சுத்தி செய்த அரப்பொடியும் சேர்த்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு மூன்று வருடஞ் சென்ற காடியுடன் கூட்டிச் சாப்பிடவும்.

மருந்தீடுகள் தீரும்.

---

## 111 மருந்தீட்டிற்கு

மிதிபாக லிலைச்சாறும் பசுவின்பா லுங்
  கலந்துமே லுட்கொண்டால்
மிதமாக வயிறுபோ மருந்தெலவையும்
  விழுந்துவிடு மிகுதியானாற்
பதமாகச் செய்தகஞ்சி குடித்திருநாள்
  மூன்றுநாள் பகர்ந்திடங்க
மிதிபாக லிலையவித்துப் பிலாதருந்து
  மூன்றுநாள் விரவிராவில் (௨௱௨)

(இ-ள்)

மிதிபாகல் இலைச்சாறும், பசுவின் பாலும் சமமெடுத்து ஒன்றுகலந்து சாப்பிடவும். நன்றாக வயிறு கழியும். மருந்தீடுகள் தீரும். மருந்தீடு அதிகமானால் இரண்டு நாட்களுக்குக் கஞ்சி சாப்பிட்டு, 3வது நாளன்று மிதிபாகல் இலையை வேகவைத்து சாப்பிடவும். இவ்வாறு 3 நாட்கள் உட்கொண்டு ·உப்பில்லாமல் ஆகாரம் புசிக்கவும்.

---



## 112. மருந்தீட்டிற்கு

இசைதருசிற் றாமுட்டி யோடுபேரா
  முட்டிவே ரிரண்டுங்கொண்டு
பசுவின்பால் வார்த்தரைத்தோ லெலுமிச்சங்
  காயளவு பரிவாய்க்கொண்டு
மிசைமூன்று நாரத்தம் பழம்வளைய
  மாயறுத்து விரவுள்ளிட்டுக்
கசிவுறநா ளுழியுப்போர் கலசத்தி
  லிட்டதற்குட் கருதிவையே (௨௱௩)

வைத்ததனை நாலாநா ளினிலெடுத்து
  விரித்துலர்த்தி நவின்மாலைப்போ
துய்த்திடந்த வுப்புநீர்த னிற்போட்டு
  மறுநாளு முலர்த்தியிவ்வா
றித்த கையின் மூன்றுநாள் சென்றபின்பு
  மற்றைநா ளெடுத்துக்காயவைத்
தத்தகையிற் காய்ந்தபழத் தினிற்கள்ளிப்
  பாலூட்டி யன்னதன்பின் (௨௱௪)

அன்னதனிப் பால்காய்ந்த பின்னரப்
  பொடியதனை யார்க்கநன்றாய்ப்
பின்னமுறப் பொடித்ததனிற் றாவிவைத்திட்
  டிருபொழுதும் பிறங்குகையிற்
றன்னுவிர லிறைநீளந் தின்றவரின்
  மருந்தீடு தொலையாச் சோகை
யென்னவுறு கொடுநோயுந் தீர்ந்திடுமென்
  றுணர்வுடையோ ரிசைத்திட்டாரே (௨௱௫)

(இ-ள்)

சிற்றாமுட்டி வேர்
பேராமுட்டி வேர்

இவ்விரண்டையுஞ் சமனெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்துக்

கொள்ளவும். மூன்று நாரத்தம் பழங்களை வளையமாக அறுத்து அதனுள்ளே மேல் சொன்ன விழுதை வைத்து ஒருபடி உப்பு உள்ள ஒரு கலசத்தில் புதைத்து வைக்கவும். பின்பு இதனை 4-வது நாளன்று எடுத்து நாரத்தம்பழத்தைப் பிழிந்து உலர்த்தவும். மாலை நேரங்களில் மறுபடியும் உப்பு நீரிலேயே ஊற வைத்து காலைவேளையில் உலர்த்தவும். 3 நாட்கள் செய்தபின்னர் இந்த நாரத்தை வளையங்களை வெயிலில் நன்றாக உலர்த்தவும். பின்பு இந் நாரத்தை வளையங்களில் கள்ளிப்பால் விட்டு ஊறவைத்துக் காய்ந்தபின் சுத்தி செய்த அரப்பொடியை அதனுடன் தூவிவைத்து பத்திரப்படுத்தவும். தினந்தோறும் ஒரு விரல் நீளம் இந்த வளையத்தை எடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

இம்மருந்தினால் மருந்தீடுகள், சோகை முதலான பற்பல பிணிகளும் தீரும்.

---

## 113. மருந்தீட்டிற்கு

பூசனிக்காய்க் குடலுமதன் கொழுந்தும்நீர்ப்
பூலாவின் பொருந்துகின்ற
பாசிலையு மரைத்தெலுமிச் சங்காய்நாற்
கீற்றாகப் பகுந்துள் வைத்திட்
டாசில்புளிக் கரைத்து வேவித் தொருநா
ளிரண்டுகீற்ற ருந்திவந்தாற்
காசினியின் மருந்தீடுள் ளனவெல்லா
மெளிதகலுங் கருதிச்செய்யே (௨௱௬)

(இ-ள்)

பூசனிக்காயின் குடல்
பூசனிக் கொழுந்து
நீர்ப்பூலா இலை —



இவைகளை சமமெடுத்து (ஒரு குத்தளவு) நன்றாக வரைத்து ஒரு பருத்த எலுமிச்சம் பழத்தை நான்காக அறுத்து அதனுள் திணித்து, புளிகரைத்த தண்ணீரில் வைத்து அடுப்பின் மேலேற்றி வேகவைக்கவும். ஒரு நாளைக்கு இரண்டு கீற்றுகள் வீதம் 2 நாட்களுக்குச் சாப்பிட,

மருந்தீடுகள் தீரும்.

---

## 114. மருந்தீட்டிற்கு

நறியபிரா யப்பட்டை தனைநறுக்கி
யொருபதக்கு நானாழிநீரி
லூறவிட்டுக் காய்ச்சியறு நாழியாய்
வடித்ததனி லுள்ளிப்பூண்டுந்
தூறுவசம்பு நறுக்கியிட்டுக் கொடிவேலி
யுடனாடா தோடைமற்றுள்
சிறியவழு துணைகையாந் தகரைவே
லிப்பருத்தித் திகழுமேனி (௨௱௭)

மேனியுறு மிவற்றின்வேர் நாற்கழஞ்சு
மிவற்றிலையில் விரவுசாறும்
மானமுறு வகையினுக்கோர் நாழிபூ
வம்பழந்தான் மருவுநான்கா
மீனிமில்வெற் றிலைநாறு திரிகடுகு
பெருங்காய மிந்துப்புள்ளி
காணுறுகத் தூரிமஞ்சள் கடுகிருசீ
ரகத்தினொடு கல்லுப்பெல்லாம் (௨௱௮)

ஆமிவற்றை வகையினுக்கோ ரரைப்பலங்கொண்
டான்பால்விட் டரைக்குமுன்னர்
சேமமுறு கருங்கோழி கவிழ்த்துவைத்திட்
டரைக்குங்காற் றிறந்து பார்க்கில்

வீமருவு மக்கோழி யிறக்கிலந்த
மருந்துபண்ணுன் வடுகசாசா
தேமமுட னிருக்கிலத னிறகுதனைப்
பிடுங்கியத னிரத்தங் கொள்ளே (உ௱கூ)

கொண்டந்த விரத்தத்துக் கிசையவுரி
நல்லெண்ணெய் கூட்டிமுன்னர்
விண்டமருந் தினையுமுடன் சேர்த்தெரித்துப்
பதத்திறக்கி விரவிநின்ற
மண்டுகடு கினையருந்தி யெண்ணெயினை
யுடம்புதலை மருவப்பூசிற்
பண்டுறுசூ னியமருத்தீ டிருமல்குடல்
வாதமெல்லாம் பறந்துபோகும் (உ௱ய)

(இ-ள்)

பிராய்பட்டையை வேண்டிய அளவு (சுமார் 10 பலம்) கொண்டுவந்து நசுக்கி $2\frac{1}{2}$ மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து 6 படி (சின்னபடி 3) யாகும்வரை வற்றவைக்கவும். இதனுடன்,

| | |
|---|---|
| உள்ளிப்பூண்டு | வசம்பு |
| கொடிவேலி வேர் | ஆடாதோடைவேர் |
| சிறுவழுதுணை | கையாந்தகரை |
| வேலிப்பருத்தி | குப்பைமேனி |

இவைகள் வகைக்கு 5 வராகனெடை ஷ சரக்குகளின் இலைச்சாறு வகைக்குச் சின்னபடி $\frac{1}{2}$

பூவம்பழம் 4 எண்ணிக்கையில்
வெற்றிலை 100 „

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| இந்துப்பு | பூண்டு |
| கஸ்தூரிமஞ்சள் | கடுகு |



| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கல்லுப்பு | |

முதலான சரக்குகள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் எடுத்துப் பசுவின் பால் விட்டரைக்கவும். ஒரு கருங்கோழியைக் கொண்டுவந்து ஒரு கூடையினுல் மூடிப் பின்பு மேற்சொல்லிய சரக்குகளை அரைக்கவும். அரைத்த பின்னர் கூடையைத் திறந்து பார்க்கவும். அது இறந்துவிட்டால் தள்ளிவிடவும். உயிருடன் இருந்தால் அதன் இறகை பிடுங்கி அதிலிருந்து வடியும் இரத்தத்தில் சின்னப்படி $\frac{1}{2}$ எடுத்துக்கொள்ளவும். பின்பு நல்லெண்ணெய் ஊற்றி; சாறுகள், கல்கம் முதலானவைகளையுஞ் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். கடுகை உள்ளுக்குக்கொடுத்து எண்ணெயை நோயாளியின் உடம்பு, தலை, முதலான இடங்களில் பூசவும்.

சூனியம், மருந்தீடு, இருமல், குடல்வாதம் முதலான நோய்கள் தீரும்.

---

## 115. மருந்தீட்டிற்கு

சீருறுவெள் ளறுகுசங்கங் குப்பிவேர்
நிலவேம்பு சிவனர்வேம்பு
காரமுறு சங்கம்வேர் சமன் கூட்டிப்
பொடித்துவெரு கடிக்குநோய்
நேருறுநற் சிறுநீரிற் காலையில்கொள்
புளிகைப்பு நீக்குநெய்பால்
சேருடலின் கடுப்புமருந் தீடுவெகு
மூத்திரநோய் தீருமன்றே (உகக)

(இ-ள்)

வெள்ளறுகு
சங்கங்குப்பி வேர்

நிலவேம்பு
சிவனார்வேம்பு
சங்கம் வேர்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் ஒரு வெருகடியளவு எடுத்து உலகமறியாப் பிள்ளையின் சிறு நீருடன் காலையில் உட்கொள்ளவும்.

**பத்தியம் :**

புளிப்பு, கைப்புச்சுவையுள்ள பண்டங்களை நீக்கவும். நெய் பால் இவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளவும்.

உடம்பு கனம், மருந்தீடு, வெகுமூத்திரநோய் முதலானவை தீரும்.

---

## 49 நெ. சுவடியிலிருந்து எடுக்கப்பட்டவை.

### 116. சயம், பாண்டு, காமாலைக்குச் சூரணம்.

முந்திரிகைப் பழம்பேரீச் சங்காயேலம்
மூங்கிலுப்பு நெற்பொரிகோ ரைக்கிழங்கு
சந்தனந்திப் பிலிசிறுநா கப்பூநல்ல
சாதிக்காய் கொத்தமல்லி நெல்லிமுள்ளி
அந்தமேனன் னாரிவிலாம் மிச்சையவ்வே
ர்திமதுரஞ் செங்கழுநீர்க் கிழங்கிதல்லால்
காந்தமிகு சன்னலவங் கத்தின் பட்டை
கனலவங்கப் பத்திரிதக் கோலந்தானே (௨௧௨)

கோலம்வகைக் கரைப்பலஞ்சேர்த் திடித்துக்கொண்டு
குலவுமொன்ப தரைப்பலஞ்சர்க் கரையைக்கூட்டி
சாலவுந்தா னிருபொழுது தேனிலீந்தால்
சயமிரத்தச் சயந்தாகம் பாண்டுமாலை



மேலடாம கோதரமி ரத்தபித்தம்
மேகமரோ சிகந்தாகச் சுரம் பித்தங்கேள்
சிலனிறை யுத்தமர்பால் வைத்தமோகஞ்
செலுத்தாத மங்கையர்போல் சிதறிப்போமே (௨௧௩)

(இ-ள்)

| | |
|---|---|
| திராக்ஷைப்பழம் | பேரீச்சங்காய் |
| ஏலக்காய் | மூங்கிலுப்பு |
| நெற்பொரி | கோரைக்கிழங்கு |
| சந்தனத்தூள் | திப்பிலி |
| சிறுநாகப்பூ | சாதிக்காய் |
| கொத்தமல்லி | நெல்லிமுள்ளி |
| நன்னாரிவேர் | விலாமிச்சை வேர் |
| அதிமதுரம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| சன்னலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| தக்கோலம் | |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து நன்றாக உலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதனுடன் 9½ பலம் சர்க்கரையைக் கூட்டிக்கொண்டு ஒரு புது ஜாடியில் பத்திரப் படுத்தித் தினம் மூவிரல் கொண்ட அளவு இச்சூரணத்தையெடுத்துத் தேனுடன் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

க்ஷயம், இரத்த க்ஷயம், தாகம், பாண்டு, காமாலை, மகோதரம், ரத்தபித்தம், மேகரோகம், அரோசகம், ஜ்வரம், பித்தம் முதலானவை தீரும்.

---

### 117. சுவாசகாசம், ஈளை, இருமல் இவைகளுக்கு நெய்.

சட்டமாயா டாதொடைச்ச மூலஞ்சன்ன
வழுதலை நற்கண்டங் கத்திரிவேர்

திட்டமது நூறுபலம் நறுக்கிப்போட்டுத்
    திகழ்சலத்தி லிருதூணி விட்டுக்காய்ச்சி
மட்டமொரு நான்கிலொன்றுப் வடித்துக்கொண்டு
    மறுபடிநெய் நாழுழி பால்நாழுழி
யிட்டமொடு திப்பிலிகற் கடகசிங்கி
    யிலங்குமத்தித் திப்பிலியோ டோதுவேனே (உகச)

ஓதுசடா மாஞ்சில்கடுக் காய்தான்றிக்கா
    யுயர்மிளகிந் துப்புசுக்கு சங்கம்வேரு
தூதளைவே ரிலங்குமின்பு ராவேர்துய்ய
    வெட்பாலை யினரிசி செவ்வியங்கோஷ்டம்
மீதுசிறு மூலகமிவ் வகையொன்றுக்கே
    மிதமாக நாற்கழஞ்சு சேர்த்தரைத்தே
கோதுவரா மற்சொலுங்க டாயந்தன்னிற்
    கூட்டியொன்றுய் கரைத்தெடுத்துப் பதமாய்த்தானே (உகரு)

பதமாக வேயெரித்து வடித்துக் கொண்டு
    பண்புடனே யுண்டிடிற்கா சச்சுவாசம்
மிதமில்லாக் கயரோக மிருமலீளை
    மேலிரத்த பித்தமுமந் தாரகாசம்
யிதமிலா துளமாந்தை வாசியாமே
    யெத்தகைக்கெல் லாங்கொடுக்குங் கீர்த்திபோசன்
சதகோடி மன்னர்மெச்சு மன்னதாதா
    சரபேந்திர பூபதிசொல் சட்டந்தானே (உகசு)

(இ-ள்)

ஆடாதோடைச்சமூலம் சிறுவழுதலை
கண்டங்கத்திரிவேர்

இவைகளை வகைக்கு 100 பலம் வீதமெடுத்து நறுக்கி ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எடுத்து நான்கிலொன்றுக்கி இறக்கி அதனுடன்



பசுவின்பால் 4 படி (20 சேர்)
,, நெய் 4 படி ,,

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| திப்பிலி | கற்கடகசிங்கி |
| அத்தித்திப்பிலி | சடாமாஞ்சில் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| மிளகு | இந்துப்பு |
| சுக்கு | சங்கம் வேர் |
| தூதுவேளைவேர் | இம்புராச்சமூலம் |
| வெட்பாலையரிசி | செவ்வியம் |
| கோஷ்டம் | திப்பிலி |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து நன்றாக இடித்து அம்மியின்மேல்வைத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, கஷாயங்கலந்த நெய்யுடனே கலந்து அடுப்பின்மேலேற்றி நன்றாக எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனை வடிக்கட்டித் தினம் 1ஸ்பூனளவெடுத்து இருவேளையிலும் உட்கொள்ள காசச் சுவாசம், க்ஷயரோகம், இருமல், ஈளை, இரத்தபித்தம், மந்தாரகாசம் முதலான பற்பல ரோகவகைகள் தீரும்.

---

## இரத்தபித்தம், எலும்புருக்கிக்கு நெய்.

கருப்பஞ்சா றுகம்வேர்ச் சாறுசிந்திற்
    கனத்தகொடிச் சாறுநெல்லிக் காயின்சாறு
நெரிஞ்சில்சிறு பூளையிவ்வே ரிளநீராவின்
    னெய்யுமொரு படியினுக்குஞ் சாற்றினன்றாய்
ஒருமையுட னிவ்வளவு சேர்க்கலாமென்
    றுரைத்தபடி யேகூட்டிப் பசுவின்பாலில்
திரும்பவும்நன் னாரியொண்வேர் சிறுநாகப்பூ
    தேறும்விலா மிச்சையின்வேர் வெட்டிவேரே

(உகஎ)

வெட்டிவே ரிலவங்கப் பட்டைமேலம்
　　வியங்கொளில வங்கப்பத்திரி வாசம்வீசும்
சட்டமுள்ள சந்தனமு மரைத்தெடுத்தே
　　சார்ந்தமுன்னெய் யிற்கலந்து காய்ச்சியப்பால்
திட்டமதாய் வடித்துவைத்துக் கொண்டேயுண்டால்
　　றியக்கமுறு மிரத்தபித்த மெலும்புருக்கி
மட்டில்லாப் பெரும்பாடு யின்னோயெல்லாம்
　　மார்த்தாண்டன் காண்பனிபோல் வாங்கிப்போமே

(உகஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| கருப்பஞ்சாறு | அறுகம்வேர்ச்சாறு |
| சீந்திற்கொடிச்சாறு | நெல்லிக்காய்ச்சாறு |
| நெருஞ்சிச்சாறு | சிறுபூளைச்சாறு |
| இளநீர் | |

இவைகளை வகைக்கு 1படி வீதமெடுத்து ஒன்று கலந்து

பசுவின் நெய் 1படியும் விட்டு,

| | |
|---|---|
| நன்னாரிவேர் | சிறுநாகப்பூ |
| இலாமிச்சைவேர் | வெட்டிவேர் |
| இலவங்கப்பட்டை | ஏலக்காய் |
| இலவங்கப்பத்திரி | சந்தன விழுது |

இவைகளை (வகைக்கு 1 வராகனெடை) வீதமெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாகவரைத்து, சாறுகூட்டிய நெய்யுடனே கூட்டி, அடுப்பின்மேலேற்றி, ஓரே சீராக எரித்து, மெழுகுபதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்நெய்யில் ஒரு துட்டளவெடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ள இரத்தபித்தம், எலும்புருக்கி, பெரும்பாடு, முதலான நோய்கள் தீரும்.

---

# மருந்துகளின் அகராதி.


| எண் | மருந்துகளின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 1 | அகஸ்தியர் குளிகை | 128 |
| 2 | அச்வகந்தாதி கிருதம் | 43 |
| 3 | *(அந்தரத்தாமரை)ச் சூரணம் (கயத்திற்கு) | 68 |
| 4 | அமுக்கிராக் கிழங்கு நெய் | 71 |
| 5 | அமுதசர்க்கரை ரஸாயனம் | 69 |
| 6 | (அரளி) வெண்ணெய் (இலேபனத்திற்கு) | 139 |
| 7 | அரிதார பற்பம் | 49 |
| 8 | (அழிஞ்சில்) மருந்து (மருந்தீட்டிற்கு) | 141 |
| 9 | ஆடாதோடை நெய் | 100 |
| 10 | ஆடாதோடை நெய் | 78 |
| 11 | ஆடுதீண்டாப்பாளை எண்ணெய் | 83 |
| 12 | ஆமலகாதி நெய் | 38 |
| 13 | ஆமலகாதி கிருதம் | 116 |
| 14 | (ஆமலகாதி) கிருதம் (கயத்திற்கு) | 62 |
| 15 | (ஆவரைவேர்) மருந்துகள் முதலியன | 142 |
| 16 | இலவங்கப்பட்டை லேகியம் | 74 |
| 17 | இலேபனம் | 137 |
| 18 | உள்நாக்குக்குத் தடவும் மருந்து | 20 |
| 19 | ஊமத்தை மருந்து | 115 |


*பிறைக்குறிக்குள் காணப்படும் பெயர்கள் நமது கற்பனையாகும்.

| எண் | மருந்துகளின் பெயர். | பக்கம் |
|---|---|---|
| 20 | எலியால் எண்ணெய் | 107 |
| 21 | கடுகரோகிணி மருந்துகள் | 35 |
| 22 | கட்டுக்கொடி மருந்து | 98 |
| 23 | கண்டங்கத்தரி லேகியம் | 99 |
| 24 | கண்டங்கத்திரி நெய் | 5 |
| 25 | (கருப்பஞ்சாறு) நெய் (இரத்த பித்தம், எலும்புருக்கிக்கு) | 155 |
| 26 | காடி | 129 |
| 27 | காந்த்யாதி தைலம் | 29 |
| 28 | குக்குளுச் சூரணம் | 82 |
| 29 | குண்டலாதி எண்ணெய் | 2 |
| 30 | குதிரைலத்தி எண்ணெய் | 106 |
| 31 | (குப்பைமேனி) மருந்து (மருந்தீட்டிற்கு) | 144 |
| 32 | குறிஞ்சா கல்கம் | 15 |
| 33 | குறிஞ்சியிலைக் களி | 24 |
| 34 | கூஷ்மாண்ட ரஸாயனம் | 46 |
| 35 | கூஷ்மாண்ட கிருதம் | 47 |
| 36 | கூஷ்மாண்ட ரஸாயனம் | 58 |
| 37 | கூஷ்மாண்ட ரஸாயனம் (வேறு) | 58 |
| 38 | கொட்டைக்கரந்தை லேகியம் | 85 |
| 39 | கோட்ட எண்ணெய் | 21 |
| 40 | (சங்கம் வேர்) எண்ணெய் (வாத க்ஷயரோகத்திற்கு) | 112 |
| 41 | (சாதிக்காய்) நெய் (சலரூப உளமாந்தைக்கு) | 25 |





| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 42 | சாதிப்பத்திரிக் கல்கம் | 127 |
| 43 | சாறணைத்தாளகச் சூரணம் | 3 |
| 44 | சிவனார்வேம்பு எண்ணெய் | 1 |
| 45 | சிறுதேக்குக்குடிநீர் | 8 |
| 46 | சிறுதேக்குக்குடிநீர் | 9 |
| 47 | சீந்திற் சர்க்கரை | 69 |
| 48 | சைந்தவாதி எண்ணெய் | 13 |
| 49 | சொர்ணச் செந்தூரம் | 40 |
| 50 | சொர்ணச் செந்தூரம் | 41 |
| 51 | சொர்ணபற்பம் | 124 |
| 52 | சொர்ண மாலினீ வஸந்தம் | 57 |
| 53 | தம்பனம் | 137 |
| 54 | தாளேச்வரபற்ப மாத்திரை | 14 |
| 55 | (திராக்ஷாதி) சூரணம் (சயம், பாண்டு, காமாலைக்கு) | 152 |
| 56 | திரிகடுகாதிச் சூரணம் | 22 |
| 57 | திரிகடுகு மாத்திரை | 39 |
| 58 | திரிகடுகாதி வடகம் | 76 |
| 59 | துடரி எண்ணெய் | 19 |
| 60 | துளஸீ கிருதம் | 119 |
| 61 | தூதுவேளை நெய் | 36 |
| 62 | தூதுவேளை நெய் | 121 |
| 63 | தூதுவேளை லேகியம் | 87 |
| 64 | (தேட்கொடுக்கிச்) குடிநீர் (வாத க்ஷயத்திற்கு) | 11[illegible] |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 65 | தேவதாளி நெய் | 104 |
| 66 | தேவதாளி கல்பம் | 136 |
| 67 | தேற்றான் சூரணம் | 18 |
| 68 | தேற்றான் கல்பம் | 133 |
| 69 | (தேற்றான்) மருந்து (மருந்தீட்டிற்கு) | 145 |
| 70 | (நாரத்தை) வளையம் (மருந்தீட்டிற்கு) | 147 |
| 71 | நாராயண கிருதம் | 48 |
| 72 | நிலக்குமிழி எண்ணெய் | 23 |
| 73 | நிலப்பனை கோவா | 127 |
| 74 | நொச்சி கல்பம் | 132 |
| 75 | பச்சிலை மருந்து | 23 |
| 76 | பவழ பற்பம் | 30 |
| 77 | (பருத்திப் பிஞ்சு) மருந்து (மருந்தீட்டிற்கு) | 145 |
| 78 | பாவன ஹரீதகீ சூரணம் | 17 |
| 79 | பாற்கடுக்காய் | 75 |
| 80 | (பிராய்) எண்ணெய் (மருந்தீட்டிற்கு) | 149 |
| 81 | பிட்டு | 109 |
| 82 | பிரம்மீ கிருதம் | 131 |
| 83 | (புளியாரை) நெய் (கயத்திற்கு) | 64 |
| 84 | (பூசினி) எலிமிச்சை (மருந்தீட்டிற்கு) | 148 |
| 85 | (பொன்னாங்காணி) எண்ணெய் (சயம், இருமல், காய்ச்சலுக்கு) | 88 |
| 86 | மகா ஏலாதி சூரணம் | 32 |
| 87 | மதனகாமேச்வரம் | 90 |





| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 88 | மதனகாமேச்வரம் | 130 |
| 89 | மதனகாமேச்வரத் தைலம் | 92 |
| 90 | மதனகாமேச்வரம் (மன்மத சிந்தாமணி) | 95 |
| 91 | மயூர தைலம் | 79 |
| 92 | (மரிசார்க்க) சூரணம் (க்ஷயத்திற்கு) | 67 |
| 93 | (மருது) எண்ணெய் (மருந்தீட்டிற்கு) | 140 |
| 94 | மல்லி எண்ணெய் | 19 |
| 95 | (மிதிபாகல்) மருந்து (மருந்தீட்டிற்கு) | 146 |
| 96 | மிருகாங்க ரஸம் | 4 |
| 97 | முயல் நெய் | 110 |
| 98 | முயல் நெய் | 101 |
| 99 | முயல் நெய் | 10 |
| 100 | முருங்கைப்பால் | 139 |
| 101 | முருங்கைப்பால் | 11 |
| 102 | முருங்கைப்பூ மாத்திரை | 134 |
| 103 | (முருங்கிலை) மருந்து முதலியன (மருந்தீட்டிற்கு) | 143 |
| 104 | முஸல்யாதி நெய் | 52 |
| 105 | ரஸ பஸ்பம் | 118 |
| 106 | ராஜமிருகாங்க ரஸம் | 54 |
| 107 | ராஜமிருகாங்க ரஸம் | 55 |
| 108 | ராஜமிருகாங்க ரஸம் | 80 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 109 | வல்லாதகீ ரஸாயனம் | 90 |
| 110 | வல்லாரை நெய் | 36 |
| 111 | வாஸாதி கிருதம் | 31 |
| 112 | (வாஸாதி) நெய் (சுவாசகாசம், ஈளை, இருமலுக்கு) | 153 |
| 113 | வாஸாதி லேகியம் | 60 |
| 114 | வாழைப்பழ மருந்து | 114 |
| 115 | (வெள்ளறுகு) சூரணம் (மருந்தீட்டிற்கு) | 151 |
| 116 | வெள்ளி பற்பம், செந்தூரம் | 42 |
| 117 | வேங்கைப்பிட்டு | 16 |
| 118 | (வேங்கை) நெய் (உளமாந்தை, க்ஷயரோகம், பல நசலுக்கும்) | 27 |
| 119 | ஹரீதகீ லேகியம் | 34 |


...ARCHIVES...
No. 101484

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 25 | சுத்திசெய்து தாளகம் | சுத்திசெய்த தாளகம் |
| 20 | 21 | வெருகிலையொவ் | வெருக்கிலையொவ் |
| 21 | 17 | பசுவின்பால் 16 படியுடன் | பசுவின்பால் 4 படியுடன் |
| 34 | 24 | கடுக்காய்த்தோல் 2 பலம் | கடுக்காய்த்தோல் 21 பலம் |
| 45 | 18 | 18-வது வரியில் பிரண்டையைச் சேர்த்துக் கொள்ளவும். | |
| 57 | 20 | கல்வத்திலிட்டுப் பசுவின் | கல்வத்திலிட்டுத் தலையீற்றுப் பசுவின் |
| 62 | 16 | கயரோகத்திற்கு நெய் | கயரோகத்திற்கு எண்ணெய் |
| 63 | 20 | பசுவின் பால் | நத்தைச்சாறு? |
| 65 | 1 | கிளரில்வம் | கிளர்வில்வம் |
| 66 | 26 | 26வது வரியில் "ஓரிலைத் தாமரையைச்" சேர்க்கவும். | |
| 73 | 14 | சிற்றிரத்தை | சிற்றரத்தை |
| 76 | 24 | திரியிலைசந் | திரிபலைசந் |
| 78 | 25 | சின்னப்படி ஒன்றும் | சின்னப்படி நான்கும் |
| 84 | | 31வது வரியாக "ஆமணக்கெண்ணெய் ஒருபடி" என்பதைச் சேர்த்துக்கொள்ளவும். | |
| 106 | 18 | [illegible]ரிக்கவும் | இறக்கவும் |
| 109 | | 8வது வரிக்குப் பின்னர் சிற்றரத்தை, கடுகாய், நெல்லிக்காய், தான்றிக்காய், தாளகம் என்ற சரக்குகளையும் கூட்டிக்கொள்ளவும். | |
| 119 | 20 | 3 ⅓ அளவெடுத்து | 3 ⅛ குன்றியளவெடுத்து |
| 128 | 8 | சேர்த்துக்குழம்பாக்கி | சேர்த்து அடுப்பின்மேல் வைத்துக் குழம்பாக்கி |
| 140 | 13 | திவற்றவைத்துக் | துவற்றவைத்துக் |
| 160 | 9 | நிலக்குமிழி எண்ணெய் | நிலக்குமிழ் எண்ணெய் |
| 161 | 2 | 88 (a) "மதனகாமேச்வரம்—124" என்ற மருந்தையும் சேர்த்துக்கொள்ளவும். | |